# பிரியங்களுடன் நானே

**பிரியமான நீயே,**

இன்று நிச்சயம் நான் இருப்பேன் உன் அருகினிலே
உன் மூச்சுக் காற்று என் இதழ்களில்
இடறும் அருகினிலே
உன் செவியணிகள் என் மார்போடு
சேதி பேசும் அருகினிலே
தவறாமல் நீ கனவுக்கு வந்து விடு

**பிரியங்களுடன் நானே.**

## 1

விடிந்து கொண்டிருந்தது.

இன்னும் நிலா இருந்தது. ஊர் திரும்பிப் போய்விட்ட நட்சத்திரக் கூட்டங்களில் வழி தவறியவை மட்டும் விழித்துக் கொண்டிருந்தன. கொஞ்சமாய் எட்டிப் பார்த்தது சூரியக் குழந்தை. நீர் நிலைகள் தத்தளித்து தகதகத்தன. சேவல்கள் கொண்டை சிலிர்த்தன. தென்னை ஓலைகள் பச்சை நிறத்துக்கு வராமல் கறுப்பாய் பிசிறடித்தன. ப்ளூ பிரிண்ட் போடாமல் தாங்கள் கட்டும் வீடுகளுக்கு சுள்ளி சுமக்கப் பயணப்பட்டுக் கொண்டிருந்தன பறவைகள்.

தடக்... தடக்... தடக்... தடக்...

விழிப்பு ஏற்பட்ட உடனேயே சுப்புவிற்கு ராத்திரி தோன்றிய சந்தேகம் மறுபடியும் தோன்றியது.

பஸ்சில் செய்வது மாதிரி இதிலேயும் டிரைவர் ஸ்டியரிங்கைப் பிடித்து தண்டவாளத்தின் வளைவுக்குத் தக்கபடி திருப்ப வேண்டுமா, இல்லை தானாகவே ரயில் வளைந்து கொள்ளுமா?

எழுந்து உட்கார்ந்து ''அம்மா'' என்றான்.

அம்மா ஏர்-பில்லோவை முழங் கைகளால் அமுக்கி காற்று நீக்கிக் கொண்டிருந்தாள். தலை கலைந்திருந்தாள். முகத்தில் எண்ணெய். புடவை கசங்கியிருந்தது. மடியில் அசௌகரியமாக பெண் குழந்தை உறங்கிக் கொண்டிருந்தது.

''என்ன சுப்பு எழுந்திரிச்சிட்டியா?'' என்றாள்.

அதற்குள் புவனா அசையவே...

''புவனா, முழிச்சிட்டியா? ஹைய்!''

''சுப்பு, அவளை எழுப்பாதே, தூங்கட்டும்.''

''அப்பா எங்கேம்மா?''

''இதோ வந்துட்டாரே.''

அப்பா தோளில் துண்டோடு வந்து உட்கார்ந்தார். முகம் ஈரமாயிருந்தது. நெற்றியில் ஆரம்பித்துத் துடைத்துக் கொண்டார்.

''கூட்டமில்லை சரோஜா, இப்ப பாத்ரூம் காலியா இருக்கு. நீ போய்ட்டு வந்துடு.''

அம்மா எழுந்து குழந்தையின் தலையை ஜாக்கிரதையாக அப்பாவின் தொடை மேல் வைத்து விட்டு, சோப்புப் பெட்டி எடுத்துக் கொண்டு சென்றாள்.

''சுப்பு, டவுசர் பட்டனை ஒழுங்கா போட்டுக்கோ. பார், அவுந்திருக்கு'' என்றார் அப்பா.

போட்டுக் கொண்டான் சுப்பு. மறுபடி தன் சந்தேகம் நினைவுக்கு வந்தது. ஆனால் அப்பாவிடம் கேட்க இஷ்டமில்லை. சிடுசிடுப்பார். பொறுமையாய்ச் சொல்ல மாட்டார். அம்மாவிடம் அப்புறம் கேட்டுக்கலாம் என்று ஜன்னல் வழியாகப் பார்க்கத் தொடங்கினான்.



நிலங்களில் வெளிச்சம் சற்று அதிகரித்திருந்தது. மரங்கள் தூரத்தில் மௌனமாய் ஜன்னலை விட்டு வெளியேறின. இந்தப் பக்கம் புது மரங்கள் நுழைந்தன. கிணறுகளில் ஏற்றம் வேலை செய்யும் காட்சி தப்பி விட்டது. இரண்டு ஆட்டுக்குட்டிகள் தாவி மேட்டில் ஏறின. சுப்பு தலையை நீட்டிப் பார்த்தபோது புள்ளி, புள்ளி ஆகின.

''தலையை வெளியே நீட்டாதே சுப்பு.''

''சரி, திருச்சி வர்றதுக்கு எவ்வளவு நேரமாகும்ப்பா?''

அப்பாவுக்குத் தெரியவில்லை.

''இப்ப வந்திடும். போய் அம்மாகிட்டே பல்பொடி வாங்கி பல் தேய்ச்சுக் கிட்டு வா. தலை சீவி விடறேன்.''

''என் இடத்திலே யாரும் உட்காரக் கூடாது'' என்று கண்டிஷன் போட்டுவிட்டு சுப்பு எழுந்து கம்பார்ட்மெண்ட் கடைசிக்கு நடந்தான்.

பாத்ரூம் கதவில் தட்டி ''அம்மா'' என்றான். உள்ளே தாழிடப்பட்டிருந்தது. ரயிலின் சத்தத்தில் அவனுக்கே கேட்கவில்லை. காத்திருந்தான். காலுக்குக் கீழே நெருப்புக்குச்சி நெருடியது.

''உன் பேரென்ன?'' என்றார் அருகாமை பெஞ்ச் தாத்தா.

''சுப்பிரமணியன்''

''கதவுப் பக்கம் நிக்காதே. இப்படி வந்து உக்காரு. அம்மா வரட்டும்.''

வந்து அவர் அருகில் அமர்ந்து கொண்டான். தாத்தாவுக்குப் பக்கத்தில் ஒரு நடுத்தர வயது தம்பதிகள். எதிரே ஒருவர் புதுப் பேப்பரை விரித்திருக்க. பக்கத்திலிருந்தவர் கண்ணுக்குத் தெரிந்த வரை படித்துக் கொண்டிருந்தார்.

எதிர்வரிசையில் ஜன்னல் ஓரத்தில் அமர்ந்திருந்தவன் ஒரு இளைஞன். உறங்கிக் கொண்டிருந்தான். தலையில் கைக்குட்டையை முடிச்சுப் போட்டு முடி பறக்காமல் கட்டியிருந்தான். மூன்று சட்டை பட்டன்கள் கழன்றிருந்தன.

சுப்புவிற்கு தானும் ஒரு கர்ச்சீப் எடுத்து அது மாதிரி கட்டிக் கொள்ள வேண்டும் போல் ஆசையாய் இருந்தது.

''எந்த ஊரு?'' என்றார் தாத்தா.

''திருச்சி எப்போ வரும்?''

''இப்போ போனது தொண்டமான் பட்டி. அடுத்தது திருவெறும்பூர். எப்படியும் ஒரு மணி நேரத்திலே போய்டும். என்ன பண்றார் உங்கப்பா?''

''சரியா சொல்ல வராது எனக்கு. உடம்பு சரியில்லாதவங்களுக்கு படம் எடுத்துக் கொடுப்பாரு கறுப்பா.''

''எக்ஸ்ரே கிளினிக் வச்சிருக்காரா?''

தலையாட்டினான். இப்போது அந்த இளைஞன் விழித்துக் கொண்டான். கண்கள் சிவந்திருந்தன. அவசரமாக இமைகளை உதறிக் கொண்டான். தலையிலிருந்து கர்ச்சிப்பை அவிழ்த்து அழுத்தமாய் முகத்தைத் துடைத்துக் கொண்டான். உடன் பாத்ரூம் நோக்கி நடந்தான்.

''எங்கம்மா இருக்காங்க சார் உள்ளே.''

சுப்புவின் கன்னத்தில் தட்டி விட்டு நின்றான். ஒரு காலை மடக்கி ரயிலின் கதவில் உதைத்துக் கொண்டு நின்று சிகரெட் பெட்டி எடுத்து சிகரெட் எடுத்தான்.

அவன் வீசின காலிப் பெட்டியை குனிந்து பொறுக்கிக் கொண்டு அதில் இருந்த பெயரை எழுத்துக் கூட்டினான் சுப்பு.

''டி...ஹெ...ச்...யு...என்...''

இதற்குள் அம்மா வந்து விட்டாள். வெளியே - முகமெல்லாம் நனைந்து, பொட்டு இல்லாமல், காதோரத்தில் துளி சோப்பு நுரையோடு.

''சுப்பு, என்ன இங்கே உக்காந்திருக்கே?''

''அப்பா பல் விளக்கிட்டு வரச் சொன்னாரு. வந்தேன். நீதான் பூட்டிக்கிட்டியே...''

''வேற ஆள் உள்ளே போய்ட்டாங்க. வா. கொஞ்சம் கழிச்சு வரலாம். இதென்ன சிகரெட் பெட்டியெல்லாம் பொறுக்கிக்கிட்டு... கீழே போடு.''



''அழகா தங்கம் மாதிரி இருக்கும்மா. குச்சி போட்டு வச்சிக்கிறனே.''

தங்கள் பகுதிக்கு வந்ததும் அம்மா பவுடர் பூசி, பொட்டு வைத்துக் கொண்டாள். ராத்திரி எடுத்து வைத்த பூவை எடுத்துக் கொண்டாள். வலைக்கூடையிலிருந்து அமுல் டின்னை எடுத்து புவனாவுக்கு பால் கரைக்க ஆரம்பித்தாள்.

ஜன்னலுக்கு வெளியே... ஆஸ்பெட்டாஸ் டாப் போட்ட சின்ன, பெரிய இண்டஸ்ட்ரிகள் தெரிந்தன. காக்கி, காக்கியாய் தொழிலாளர்கள் கடைசி ஷிப்ட்டில் வெல்ட் வைத்துக் கொண்டிருந்தார்கள்.

''யய்! யய்யய்யே. இங்கே பாரு. இங்கே குழந்தையைப் பாரு. பிடி இவளை'' என்று புவனாவை மூக்கைச் சுளித்துக் கொண்டு தூக்கிப் பிடித்தார் அப்பா.

சுப்புவுக்கு இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் புவனாவையும் பிடிக்காது. கை, கால்களில் அவள் அப்பிக் கொண்டதை அம்மா துடைப்பதைப் பார்க்கவும் பிடிக்காது.

அம்மா குழந்தையை வாங்கிக் கொண்டதும், அப்பா பாதிப்புக்கு உட்பட்ட வேஷ்டியின்பகுதியைத் தூக்கிப் பிடித்தபடி பாத்ரூமுக்கு நடக்க...

''அப்பா கூடப் போய் பல்லு விளக்கிட்டு வந்துடறேன்ம்மா'' என்று பின்னால் ஓடினான்.

அப்பா பாத்ரூமுக்குள் நுழைந்ததும், உள்ளே போய், ''அப்பா பல்லு'' என்றான்.

''இர்றா. வெளியிலே நில்டா. நான் முதல்ல அலம்பிக்கிறேன்.''

வெளியே வந்து நின்றான் சுப்பு.

அந்த இளைஞன் நின்று கொண்டு, லக்கேஜ் வைக்கும் பலகை மேலிருந்த அவன் சூட்கேஸை சாவி போட்டுத் திறந்து கொண்டிருந்தான்.

இப்போது திடீரென்று ரயில் வேகமாய்க் குலுங்கி கரகரவென்று வெட்டி படக் என்று நின்று விட... சுப்பு நிலை தடுமாறி சப்பென்று தரையில் உட்கார்ந்து விட்டான். அந்த இளைஞனின் சூட்கேஸ் தலைகுப்புறக் கவிழ்ந்து விழுந்தது.

சட்டை, பேண்டுகளும் புஸ்தகங்களும் சிதறின. அவன் ஒவ்வொன்றாய் எடுத்து பழையபடி அடுக்கினான். பாண்ட்ஸ் பவுடர் டப்பா உருண்டு சுப்புவின் அருகில் வந்திருந்தது. எடுத்துச் சென்று அவனிடம் நீட்டினான்.

''தாங்க்ஸ்'' என்றான். தன் பழைய சட்டையைக் கழற்றி விட்டு, புதிய சட்டை ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டான். அதில் பாக்கெட் பகுதியில் 'smart' என்று இருந்தது.

''அதுதான் உங்க பேரா?''

''இல்லை. என் பேரு விஜி.''

''அய்யய்யே, பொம்பளை பேரு.''

''சுப்பு... டேய் சுப்பு எங்கடா போய்ட்டே?'' என்றார் அப்பா.

சுப்பு பாத்ரூம் ஓடிப் போனான். பல் விளக்கி விட்டு வந்த போது புவனா வேறு சட்டை, ஜட்டி போட்டுக் கொண்டு, முகமெல்லாம் திப்பி திப்பியாய் பவுடருடன் பாட்டிலில் பால் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். கொஞ்ச நேரம் கழித்து, ''சுப்பு, திருச்சி வந்திருச்சிடா'' என்று அப்பா சொன்ன போது, அவனுக்கு இன்னும் கொஞ்ச தூரம் ரயிலில் போய்க் கொண்டிருக்க வேண்டும் போல் இருந்தது.

ரயில் நின்றது.

''ரெண்டு சூட்கேஸ், ஒரு ஹாண்ட் பாக், ஒரு கூடை, அவ்வளவுதானே?'' என்றார் அப்பா.

''அவ்வளவுதான். கொஞ்சம் இவளைப் பிடிங்க. செருப்பைத் தேடிப் போட்டுக்கறேன்.''

அம்மாவுக்கு உடனடியாய் ஒரு செருப்புதான் கிடைத்தது.

''இன்னொரு செருப்பு அந்தப் பக்கம் கிடக்குதா பாருங்க.''

''கையிலே குழந்தையை வச்சிக்கிட்டு எப்படிக் குனியறது? சுப்பு, கீழே குனிஞ்சு பாருடா. அடியிலே நகர்ந்து போயிருக்கும். எடுத்துக் கொடு.''

சுப்பு குனிந்து பார்த்தான். கைக்கு எட்டாமல் சற்றுத் தொலைவில் கிடந்தது. உள்ளே நாலு காலில் நுழைந்து செருப்பை எடுத்தான்.



எடுத்தபோது, இன்னும் சற்றுத் தள்ளி ஒரு புத்தகம் கிடப்பதைக் கண்டான். சற்று ஊர்ந்து அதையும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

''அதென்னடா செருப்போட வேற என்னமோ எடுக்கறே?''

''புஸ்தகம்ப்பா. கிடந்தது. அய்யய்யோ... பாவம் அவரு'' என்று பாத்ரூம் பக்கம் ஓடிப் போய் விட்டுத் திரும்பி வந்தான். ''அவரைக் காணோம்'' என்றான்.

''யாருடா இது?''

''மொதல்ல ரயில் டக்குன்னு நின்னுச்சில்லே... அப்போ ஒருத்தர் சூட்கேஸ் கீழே விழுந்து சாமான் எல்லாம் கொட்டிப் போச்சு. நிறையப் புஸ்தகம் எல்லாம் வச்சிருந்தாரு. அதுல ஒரு புஸ்தகம் தள்ளி விழுந்துடுச்சு. அய்யோ பாவம் அவரு.''

''இங்கே கொண்டா, என்ன புஸ்தகம்னு பார்க்கலாம்.''

வாங்கிப் பார்த்தார் அப்பா.

'Of course I love you' - என்கிற ஆங்கிலக் கவிதைகளின் தொகுப்புப் புத்தகம் அது.

அட்டையில் சிகப்பு சிகப்பாக சின்ன, பெரிய புள்ளிகளாய் வர்ணம் தெளித்தாற் போலிருந்தது.

''அதென்னங்க... அட்டை மேல சாந்து கொட்டின மாதிரி?''

அப்பா புருவம் சுளித்தார். பாக்கெட்டில் இருந்து கண்ணாடியை எடுத்துப் போட்டுக் கொண்டார்.

அந்தப் பொட்டு பொட்டாய் விழுந்திருந்த சிகப்பு வட்டச் சிதறல்களைத் தடவினார்.

''மை காட், இது சாந்து இல்லை. ஹியூமன் ப்ளட்! உறைஞ்சுபோன ரத்தம்டி'' என்றார்.

**பிரியமான நீயே**

அருவிகளின் அருகில் நடக்கையில் எல்லாம்
திரும்பித் திரும்பிப் பார்த்தேன் - நீ வருகிறாயா என்று.
அப்புறம்தான் உணர்ந்தேன்
அது சிரிப்பல்ல; நீரின் ஓசை என்று.

**பிரியங்களுடன் நானே**

## 2

எந்த பேப்பர் வாங்கலாம் என்று சற்று யோசித்தான். தீர்மானத்திற்கு வந்து, ''தினத்தந்தி கொடுங்க'' என்றான்.

சூட்கேஸை கால்களுக்கிடையில் கீழே வைத்து விட்டு, பேப்பரை வாங்கி பரபரப்பாய், பக்கம் பக்கமாய் புரட்டினான். மறுபடி முதல் பக்கத்திலிருந்து நிதானமாய் ஒரு தரம் பார்த்தான்.

கருத்துப்படம் - கொட்டை கொட்டையாய் 'இந்திரா காந்தி வெளிநாடு பயணம்' - சட்டசபையில் கூச்சல் குழப்பம் - கன்னித் தன்மை பொருந்திய தீவு - வரி விளம்பரங்கள் காலண்டர் கேன்வாஸ் செய்ய ஆள் தேவை - பழனி, எஸ்.காளிமுத்து - பூடான் லாட்டரி முடிவுகள் - திரைவானில் - கார்த்திக், ராதா ஜோடிக்கு 'குளிர் விட்டுப் போயிற்றோ' - நீடா மங்கலத்தில் பாரதி விழா - கைத்தறிக் கண்காட்சியை அமைச்சர் திறந்து வைத்தார் - காதலி கொலை; கள்ளக் காதல் எதிரொலி - கைதான் ஃபேன் வாங்குங்கள் - பாலசந்தரின் 'அக்னி சாட்சி' - பிரிண்டட் அட்....

அவன் தேடிய செய்தி இல்லை.

பேப்பரை மடக்கிக் கொண்டு...

''உங்ககிட்டே டன்ஹில் சிகரெட் இருக்குமா?'' என்றான்.

''இல்லை சார். சார்மினார் தரட்டா?''

''டன்ஹில் எங்கே கிடைக்கும்?''

''ஜெயா ஹோட்டல் வாசல்ல ஒரு கடையிலே இருக்கு.''



நடந்தான். சாலையின் ராத்திரி மௌனம் கிழிக்கப்பட்டிருந்தது. வச வச என்று மனிதர்கள், கர்ப்பிணிகளாய் டவுன் பஸ்கள், பிளாஸ்டிக் வாளி விற்க வரிசையாய் ஆறு கடைகள். வாசலில் பையன்கள், அந்தப் பக்கமாய் நடக்கிறவர்களையெல்லாம் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தார்கள்.

பாரத் ஃபார்மஸியைப் பார்த்தவுடன் நின்றான் விஜயராகவன். உள்ளே சென்று ''கடுமையா தலை வலிக்குது. உடனடியா ரிலீஃப் கிடைக்கிற மாதிரி ஏதாச்சும் கொடுங்களேன்'' என்றான்.

கடைக்காரன் இரண்டு டம்ளர்களில் நீர் வைத்துக் கொண்டு ''இதோ பாருங்க சார். இது சக்தி வாய்ந்த மாத்திரை. இது சாதாரண மாத்திரை. இரண்டு செயல்திறன்களையும் பார்க்கலாமா?'' என்றெல்லாம் செய்யவில்லை.

நீட்டப்பட்ட மாத்திரையை வாங்கிக் கொண்டு, பணம் தந்து விட்டு, ''ஒரு லோக்கல் டெலிபோன் பண்ணிக்கலாமா சார்?''

''எழுபத்தஞ்சு காசு.''

''தர்றேன்.''

''நம்பர் சொல்லுங்க.''

சொன்னான். அவன் சுழற்றி விட்டு ரிசீவரை இவனிடம் தந்தான்.

''ஹலோ, ரவி இருக்கானா?''

''இல்லையே. டென்னிஸ் விளையாடப் போயிருக்கான். நீங்க யாரு.''

''என் குரல் தெரியலையாம்மா? விஜி பேசறேன்.''

''ஒரு வருஷத்துக்கு மேல ஆச்சு உன்னைப் பாத்து. எப்ப வந்தே இருச்சி?''

''இப்பத்தான். கால் மணி நேரமாச்சு. இன்னும் அரை மணி நேரத்திலே வீட்டுக்கு வர்றேன். பசிக்குது. டிபன் வேணும்.''

''வாப்பா. ரெடியா இருக்கு.''

''ஒரு ஹெல்ப் பண்ணுங்கம்மா. டெலிபோன் பக்கத்திலே நீளமா ஒரு கார்டு இருக்கும். அதிலே கிளப் போன் நம்பர் குறிச்சு வச்சிருப்பான். எனக்கு மறந்து போச்சு. கொஞ்சம் பார்த்து சொல்லுங்களேன்.''

பார்த்துச் சொல்ல... குறித்துக் கொண்டான்.

''தாங்க்ஸ்ம்மா... நேரல வர்றேன்'' என்று லைனைக் கட் செய்து விட்டு, ''சார் இன்னொரு லோக்கல்'' என்று நம்பர் சொன்னான்.

ரிங் போய்க் கொண்டேயிருந்தது. எடுக்க ஆளில்லை. எழுபத்தைந்து காசு கொடுத்து விட்டுக் கிளம்பினான். கை தட்டி ஆட்டோ அழைத்தான்.

''ஈஸ்ட் அம்பிகாபுரம் போகணும். வர்றியா?''

''எங்கே இருக்கு அது?''

''எஸ்.ஐ.டி.காலேஜுக்கு எதிரே.''

''ரோட்லையே இறங்கிக்கிறீங்களா, உள்ளே போகணுமா?''

''உள்ளேதான். ரொம்ப தூரமில்லை. என்ன கேக்கறே?''

அவன் கேட்டு... இவன் குறைத்து... ஆட்டோ ஓடியது.

''ஜெயா ஹோட்டல் வாசல்ல ஒரு நிமிஷம் நிப்பாட்டு.''

நின்று... கிளம்பி... ஆட்டோ ஓடியது.

சௌகரியமாக சீட்டில் சாய்ந்து கொண்டு சிகரெட்டைக் கொளுத்திக் கொண்டான் விஜயராகவன். ஒவ்வொரு விரலாய் சொடக்கு எடுத்தான்.

எஸ்.ஐ.டி.காலேஜ் வந்து டிரைவர் தயங்க...

''அதோ பாரு, கோல்டன் ராக் போறதுக்கு அம்புக்குறி போட்டு பலகை நிக்கிதே, அந்த சப் ரோட்டிலே போ.''

பாதையின் ஓரமாக கட்டம், கட்டமாய் இரும்புத் துண்டுகளில் கட்டிய முள் வேலியும் கூட ஓடி வந்தது. அங்கேயும் இங்கேயும் சின்ன தொழிற்கூடங்களின் சிம்னிகள் காபி நிறத்தில் புகை தள்ளி காற்றைக் கற்பழித்துக் கொண்டிருந்தன. நிறைய ஹாரன் அடித்த பின் எருமை மாடு விலகியது.

''அதோ டிஸ்டெம்பர் அடிச்சு, வாசல்ல பால்காரன் பால் கொடுத்துட்டிருக்கானே, அந்த வீடு.''

நின்றதும், இறங்கி டிரைவருக்கு காசு கொடுத்தான்.

''வாங்க அய்யா'' என்றாள் மல்லிகா.



''நல்லா இருக்கியா? ரவி இன்னும் கிளப்லேர்ந்து வரலையா?''

''இல்லைங்கய்யா'' என்று அவள் பாலோடு நடக்க, இவன் உள்ளே நுழைந்து சின்ன இரும்பு கிராதி கேட்டை மூடி கொக்கி போட்டான்.

நவீனமான, கச்சிதமான வீடு. வாசலில் பள பள என்று துடைக்கப்பட்ட புல்லட். முதலில் மிதியடி வரவேற்க, உள்ளே வந்ததும் ரவியின் அம்மா வரவேற்றாள்.

''வாப்பா விஜி, அதென்ன போன் பண்ணிட்டுத்தான் வரணுமா? நேரா வீட்டுக்கு வந்தா, பாத்திரம் எல்லாம் காலியாவா இருக்கும்?''

''அதுக்கில்லைம்மா. ரவி கூட பேசிடலாம்னுதான் பண்ணேன்.''

''கிளப்புக்கு போன் பண்ணி பேசிட்டியா?''

''போன் பண்ணேன். எடுக்க ஆளில்லை?''

''மணி என்ன ஆகுது?''

''ஏழாகப் போகுது. இன்னும் அஞ்சு நிமிஷம் இருக்கு.''

''ஏழு மணிக்கெல்லாம் வந்துடுவான்; அதுக்குள்ளே குளிச்சிட்டு வந்துடேன்.''

''சரிம்மா.''

சூட்கேஸை எடுத்துக் கொண்டு ஹாலின் ஓரத்தில் புறப்பட்ட படிகளில் ஏறி மாடியில் ரவியின் அறைக்கு வந்தான் விஜி. அந்த வீட்டில் அவனுக்கு பரிபூரண சுதந்திரம் உண்டு.

ரவி அறையை அதிக சுத்தமாயும் வைத்திருக்காமல், ஒரே அலங்கோலமாயும் இல்லாமல் மையமாய் வைத்திருந்தான். கட்டிலின் மேல் போர்வை சரிந்திருந்தது. புத்தக ஷெல்ஃபில் புத்தகங்கள் கொத்து கொத்தாய் கும்பலாய்க் கிடந்தன.

பாத்ரூம் சென்று வெது வெதுப்பாய்க் குளித்து விட்டு வந்தான் விஜி. டிரஸ்ஸிங் டேபிள் முன் அமர்ந்து தலை சீவிக் கொண்டு, அருகில் இருந்த டேப் ரிக்கார்டரை இழுத்து இயக்கினான்.

''நான் எண்ணத்திலே வரம்பு மீறியிருக்கலாம். ஆனா செயல்ல இல்லை. நான் அடைய விரும்புறது உங்களை - உங்க மனசை. உங்க உடம்புதான் என் நோக்கமா இருந்தா இந்த கதவு, சுவரு எல்லாமே என்னை ஒண்ணும் பண்ண முடியாது. ஜஸ்ட் லைக் தட்...

அடைஞ்சிடுவேன். கதவைச் சாத்தினது என்னை இன்சல்ட் பண்ற மாதிரி இருக்கு...'' என்றார் கமலஹாசன்.

ஆஃப் செய்து விட்டு கட்டிலில் அமர்ந்தான். இரண்டு தலையணைகளை முதுகுக்குப் பின்னால் வைத்துக் கொண்டு சாய்ந்து கொண்டான். கண்களை மூடிக் கொண்டான் விஜி. யோசித்தான்.

நடந்தது என்ன?

அது ஒரு செயல். செய்தவன் யார்? நானா?

என் மூளை ஒத்துழைத்ததா?

இல்லை.

என் ஆறாவது அறிவு ஒப்புக் கொண்டதா?

இல்லை.

எனக்கும் நிகழ்ந்தது எது?

அது ஒரு விபத்து.

காய்கறி வாங்க பை எடுத்துக் கொண்டு பாதையோரமாய் சென்ற பத்மினி பின்னாலிருந்து லாரி ஏறி, முன் மண்டை திறந்து உடலும் கற்பனைகளும் சிதையச் சாவது விபத்து.

குளிக்க ஆற்றுக்குப் போன கமலா காலையிருட்டில் அறியாமல் வாலை மிதித்த காரணத்தால் பாம்பால் தீண்டப்பட்டு, நீலம் பாரித்து, நுரை தள்ளிச் சாவது விபத்து.

கட்டி முடியாத கட்டிட உச்சியிலிருந்து கீழே எட்டிப் பார்த்த கல்பனா, காலுக்குக் கீழே சிறு கல் பெயர்ந்து, பாவாடை விரிய, கால்கள் மேலாய், நேர் கோட்டில் புவியீர்ப்பு விதிப்படி விழுந்து சிதிலமாவது விபத்து.

அது?

அதுவும் ஒரு விபத்து.

''விஜி. சாப்பிட வர்றியா? டிஃப்பன் ரெடி'' என்று ரவியின் அம்மா கீழேயிருந்து அழைக்க... கண்களைத் திறந்தான் விஜி.

''ரவி வந்திடட்டும். சேர்ந்து சாப்பிடறோம்'' என்று சொல்லி விட்டு எழுந்து புத்தக ஷெல்ஃபிற்கு வந்தான். புரட்டினான். கைக்கு



அகப்பட்ட புத்தகத்தை எடுத்தான். சம்பந்தமில்லாமல் 202ம் பக்கம் திருப்பி கொஞ்சம் வாசித்தான். மூடினான். வைத்தான்.

''ஹலோ விஜி, வெல்கம்'' என்று வந்து அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான் ரவி. கையில் டென்னிஸ் ராக்கெட், வெள்ளை பனியனில் 'I am sportive'. கிருதா ஓரத்தில் வியர்வை வழிந்து கொண்டிருந்தது. சாக்ஸிலும், ஷூவிலும் செம்மண் சிகப்பளித்திருந்தது.

''எப்படா வந்தே? எப்படி இருக்கே?''

''அரை மணியாச்சு ரவி.''

''உட்காரு இப்படி. ஏன் நாலுமாசமா தபாலே இல்லை?''

''டைமில்லை ரவி. மொதல்ல குளிச்சிட்டு வா. நாம பேசலாம்.''

''பேசலாம். நிறைய பேசலாம். வெய்ட். இதோ வந்துடறேன்.''

ரவி குளித்து விட்டு வந்து...

''அம்மா வெய்ட் பண்றாங்க. வா, மொதல்ல டிஃப்பன்..''

டிஃப்பன் சாப்பிட்ட பிறகு...

மறுபடி அறைக்கு வந்து அமர்ந்தார்கள்.

''டன்ஹில் வெச்சிருப்பியே, கொண்டா'' என்று வாங்கி புகைத்துக் கொண்டான் ரவி. ''விஜி, உனக்காக லைட்டர் ஒண்ணு வாங்கினேன் ஒரு மாசம் முன்னாடி. எங்கே வச்சேன்? இரு... எடுத்துக்கிட்டு வர்றேன்'' என்று எழுந்தான்.

''அதெல்லாம் அப்புறமா எடுக்கலாம் ரவி. சம்திங் சீரியஸ் நான் சொல்லப்போறது'' என்றான் விஜி.

''நான் என்ன செய்யணும்? முகத்தை உர்ர்ன்னு வச்சுக்கணுமா?''

''டோண்ட் ஜோக்! சீரியஸ்னு சொல்றேனில்லை?''

''என்ன... என்ன... ஏன் இப்படி பதட்டப்படறே? இப்போ உன்னைப் பார்த்தா, என்னவோ போன நிமிஷம் கொலை பண்ணிட்டு, தப்பிச்சு ஓடியாந்தவன் மாதிரி இருக்கே...''

''ஆமாம் ரவி. நேத்து நான் ஒரு கொலை செஞ்சிட்டேன்'' என்றான் விஜி.

**பிரியமான நீயே,**

துலக்கும் பேஸ்ட்டின் பெயரில், உன் பெயரில்
வரும் ஒரே ஒரு ஆங்கில எழுத்து வந்தால் கூட
மனம் விசிலடிக்கிறது

கதைகளில் நாயகியின் பெயராய் நீ வரும்போது
முகமில்லா அந்த நாயகர் மீது எல்லையில்லா எரிச்சல்கள்.

**பிரியங்களுடன் நானே.**

## 3

''கீதையில் கண்ண பரமாத்மா என்ன சொல்றார்? கடமையைச் செய். பலனை எதிர்பார்க்காதே. இன்னிக்கு லோகம் எப்படி போயிட்டிருக்கு? பலனைப் பார். உன் எதிர்பார்ப்பிற்கு இருந்தால் கடமையை செய். லோகம் ஏன் இப்படி மாறிப்போச்சு? இதுக்கு யார் காரணகர்த்தா? வெண்ணெய் விரும்பி கண்ணனா? இல்லை இந்த திருமாலா? யாரு காரணம்? ஒரு சின்ன கதை சொல்றேன். கதை சொல்றேன்னு சொன்னதும் நிமிர்ந்து உட்கார்றியே, உன் பேர் என்ன?''

''ஆறுமுகம்.''

''கந்தனின் பேர். எங்கே சொல்லு பார்க்கலாம். முருகனுக்கு திருத்தலங்கள் எத்தனை?''

''ஆறு.''

''இந்த புஸ்தகம், தினம் ரெண்டு தடவை படிக்கணும். என்ன? ஒரு ஊரில் ஒரு துறவி இருந்தார். அவருக்கு ஒரு சிஷ்யன். அந்த துறவி ஸ்படிகமணி மாலை ஒண்ணு வச்சிருந்தார். ஸ்படிகமணி மாலை என்ன தரும்? யாருக்குத் தெரியும்? சொல்லுங்க பார்க்கலாம். சாம்ராஜ்யம் தரும். பவள மாலை? எல்லா உலகையும் வசியப்படுத்தும். நெல்லிக்கனி மாலை மோட்சம் தரும். நவரத்தின மாலை பகைவர்க்கு பயம். ருத்திராட்ச மாலை விருப்பங்களை பூர்த்தி செய்யும். நம்ம துறவி வச்சிருந்தது என்ன மாலை? ஸ்படிக மாலை...''

காலட்சேபம் தொடர்ந்து கொண்டிருந்தது.



அங்கங்கே நடப்பட்டிருந்த ட்யூப் லைட்களை கொசுக்கள் கொஞ்சிக் கொண்டிருந்தன.

சற்றுத் தள்ளி அமர்ந்திருந்தவரிடம் மணி கேட்டாள் மங்களம்.

''ஒண்ணே முக்கால் ஆச்சு.''

சரி, கேட்டது போதும் என்று முடிவெடுத்தாள்.

''மீனாட்சி, போலாமா? பொண்ணு தனியா இருப்பா. பாஸ்கர்ன்னு விவேக்கோட ஃப்ரெண்டு வேற ஒருத்தன் வந்திருக்கான். சாப்பாடு போட்டு, படுக்கையை எடுத்துப் போட்டுட்டு வந்தேன். இடி விழுந்தாலும் செவிட்டுக் கிழவி தன் பாட்டுக்குப் பாக்கு இடிச்சிக்கிட்டிருக்கும்.''

''இன்னும் கொஞ்ச நேரத்திலே முடிஞ்சிடுமே...''

''முடியாது. லேசில் முடியாது. எப்படி முடியும்? பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் பகை என்பது இன்றைக்கு, நேற்றா ஏற்பட்டது? அந்த போர் அவ்வளவு எளிதில் முடிந்து விடுமா? பத்தாம் நாள் யுத்தத்தில் பிதாமகர் பீஷ்மரை அர்ச்சுனன் வீழ்த்தினான்.''

''மீனாட்சி, அப்போ நீ இருந்து கேட்டுட்டு வா. நான் போறேன்.''

''சரி.''

மங்களம் கூட்டத்திலிருந்து எழுந்து, கால் வைக்க இடம் தேடி, இடம் தேடி வைத்து, யாரையும் மிதித்து விடாமல் வெளியே வந்து சாலையில் நடந்தாள்.

ஸ்பீக்கர்களில் பீஷ்மர் இறந்து கொண்டிருந்தார்.

அதற்காக அழுகை துவக்கம் போல் ஒரு துளி வானத்தில் புறப்பட்டு கையில் விழ... 'அடடா குடை எடுக்கவில்லையே' என சலித்து, விரைவாய் நடந்தாள்.

பெயரில் இருக்கும் மங்களம் அவளுக்கு நெற்றியில் இல்லை. வயல், வாடகைக்கு விட நாலு வீடுகள், பாங்கில் கணிசமாய் பணம் என்று சில பல சொத்துகளை விட்டு விட்டு பதிலாக, தாலி, பூ, பொட்டு இவைகளை எடுத்துச் சென்றிருந்தார் விஜயசேகரன்.

மங்களத்தின் சுருக்கமான பயோடேட்டா;

44 வருடங்கள், 7 மாதங்கள். பிறந்தது இராமநாதபுரம், வாழ

வந்தது இந்த மயிலாடுதுறைக்கு. வாழ்ந்தது 10 வருடங்கள், 2 மாதங்கள், 27 நாட்கள். விளைவு... விவேக், சித்ரா.

தவக்களை, எலி வெட்டுகிற ஜூவாலஜி படித்த விவேகிற்கு சென்னை யுனிவர்சிடி ஆசை காட்டியது - அக்வாகல்ட்சர் கோர்சில் புதிதாய் டிப்ளமா கோர்ஸ் ஆரம்பித்து முடித்து விட்டால் உடனடியாய் நாலு இலக்க வேலை என்றது விளம்பர பேப்பர். ஆயிரம், ஆயிரம் அப்ளிகேஷன்களில் ரிடன் டெஸ்ட், இண்டர்வ்யு என்று கழித்துப் பொறுக்கிய பதினாலு பேரில் விவேக் ஒருவன்.

மங்களம் கதாகாலட்சேபம் முடிந்து வீட்டை நோக்கி நடக்கும் இந்த நேரத்தில் சென்னையில் ஹாஸ்ட்டலில் இருக்கிறான்.

சித்ரா வாழைக்கன்று மாதிரி சீக்கிரம் வளர்ந்து விட்டாள். புஸ்த்தகத்துக்குள் ஒரு புஸ்தகம் படிக்கிறாள். பள்ளிக்கூடம் விட்ட பின் வீடு வந்து, முகம் கழுவி, உடை மாற்றி ஜன்னலுக்கு வந்து நிற்கிறாள் கையில் புத்தகத்துடன். கண் புத்தகம் பக்கமே போவதில்லை. (''ஸ்... ஸ்ஸ்... இங்க வாயேன். நீ நல்ல பிள்ளைதானே? இந்த லெட்டரை அந்த மாமாகிட்டே கொடு. பத்து காசு தர்றேன்'') ராத்திரி தூக்கத்தில் நிறைய புரளுகிறாள்.

மங்களம் கதாகாலட்சேபம் முடிந்து வீட்டை நோக்கி நடக்கும் இந்த நேரத்தில் சித்ரா...

தன் வீட்டின் கதவில் தட்டுவதற்காக கை வைத்த மங்களத்திற்கு அதிர்ச்சியாய் இருந்தது - கதவு திறந்து கொண்டது.

கிழம்தான் முடியாத வயசு. இந்தப் பெண்ணுக்கென்ன? தாழ்ப்பாள் கூட போட்டுக் கொள்ளாமல்... கழுதை! கழுதை!

சின்ன ஹாலின் ஓரத்தில் பாய் மாதிரி சுருட்டிக் கொண்டு கிழவி படுத்திருந்தாள். சித்ராவின் அறைக்குள் நுழைந்து, சுவரில் தடவி சுவிட்சை போட்டுத் திரும்பிய மங்களம்...

**''சித்ரா!''** என்றலறினாள்.

''விஜி, நீ... நீ... ஜோக்கடிக்கலையே'' என்றான் ரவி. முக்கால்வாசி சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் திணித்தான்.

''இல்லை, ரவி இல்லை'' என்றான் விஜி. அவன் முகம் இன்ஸ்டண்ட்டாய் வியர்த்திருந்தது.



''ரிலாக்ஸ். அமைதியா சொல்லு விஜி. ஐ ஹோப், யு ஆர் நாட் டெல்லிங் யுவர் ட்ரீம்.''

''இல்லை ரவி, இல்லை'' என்றான் குரலை உயர்த்தி. நெற்றி ஓர நரம்புகள் மெல்ல அசைந்தன. பற்களை நெறித்தான்.

''கொலை! நீ செய்தே? இன்னும் என்னாலே இந்த வாக்கியத்தை அதோட சரியான அர்த்தத்தோட ஏத்துக்க முடியலை விஜி. நிதானமா சொல்லு. வாட் ஹேப்பன்ட்?''

''தெரியாது. எனக்கு ஒண்ணுமே தெரியாது. நான் செய்யலை. நான் செய்யலை. அது விபத்து. அது விபத்து. மியர் ஆக்ஸிடெண்ட்'' என்று எழுந்து கொண்டான் விஜி.

''இப்போ நீ நார்மலா இல்லை விஜி. ரொம்ப உணர்ச்சி வசப்படறே. உட்கார். மொதல்ல உட்கார். வெய்ட், இதோ வர்றேன்'' என்று ரவி எழுந்து கட்டிலுக்கருகே வாட்டர் ஜக்கிலிருந்து நீர் வார்த்தான்.

''இதைக் குடி. குடிச்சிட்டு நிதானமா பதட்டம் இல்லாம என்ன நடந்திச்சின்னு சொல்லு.''

''நோ ரவி, அது நான் செய்யலை.''

''நீ செய்யலை. நீ செய்யலை.குடி''

மடமடவென்று அவசரமாய் கழுத்தெல்லாம் வழிய குடித்து விட்டு, கிளாஸ் டம்ளரை ஸ்டூல் மீது மடார் என்று வைத்தான். உடைந்தது. விஜியின் உதடுகள் சன்னமாகத் துடித்தன.

''எனக்கு பயமா இருக்கு விஜி. டாக்டரை கூப்பிடட்டுமா? என்ன பண்ணுதுடா?''

''நத்திங். நான் நல்லாதான் இருக்கேன்.''

''குட். தெளிவா சொல்லு. எனக்கு எதுவும் புரியலை.நீ என்ன சொல்ல வர்றே?''

''என்னால தெளிவா சொல்ல முடியாது ரவி. பிகாஸ் என் மனசுக்கே அது தெளிவா இல்லை. எண்ணெய் பேப்பர் வழியா தெரியற காட்சி மாதிரி குழப்பமா, மங்கலா இருக்கு. ஆனா ஐயாம் ஷ்யூர். உடனே செத்துட்டா. மூக்கைத் தொட்டுப் பார்த்தேன். காத்து இல்லை. அவுட். சொதசொதன்னு ரத்தம். சொல்லு ரவி. நான்ங்கிறது யாரு?''

''தொடர்பில்லாம பேசறே விஜி. ஐ காண்ட் கெட் இட் க்ளியர்லி''

''நானே க்ளியரா இல்லையே...''

''இரு. நான் தெளிவாக்க முயற்சிக்கிறேன். ஒரு பெண். அவ கொலை செய்யப்பட்டு ரத்தம் சிந்தி செத்துட்டா. இது தான் புரியுது. இதிலே உன் இன்வால்வ்மென்ட் என்ன? நீ அந்த கொலையைப் பாத்தியா?''

''நான் செய்யலை ரவி...''

''ஐ அக்ரி. நீ செய்யலை. ஆனா நீதான் என்னை குழப்பறே. இதை சொல்ல ஆரம்பிக்கிறப்பவே நான் ஒரு கொலை செஞ்சிட்டேன்னு நீதான் ஆரம்பிச்சே... இப்போ நான் இல்லைங்கறே...''

''நான்னறது யாரு ரவி?''

''நீங்கறது விஜி. என் ஃப்ரெண்ட்.''

''அதில்லை. 'விஜி'ன்னா யாரு? இந்த விரலா? கையா? காலா? உடம்பா?''

''எல்லாமும்தான்.''

''அய்யோ! அதில்லை. இப்போ உனக்கு பேர் தெரியாத ஒருத்தன் போறான். அவனை என்ன சொல்வே?''

''ஒரு ஆள்''

''நீ ஒரு ஆள். நான் ஒரு ஆள். உன் பேரு எனக்குத் தெரியும். அதனால ரவிங்கறேன். என் பேர் உனக்குத் தெரியும். அதனால விஜிங்கறே? ஆனா இதெல்லாம் உடம்புக்கான பேர்கள்தானே?''

''யெஸ். இப்ப நீ என்ன சொல்ல வர்றே? வித்தியாசமா பேசறே?''

''கரெக்ட். அதைத்தான் சொல்றேன். அந்த வித்தியாசத்தை ஒரு ஆளுக்கும், இன்னொரு ஆளுக்கும் ஏற்படுத்தறது அவன் மூளையும் அதன் செயல்பாடுகளும், மனசும், அவன் எண்ணங்களும். நான்ங்கிறது என் மூளைதான். விஜிங்கற இரண்டு எழுத்து இல்லை.''

''ஒத்துக்கறேன்''

மேலே அவன் பேசக் காத்திருந்தான் ரவி.

''இந்த கொலையை நான் செய்யலை ரவி.''



''அதான் சொல்லிட்டியே''

''ஆனா அந்தக் காரியத்தை விஜியின் கைகள் செய்தன.''

**பிரியமான நீயே,**

மாகழி குளிருக்கு மரங்களை ஒடித்து
நெருப்பூட்டிப் பெற்ற வெப்பம்
சத்தியமாய் போதவில்லை.
உடன் வந்து என் குளிர் நீக்கு.

**பிரியங்களுடன் நானே.**

## 4

நவம்பர் காற்று கொஞ்சம் ஈரம் ஏந்தி வீசியது. மரங்களுக்கு மகிழ்ச்சி. முந்தாநாள் முடிந்த மழை அத்தியாயத்தின் பின்குறிப்பாக சாலை ஓரங்களில் காய யோசிக்கும் சகதிகள்.

சோம்பலாய்த் துவங்கிய காலையில், குரல் கொடுக்க பறவைகளுக்கும் அலுப்பு. மக்கள் காரியங்களை நாளை பார்க்கலாம் என்று தள்ளிப் போட்டிருந்தனர்.

தமிழக தலை நகரில்,

சாஸ்திரி நகரில் -

நம் ஃபோகஸ் விளக்கு பட வேண்டும். படுகிறது.

கந்தசாமி சின்சியராய் முயல் குட்டியின் ஜெயண்ட் சைஸாய் இருந்த வெள்ளை ஃபியட்டைத் துடைத்துக் கொண்டிருந்தான்.

கர்ரிச், கர்ரிச் என்று அவன் உயரத்திற்கு கத்திரிக்கோல் பிடித்து புல்லுக்கு கிராப் வெட்டிக் கொண்டிருந்தான் அவன் பிள்ளை ரங்கசாமி. இவனுக்கு கல்யாணம் ஆகி அல்லது ஆகாமல் பிறக்கும் பிள்ளைக்கு ரத்தினசாமி என்று பெயர் வைப்பான்.

வீட்டின் உள்ளே ஜால்ரா, ஜிகினா வேலைகள் செய்த

டெலிபோனில், ''நேத்து நான் ஊரில இல்லை. ராத்திரி திரும்பறப்போ ஒரு மணியாய்டுச்சு. இப்பதான் எழுந்திரிச்சேன். அவங்களை மத்தியானம் மீட் பண்றேன்னு சொல்லுங்க. ஆமாம் ஆபீசுக்கே லேட்டாதான் வருவேன். மணிவண்ணன், அவங்களுக்கு தங்கறதுக்கு ஏற்பாடு பண்ணிடுங்க. வச்சிடட்டுமா?''

- என்று பேசி வைத்த சந்திரசேகரன் இரவு கவுனில் இருந்தார்; விரலிடுக்கில் சுருட்டுடன் இருந்தார். ஒரு பணக்கார பிஸினஸ் - அதிலும் தமிழ் படம் போல - மேனுக்கு உரிய லட்சணங்களோடு இரண்டு கிருதாக்களில் பட்டையாய் நரைத்திருக்க... நடந்து சோபாவில் அமர்ந்தார்.

''சுந்தரம்'' என்றழைத்தார்.

வந்தவனிடம் ''விஜி இன்னும் எழுந்திரிக்கலை?'' என்றார்.

சுந்தரம் தயங்கினான்.

''என்ன?''

''சின்னய்யா இல்லைங்கய்யா.''

''என்னடா உளர்றே?''

''நேத்து காலையிலே சூட்கேஸ் எடுத்துக்கிட்டு புறப்பட்டு போனாருங்க. இன்னும் வரலை.''

''வெளியூரா? என்கிட்டே சொல்லாமலா? எங்கே போனான்?''

''என்கிட்டே சொல்லலைங்க.''

''நீபோ.''

முதல் நாள் கூட எதுவும் சொல்லவில்லை என்னிடம் ஊருக்குப் போவதாக. நான்கூட ஊரில் இல்லாதபோது அப்படி என்ன வெளியூர்ப் பயணம்?

சுருட்டை ஆழமாய் இழுத்துக் கொண்டு மாடிப்படிகள் ஏறி மேலே வந்து தன் அறைக்குள் வந்தார்.

போர்வைக்கடியில் இன்னும் உறங்கிக் கொண்டிருந்தாள் ஷ்யாமா.

வந்து பக்கத்தில், கட்டிலில் அமர்ந்து, 'ஷ்யாமா'' என்றார்.



எழவில்லை. கன்னத்தில் லேசாய்த் தட்டினார். ''ம்'' என்று முனகினாள்.

போர்வையை விருட்டென்று இழுத்தார். நைட் கவுன் கண்டபடி வழிந்திருந்தது. பிராவின் பின் பக்க கொக்கிகள் கழன்றிருந்தன. இணைத்துப் போட்டு விட்டார். குனிந்து கன்னத்தில் இச்சி ''ஷ்யாமா டார்லிங்'' என்றார்.

'படக்' என்று எழுந்தாள்.

''குட்மார்னிங் ஷ்யாம்.''

''குட்மார்னிங் டியர்'' என்று கைகளை உயர்த்தி சோம்பல் முறித்த போது... இரண்டு கைகளாலும் விஷமம் ஒன்று செய்தார்.

''என்னங்க இது?''

''குட்மார்னிங் டு தெம்.''

''வர வர உங்களுக்கு இளமை ரொம்பதான் திரும்புது''

''நோ. இளமை. பக்கம் திரும்புது. சரி, விஜி எங்கே போனான்?''

''என்கிட்டேயும் சொல்லலை. நான் காலைல ஜேசீஸ் மீட்டிங் போயிட்டேன். திரும்பி லஞ்ச் முடிஞ்சு ரெண்டு மணிக்குத்தான் வந்தேன். சூட்கேஸ் எடுத்துக்கிட்டு எதுவும் சொல்லாமப் போனதா சுந்தரம் சொன்னான்.''

''உங்க ரெண்டு பேருக்குள்ளே மறுபடி எதுவும் சண்டையா?''

''சேச்சே...''

''கோபமா போகலையா?''

''அப்படித் தெரியலை. சட்டு சட்டுன்னு ஊருக்குப் போறது, சுத்திட்டு திரும்பி வர்றது... உங்க பிள்ளை புதுசாவா செய்றார்?''

''நம்ம பிள்ளை ஷ்யாமா.''

''நம்ம பிள்ளை! இருபத்திரண்டு வயது ஷ்யாமாவுக்கு இருபத்தாறு வயசு விஜி... பிள்ளை...''

''அதுக்கென்ன பண்றது ஷ்யாம்?''

ஷ்யாமா எழுந்து கூந்தலை பந்து பண்ணிக் கொண்டு, கட்டில் ஓரத்தில் கிடந்த செருப்புகளை அணிந்து கொண்டு, பாத்ரூம் போய் பிரஷ் எடுத்தாள்.

''அவருக்கு நம்ம கல்யாணத்திலே துளிகூட இஷ்டமில்லைன்னு தெரியுது.''

''இது நாச்சுரல் ஷ்யாமா. எ கைண்ட் ஆஃப் இர்ரிடேஷன் என் மேல அவனுக்கு ஏற்பட்டுப் போச்சு. நாளானா சரியாயிடும். 'I live for I'ங்கறது என் பாலிசி. எதுக்காக என் சுகங்களை நான் தியாகம் செய்யணும் ஷ்யாம்?''

சந்திரசேகரன் பாத்ரூமுக்கு வந்தார்.

''அவருக்கது புரியலையே?'' என்றாள் கவுனில் இருந்து விலகிக் கொண்டு.

''புரியும். புரியுது. ஜீரணிக்கத்தான் முடியலை அவனுக்கு. எல்லாம் சரியாய்டும்.''

''சரி போங்க. நான் குளிக்கப் போறேன்.''

''போறேன் இல்லை; போறோம்.''

காலால் உதைத்து பாத்ரூம் கதவைச் சாத்தினார்.

கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு விஜியையே பார்த்துக் கொண்டிருந்தான் ரவி. தலைக்கு மேல் ஃபேன் ஓடும் சப்தம் மட்டும்.

தன் இரண்டு கைகளையும் ஒருதரம் பார்த்துக் கொண்டான் விஜி.

''இந்தக் கைதான் ரவி. இந்தக் கைதான். இந்தக் கைதான்.'' என்று இரண்டு கைகளையும் கோர்த்துக் கொண்டு எதிரே இருந்த சின்ன ஸ்டூலில் வேக வேகமாக குத்தினான்.

ஏற்கனவே உடைந்திருந்த கண்ணாடி டம்ளரின் சில்லு கையில் குத்த... குபுக் என ரத்தம் வந்தது. வழிந்தது. சொட்டியது. தரையில் புள்ளி புள்ளியாய் சிவப்பு படர்ந்தது.

பதறி எழுந்தான் ரவி.

''விஜி,என்ன ஆச்சு உனக்கு? என்ன காரியம் பண்றே. மை காட்!



இத பாரு எவ்வளவு ரத்தம்?''

தன் கர்ச்சீப்பை எடுத்து விஜியின் கையைச் சுற்றிப் பொத்தி ரத்தத்தை தடுக்க முயன்றான் ரவி.

விஜியின் விழிகள் விரிந்தன. அவசர அவசரமாய்ச் சுவாசித்தான்.

''எவ்வளவு ரத்தம்! எவ்வளவு ரத்தம்! ரத்தம்!'' ரத்தம் என்று திருப்பித் திருப்பிச் சொன்னான். அப்படியே பின்னால் சரிந்து மூர்ச்சையானான் விஜி.

ஒரு நிமிடம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான் ரவி.

மை டியர் விஜி, என்ன நேர்ந்தது உனக்கு? ஸம்திங் ராங். எசகுபிசகாக என்னமோ நடந்திருக்கிறது. மிகக் குழம்பியிருக்கிறான். வார்த்தைகளுக்கிடையில் அர்த்தம் அத்தனை தெளிவில்லை என்றாலும் புரிகிறது.

ஒரு கொலை நடந்திருக்கிறது. இறந்தவள் பெண். நிறைய ரத்தம் சிந்தியிருக்கிறாள். கொலையாளி ஆயுதம் உபயோகித்திருக்கிறான். கொலையாளி யார்; இவனா? சேச்சே என் கைகள் மீறிச் செய்தன என்கிறான். நான் செய்யலை என்கிறான். இவனை மீறி இவன் செயல்படுவானா என்ன? குழப்பம். எவரெஸ்ட் உயர குழப்பம்.

நபர் யார்?

காரணம்?

நடந்தது எங்கே?

சூழ்நிலை எப்படி?

வரிசையாய் இன்னும் குரோஸ் கணக்கில் பதிலுக்காக கேள்விகள் காத்திருக்கின்றன. அவை பின்னால்.

இப்போது அவனுக்கு கைக்காயத்திற்கு கட்டு தேவை. ஒரு டாக்டர் முதலில் தேவை.

அறையை விட்டு வெளியேறுவதற்கு முன் ஒரு துண்டெடுத்து வியர்த்திருந்த விஜியின் முகத்தைத் துடைத்து விட்டு சட்டையின் மேல் பட்டன்களைக் கழற்றி, நன்றாக படுக்க வைத்து, ஃபானை உச்சத்தில் சுழல விட்டான்.

கீழே அம்மா, ''என்னடா கத்திக் கத்திப் பேசிக்கிறீங்க?'' என்றாள்.

''ஒண்ணுமில்லைம்மா. சும்மா.'' என்று டெலிபோனை எடுத்து ஒரு டாக்டரை அழைத்தான். மறுபடி டெலிபோன் உபயோகித்து பி.ஹெ.ச்.ஃ.எல் அழைத்து எக்ஸ்டன்ஷன் கேட்டு தன் செக்ஷனில் தனக்கு லீவு சொன்னான் ரவி.

.

சாம்பல் நிற வானப் பின்னணியில் மலைக்கோட்டை - தூரத்தில் உச்சியில்நின்று மாலை திருச்சியை ஏரியல் வ்யூவில் பார்த்துக் கொண்டு பிள்ளையார். அனேக மொட்டை மாடிகளில் ஆன்டெனாக்கள்.

இரண்டு மூங்கில் நாற்காலிகளில் ஒன்றில் கையில் சின்ன பாண்டேஜுடன் வேறு சட்டையுடன் விஜி. மற்றொன்றில் காதில் வாக்மேன் டேப்பில் ஹியரிங் சாதனத்தை அணிந்து கொண்டு ரவி. இருவருக்கும் நடுவே சின்ன ட்ரேயில் பிஸ்கட்டுகள், டன்ஹில் சிகரெட் பாக்கெட்.

''ஸாரி ரவி, நான் உன்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணிட்டேன். இல்லை?''

''என்னடா தொந்தரவு? நத்திங். பிஸ்கட் எடுத்துக்கோ. 'கட்டை வண்டி கட்டை வண்டி' கேக்கறியா?''

''வேணாம் ரவி. உன்னைக் குழப்பிட்டேன்.''

''அஃப்கோர்ஸ், இப்ப நீ நார்மலா ஃபீல் பண்ணினா பேசு விஜி.''

''எனக்குள்ளே என்னன்னமோ நடந்து முடிஞ்சாப்பல உணர்றேன். இதுதான்னு பெயரிட முடியலை. யுத்தம் உள்ளுக்குள்ள ஓய்ஞ்ச மாதிரி இருக்கு. ஆனா புகை அலையுது. யு நோ, நான் எங்க வீட்டை விட்டு கோபமா ஓடி வந்துருக்கேன்.''

''ஈஸ் இட்? ஏண்டா? என்ன பிரச்னை?''

''விரிவா அப்புறம் சொல்றேன். நான் வீட்டை விட்டு புறப்பட்டதும் உன் ஞாபகம் வரலை. எங்க போறதுன்னு முடிவே பண்ணலை. ஆனா ஐ ஜஸ்ட் கேம் டு எக்மோர் ஸ்டேஷன். அதுக்கப்புறம் மாயவரம் இருக்கு பாரு?''

''மயிலாடுதுறை''



''ஆமாம். அங்கே ராத்திரி அகாலத்திலே திருச்சிக்கு டிக்கெட் வாங்கினேன். வந்தேன். நேரா உன் வீட்டுக்கே வந்துட்டேன்.''

''மெட்ராஸ்லேர்ந்து மாயவரம் எதுக்காகப் போனே விஜி?''

''இதைத்தான் என்னால தொடர்பா சொல்லத் தெரியலை. என் நினைவுகள் பளிச்னு இல்லை. பிட் பிட்டா விளம்பர ஸ்லைட் மாறும் பாரு, அது மாதிரி வெவ்வேற தொடர்பு இல்லாத சின்ஸா நினைவுக்கு வருது. பட் இது நல்லா ஞாபகம் இருக்கு. அந்தப் பொண்ணு செத்துட்டா. யு நோ ரவி, எத்தனை ரத்தம் தெரியுமா? என் கையெல்லாம் ரத்தம். கொல்லைப் பக்கம் ஓடிப் போய் கழுவி விட்டு, சூட்கேஸ்ல என் பொருள் எல்லாம் எடுத்து அள்ளிப் போட்டு ஓடி வந்து திருச்சிக்கு ரயில் ஏறினேன். நல்லாத் தெரியுது. நான்தான் அதை செஞ்சிருக்கேன். நான்தான் அதை செஞ்சிருக்கேன். நான் ஏன் ரவி செய்யணும்? யார் அவள்? எதுக்காகக் கொல்லணும்? டெல் மீ ரவி, டெல் மீ'' என்று முகத்தை கவிழ்த்துக் கொண்டு அழத் தொடங்கினான் விஜி.

''விஜி... அழாதே. மனசை பிசையாதே. யு ஆர் மென்ட்டலி அப்செட். நீ ஏதோ ஹல்யூசினேஷன்ஸ்ல மிதக்கறேன்னு நினைக்கிறேன். உனக்கு எல்லாவித உதவியும் செய்றதுக்கு நான் இருக்கேன் விஜி. தைரியமா இரு.''

விஜி முழுக்கை சட்டையின் நுனியால் விழிகளைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தான்.

''உதவியா? என்னடா உதவி? நான் என்ன ஹெல்ப்லெஸ் நிலையில் இருக்கேனா? எனக்கு எதுவும் தெரியாது. யாருக்கும் எதுவும் தெரியாது. இதோ பாரு எத்தனை சுதந்திரமா 119 கிலோ மீட்டர் தள்ளி வந்துட்டேன். இதோ பார் வளையம் வளையமா புகை விடறேன். கொண்டு போய் இறக்கி விட்டேன்னு ரயில் பேசுமா?''

விஜியை வினோதமாய்ப் பார்த்தான் ரவி.

> **பிரியமான நீயே,**
>
> காற்றைப் பிளந்து சடுதியில் பாயும்
> புரவி ஒன்றும், பிருதிவிராஜனின் தைரியமும் தயார்.
> உன் வீட்டுக் கொல்லைப்புறக் கதவை மட்டும்
> திறந்து வை
>
> **பிரியங்களுடன் நானே.**

## 5

குளப் படிக்கட்டில் குடத்தை வைத்து விட்டு காமாட்சி, ''விஷயம் தெரியுமா? நம்ம மங்களம் மாமியோட பொண்ணை ராத்திரி யாரோ கொலை பண்ணிட்டாங்க.''

- ஷேவிங் க்ரீமைத் தாடையில் பூசிவிட்டு சிங்காரம், ''பொண்ணை கெடுத்திருக்கானா? இல்லை கொலை மட்டும் தானா சார்?''

- மாட்டின் காம்பை இழுத்துக் கொண்டே பொன்னம்மா, ''எனக்கு சரியாத் தெரியாது தாயி. அந்தப் பொண்ணு இருக்குல்ல. அதோட அண்ணனுக்கு பிரண்டுன்னு சொல்லிக்கிட்டு சாயங்காலம் வந்தானாம்.''

- சின்ன கல்லை வாக்கிங் ஸ்டிக்கால் தட்டிக் கொண்டு சிவராஜன், ''மதர் ஸ்பாட்ல இல்லை. காலட்சேபம் போயிருக்கா. திரும்பி ராத்திரி ரெண்டே காலுக்கு வந்து பார்த்தா தரை பூரா ரத்தமாம். ஆள் எஸ்கேப் ஆயிட்டான்.''

- பெல்ட்டை லூப்களுக்குள் நுழைத்துக் கொண்டு வஸந்த், ''ஸ்டாபிங்டா பிரபு. நாலஞ்சு குத்து. மோடிவ் தான் புரியலை. ரேப் சிம்ப்டம்ஸ் எதுவும் இல்லை. கழுத்திலே செயின் அப்படியே இருக்கு. காதுல ஜிமிக்கி இருக்கு. வீட்லையும் எதுவும் திருட்டுப் போகலை.''

- ஒரு பின்னலுக்கு ரப்பர் பாண்ட் போட்டுக் கொண்டு ரம்யா, ''இல்லை மம்மி.. இது லவ் விவகாரம் இல்லை. சித்ராவை எனக்குத் தெரியாதா? ஏதோ பழைய குடும்ப பகையா இருக்கணும். ஆனா



அவளை மட்டும் ஏன் கொன்னான்? சே! இன்னும் ஆறு மாசத்திலே கல்யாணம் பண்ண இருந்தாங்கம்மா.''

அரசாங்க ஆஸ்பத்திரி.

காற்றில் பினாயில் இருந்தது. அவுட்பேஷண்ட்ஸ் பகுதியில் சீட்டுக்களோடு நோயாளிகள் கட்டிடம் அதிர இருமிக் கொண்டு அய்யோ, அம்மா, என்று முனகிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

நிழல் நிரப்பிய மரத்தடி வாசலில் கண்கள் வீங்கிப்போய், ரவிக்கை எல்லாம் நனைந்து போய், குரல் கட்டிப் போய் மங்களம் புடவைத் தலைப்பை வாயில் சுருட்டி அடைத்துக் கொண்டு நின்றாள்.

விவேக் மரத்தில் முதுகை சாய்த்துக் கொண்டு இரண்டு கால்களையும் நீட்டிக் கொண்டு, ஒரு கையால் நெற்றியைப் பிடித்துக் கொண்டு, சிவப்பேறிய கண்களுடன் வானத்தை வெறித்துக் கொண்டிருந்தான். பாண்ட் மண்ணில் புரண்டு அழுக்கேறியிருந்தது. கன்னங்களில் உலர்ந்து போன உப்புக் கோடுகள்.

ஆண்டிப்பட்டியிலிருந்து அப்போதுதான் வந்த சதாசிவம் மாமா, வேகமாய் வந்து விவேக்கின் கையைப் பிடித்துக் கொண்டார். கழுத்து நரம்புகள் புடைக்க...

''என்னடா இப்படி ஆய்டுச்சு?''

''போய்ட்டா மாமா... எல்....லாத்தையும் விட்டுட்டுப் போய்ட்டா'' என்று அவரைக் கட்டிக் கொண்டான். ஆதரவாய், மீண்டும் அழத் தொடங்கினான்.

''தைரியமா இருடா. யாருடா செஞ்சான்? எதுக்காகடா செஞ்சான்?''

''தெரியலையே மாமா. எனக்கு எதுவுமே புரியலை. பாஸ்கர்ன்னு சொல்லியிருக்கான். எனக்கு அப்படி ஃபிரண்டு யாருமே இல்லை. என் பிரண்டுன்னு சொல்லி தங்கியிருக்கான் என் ரூமுல. ராத்திரி அம்மா காலட்சேபம் போய்ட்டாங்க.''

''பாட்டி?''

''பாட்டியை எந்தக் கணக்கிலே சேர்ப்பிங்க மாமா? காது சுத்தமா

கேக்கறதில்லை. கண் பார்வை நல்ல தடுமாட்டம். அதுவும் ராத்திரி நடந்திருக்கு. கத்தியால நாலஞ்சு தடவை குத்தியிருக்கான் மாமா என் சித்ராவை. என்ன மாமா செஞ்சா அவ? ஏன் கொன்னான்? ஏன் கொன்னான்?''

விவேக்கின் அழுகை அதிகமாகியது. அவனைத் தன் மீது சாய்த்துக் கொண்டு தோளில் தட்டிக் கொடுத்தார் சதாசிவம்.

''போலீஸ்ல ரிப்போர்ட் கொடுத்தியா?''

''எல்லாம் ஆச்சு மாமா. இல்லேன்னா இங்கே ஏன் உட்கார்ந்திருக்கோம். உள்ளே அவளைக் கூறு போட்டுக்கிட்டிருக்காங்க மாமா. சித்ரா போய்ட்டா. போயே போய்ட்டா, இனிமே வரமாட்டா, பேசமாட்டா, சிரிக்க மாட்டா, பாவி! என்னடா செஞ்சா அவ? ஏண்டா கொன்னே? சொல்டா, ஏன் கொன்னே?''

''அமைதியா இரு விவேக். அவளுக்கு விதி அப்படி இருக்கு. மனசை தேத்திக்கோடா. சொல்றனேயொழிய முடியுமா? என் மனசே கேக்கலையேடா.. சாகற வயசா? என்னமா வாயடிப்பா? போன பொறந்த நாளுக்கு என் கிட்டே ஆசீர்வாதம் வாங்கிக் கிட்டப்போ, அடுத்த பிறந்தநாளுக்கு புருஷனோட ஆசீர்வாதம் வாங்கிக்கனும்னு சொன்னேனேடா...''

''மாமா... மாமா...'' என்று அவர் மடியில் புதைந்து கொண்டு குலுங்க ஆரம்பித்தான்.

''மங்களம், போலீஸ் வீட்டுக்கு வந்திச்சா?''

''ராத்திரிலேர்ந்து ஒரே அமர்க்களம். இன்ஸ்பெக்டர், சூப்பிரண்டுன்னுநிறைய பேர் வந்துட்டுப் போய்ட்டாங்க. போட்டோல்லாம் புடிச்சு, நாயெல்லாம் வந்து மோப்பம் புடிச்சி ரயில்வே ஸ்டேஷன் வரைக்கும் ஓடிச்சு. காலையிலேர்ந்து தெருப்பூரா விசாரிச்சாங்க. என்னை அழக்கூட விடலை. மத்தியானம்தான் அறுத்து பார்க்கிறதுக்காக ஆஸ்பத்திரிக்கு கொண்டாந்தாங்க. இனிமே போலீஸ் வந்தா என்ன, ராணுவம் வந்தா என்ன, சித்ரா போய்ட்டாளேண்ணா... நான் முண்டை... அந்தப் பொறுக்கி ஃபிரண்டுன்னு சொன்னதும் நம்பினேனே...''

''விவேக் எப்போ வந்தான்?''

''ராத்திரி ரெண்டரை மணிக்கே தெருவே கூடிடுச்சு. பக்கத்து



வீட்டுக்காரர்கிட்டே சொல்லி லைட்னிங் போன் பண்ணி ஆஸ்டல்ல தகவல் சொன்னோம். பஸ் கிடைக்காம, ரயில் கிடைக்காம, ஒரு பிரண்டை அழைச்சுக்கிட்டு மோட்டார் சைக்கிள்ல புறப்பட்டு காலைல ஒம்பது மணிக்கு வந்து சேர்ந்தான்.

''காலையிலே ஏதுவும் சாப்பிட்டானா?''

''யார்தாண்ணா சாப்பிட்டது?''

''நம்ம கைல என்னம்மா இருக்கு? திரும்பி வரப் போகுதா உசுரு? விவேக், எந்திரிடா, எந்திரி, வா, ஒரு கப் காபி மட்டும் சாப்பிட்டு வரலாம்.''

''வேணாம் மாமா. என்னை விடுங்க.''

''அட எந்திரிடா, ஒரு வாய் காபி மட்டும் சாப்பிடு. அழுதுகிட்டே இருந்துட்டா சரியாப் போச்சா? எத்தனை காரியங்கள் இருக்கு? தெம்பு வேணாமா கொஞ்சமாவது? வா, அட, வா சொல்றேன்!'' என்று உலுக்கி எழுப்பி ஆஸ்பத்திரியை விட்டு வெளியே அழைத்து வந்தார் சதாசிவம்.

இரண்டு இளைஞர்கள் சிகரெட்களோடு, ''ஃபண்ட்டாஸ்ட்டிக் மேன், மிஸ் பண்ணாதே'' என்று பேசிக் கொண்டு இவர்களைத் தாண்டி சென்றார்கள். விபூதி,குங்குமம் வைத்த பாய்லர் இருந்த கடைக்கு வந்து அமர்ந்தார்கள். ஸ்பீக்கரில் 'நேத்து ராத்திரியம்மா'

''இந்தா மாலை முரசுல போட்டுட்டாங்க மாமா.''

சதாசிவம் எடுத்து 'போலீசார் புலன் விசாரணை செய்து வருகிறார்கள்' வரை படித்து விட்டு மடக்கி வைத்து விட்டு கிளாஸை வாங்கி ''இந்தா' என்று அவன் கையில் தந்து விட்டு காதருகில் மெல்லிசாய் கேட்டார்.

''ரேப் மாதிரி தெரியுதா?''

''இல்லை மாமா. உடம்பில வேற காயமே இல்லை. டிரஸ் கூடவும் கிழியலை. நான் இதையே இன்ஸ்பெக்டர் கிட்ட கேட்டேன்.''

''என்ன சொன்னார்?''

''வெளித் தோற்றத்துக்கு அப்படித் தெரியலை. மயக்க மருந்து கொடுத்து அப்படி நடந்திருந்தா, போஸ்ட் மார்ட்டத்திலே

தெரிஞ்சுடும்னார். ஊரெல்லாம் பீதியாயிருக்கு மாமா. பழைய குடும்பப் பகை அது, இதுன்னு பேசிக்கிறாங்க. நமக்கு என்ன மாமா பகை?''

''காபியை சாப்பிடுடா. ஆறிடும். நமக்கு ஏதுடா பகை? உங்க அப்பா ஆகட்டும், அம்மா ஆகட்டும், சத்தமா பேசிக்கூட நான் கேட்டதில்லை.''

''பின்னே ஏன் மாமா ஏன்?'' தொண்டை அடைத்துக் கொண்டது விவேக்கிற்கு.

''போலீஸ் கண்டுபிடிப்பாங்க - விவேக் அதை.''

''அவங்க கண்டு பிடிக்கிறாங்களோ இல்லையோ, நான் இதை விடப் போறதில்லை மாமா. எனக்கு காரணம் தெரிஞ்சாகணும். அவனை சந்திச்சாகணும். தண்டிச்சாகணும். வாங்க போகலாம்'' என்று விருட்டென்று எழுந்தான் விவேக்.

அவர்களுக்காக மரத்தடியில் இன்ஸ்பெக்டர் முரளிதரன் காத்திருந்தார்.

வந்ததும்...

''பி.எம். முடிஞ்சிடுச்சு மிஸ்டர் விவேக். இன்னும் கொஞ்ச நேரத்திலே நீங்க பாடியை வாங்கிக்கலாம். ரிப்போர்ட் கொஞ்சம் லேட்டாகும்'' என்றார்.

கழுத்திலிருந்து டேப்ரிக்கார்டரைக் கழற்றி எடுத்து ட்ரேமேல் வைத்தான் ரவி. சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான். ஒவ்வொரு இடத்திலும் புதுசு புதுசாக விளக்குகள் எரிய ஆரம்பித்தன. வானம் நிறம் மாறலின் கடைசிக் கட்டத்தில் இருந்தது. கோஷ்டி கானத்துடன் பறவைகள் காலனிகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன.

''விஜி, எவன் ஒருத்தன் நான் சந்தோஷமா இருக்கேன்னு அழுத்திச் சொல்றானோ, அவன் சந்தோஷமா இல்லைன்னு அர்த்தம். நீ பேசறது அப்படித்தான் இருக்கு.''

''ஒத்துக்கறேன் ரவி. எனக்கு பயமா இருக்கு. என்னோட எதிர்காலமே முடிவுக்கு வந்துட்ட மாதிரி இருக்கு. யாருக்கும் தெரியாதுன்னு நான் சொல்றேன். ஆனா யாராவது பார்த்திருக்கலாம். எனக்கு பயமா இருக்கு ரவி. மனசுக்குள்ள



எத்தனையோ கனவுகள் வச்சிருக்கேன் ரவி வாழ்க்கையைப் பத்தி. ஓ காட்! நான் ஏன் அங்கே போனேன்?'' என்று கண்களை மூடிக் கொண்டான் விஜி.

''விவேகமாவும் பேசறே குழப்பமாவும் பேசறே. விஜி, நீ நாளைக்கு என்னோட வந்தே ஆகணும்.''

''எங்கே?''

''என் ஃபிரண்ட் பார்த்திபன் வீட்டுக்கு.''

''யாரு அவரு?''

''அதை அப்புறம் சொல்றேன். மாயவரத்திலேர்ந்து கிளம்பினே இல்லையா?''

''ஆமாம்.''

''அதுக்கப்புறம் எல்லாம் தெளிவா நினைவுக்கு இருக்கா?''

''இருக்கு ரவி.''

''சரி, அரக்கப் பரக்க சூட்கேசை தூக்கிக்கிட்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தே, என்ன செஞ்சே?''

''திருச்சிக்கு இப்போ ரயில் இருக்கான்னு கவுண்ட்டர்ல கேட்டேன். 'பணத்தை எடுங்க. இதோ திருப்பதி டு மதுரை எக்ஸ்பிரஸ் புறப்படப் போகுது'ன்னாங்க. உடனே டிக்கெட் வாங்கி வந்து ரயில்ல ஏறினேன். என் வயத்து வலிக்காக வெஸ்பாரெக்ஸ் எப்பவும் வச்சிருப்பேன். அதிலே ஒண்ணு சாப்பிட்டுட்டு தூங்கிட்டேன். எல்லாம் அப்புறம் யோசிக்கலாம்னுட்டு. இப்பவும் எனக்குப்புரியலை. அவ செத்துக் கிடக்கிறா. என் கைல கத்தி இருக்குது. அப்ப நான்தானே கொன்னிருக்கணும்? வொய்? தெரியலை? மாயவரம் எப்படிப் போனேன்? புரியலை. அது யார் வீடு? தெரியலை. தெரியலைன்னா சுத்தமா தெரியலை இல்லை. கொஞ்சம் கொஞ்சம் நினைவு ஒட்டுது. விலகுது. ஒட்டுது. அந்த அம்மா பேரு மங்களம். இது காலைல ஞாபகம் வரலை. இப்போ ஞாபகம் வருது.''

''விஜி, நாளைக்கு பார்த்திபனைப் பார்க்கிறோம். மங்களம் யாரு?''

''அந்த அம்மாடா, அவங்கம்மா''

''ஆமாம், என்ன சொன்னே? கத்தி உன் கைல இருந்திச்சா?''

''ஆமாம்.''

''நீ கை அலம்பி,சூட்கேஸை எடுத்துக்கிட்டு புறப்படறப்போ அதை என்ன செஞ்சே?''

''கர்ச்சிப்ல அப்படியே சுத்தி சூட்கேஸ்க்குள்ள வச்சிக்கிட்டேன் ரவி. ரயில்ல ஏறி ரயில் ஓட ஆரம்பிச்சதும், திறந்து எடுத்துக்கிட்டு பாத்ரூம் போய் ப்ளஷ் அவுட்ல போட்டுட்டேன்.''

''மடத்தனம் பண்ணிட்டே விஜி'' என்றான் ரவி.

> **பிரியமான நீயே,**
>
> நம்பு என்னை. நாடகத்தில் கூட
> நான் துஷ்யந்தனாய் நடித்ததில்லை.
> உன்னை மறப்பது உண்மைதான்.
> அது - நான் உறங்கும் பொழுதுகளில்.
>
> **பிரியங்களுடன் நானே.**

## 6

குற்றாலம். குளிக்கப் போகிற குற்றாலம் அல்ல; மாயவரத்திலிருந்து ஒன்பது கிலோ மீட்டரில் இருக்கும் குற்றாலம்.

சில வண்டுகளும், தவக்களைகளும் இரவுக்கு வயலினும், மோர்சிங்கும் வாசித்துக் காட்டிக் கொண்டிருந்தன. நிலா வெற்றிலை பாக்கு போட்டு நட்சத்திரங்களாய் துப்பியிருந்தது.

ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் மணிக்கட்டில் மணி பார்த்தார். 4.00. இன்னும் ஐம்பத்திரண்டு நிமிடங்கள் கழித்து செங்கோட்டை பாசஞ்ஜர் வரும். அது வரைக்கும் படிக்கலாம் என்று சுந்தர ராமசாமியை எடுத்தார். புரட்டினார்.

'பாஷை என்பது வேட்டை நாயின் கால் தடம். கால் தடத்தை நாம் உற்றுப் பார்க்கும் போது வேட்டை நாய் வெகுதூரம் போயிருக்கும்.'



புத்தகத்தை மூடினார். அவருக்கு சிகரெட் தேவைப்பட்டது. மேஜை மேல் இருந்த பாக்கெட்டை எடுத்துப் பிரிக்க, அது காலியாய் இருந்தது. அடடா...

இந்த அதிகாலையில் நுரையீரல்களுக்கு இதமாய் வெப்பம் தந்து கொண்டு சேரில் வசதியாய் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு புத்தகம் படித்தால் சுகமாய் இருக்கும். கைகாட்டியைக் கடந்து கொஞ்ச தூரத்தில் ஒரு இரவு நேர டீக்கடை இருக்கிறது. அவனிடம் சிகரெட்டும் இருக்கிறது. ரயில்வே லைனோட நடந்தால் போக ஐந்து நிமிஷம். வர ஐந்து நிமிஷம். பாசஞ்ஜருக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கிறது.

''சின்னூ'' என்றழைத்தார். பதில் இல்லை. எங்காவது அசந்து படுத்திருப்பான். போய் வந்து அவனைப் பார்க்கலாம் என்று மேஜையின் மேலிருந்த டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டார். தன் அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்து, தண்டவாளத்தை ஒட்டி கும்பகோணம் திசையில் நடக்க ஆரம்பித்தார். லேசாக குளிரியது. டார்ச்சை அடித்துக் கொண்டு மெதுவாக நடந்தார்.

வரதராஜன் சிகரெட் குடிக்கிறானாம். இப்படியே ஒன்று ஒன்றாய் கற்றுக் கொள்வான். தோளுக்கு மேல் வளர்ந்து விட்டான். எப்படிக் கேட்பது அவனிடம்? ஒரு வேலை கிடைத்தால் சரியாகி விடுவான். வேலை இவன் படிப்பிற்கு இப்போது கிடைக்காது. நான் செத்தால் ரயில்வே கொடுக்கும். இதற்காக சாக முடியுமா?

தண்டவாளங்களுக்கு நடுவில் உள்ள கட்டைகளின் மீது கால் வைத்து நடந்தார். அவரின் டார்ச் வெளிச்சம் ஒரு பொருளைக் கடந்து செல்வது போல் உணர்ந்து நின்றார். டார்ச்சை அசைத்து உணர்ந்த பொருளைத் தேடினார்.

என்ன அது?

குந்தி உட்கார்ந்து பக்கமாக அடித்துப் பார்த்தார். திடுக்கிட்டார். ஒரு கர்ச்சீப்பால் சுற்றப்பட்ட ரத்தம் தோய்ந்த கத்தி.

★ ★ ★

வீட்டின் முன் நீள வாக்கில் பந்தல் போடப்பட்டிருந்தது. பக்கத்து பக்கத்து வீடுகளிலிருந்து பெஞ்சுகள் கடன் வாங்கிப்

போட்டிருந்தார்கள். வீட்டுக்குள்ளே கொஞ்ச நேரம் ஓய்ந்து, கொஞ்ச நேரம் அழுகை வெடித்துக் கொண்டிருந்தது. ஜமுக்காளம் விரித்து, நடுவில் ஒரு பெட்ரோமாக்ஸ் வைத்துக் கொண்டு நாலு பேர் வெத்தலை சீவல் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

சுடுகாட்டில் கொளுத்தி அருகில் குளத்தில் குளித்து விட்டு வந்த விவேக், உடையை மாற்றிக் கொண்டான். தலையைக் கூட சரியாய் வாரிக் கொள்ளாமல் வெளியில் கிளம்பினான். எதிரே சதாசிவம் மாமா வர...

''மாமா, இங்கே சாப்பாட்டு விஷயமெல்லாம் நீங்க கவனிச்சுக்குங்க. அரைமணி நேரத்துல வந்துடறேன்.''

பந்தலை விட்டு வெளியே வந்தான். மெட்ராசில் இருந்து பைக்கில் கூடவந்த சுகுமார், ஓர் ஓரமாய் சிகரெட் குடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

''சுகுமார், பைக்கை எடுத்துக்கிட்டு என்னோட வா.''

பைக்கின் ஹெட்லைட் இருளை இடித்துத் தள்ளி முன்னால் பாய...

''எங்கே போறோம் விவேக்?''

''இன்ஸ்பெக்டர் முரளிதரன் வீட்டுக்கு.''

''ஸ்டேஷன்ல இல்ல இருப்பார்.''

''போன் பண்ணிக் கேட்டேன் மளிகைக் கடையிலேர்ந்து. ஸ்டேஷன்ல இல்லை. நிடூர்ல ஒரு கொலைக் கேஸ்ன்னு போய்ட்டாராம். ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்துடறதா அவர் மனைவிகிட்ட சொல்லிட்டுப் போயிருக்காராம். அவர் வீட்டுக்கு வந்துட்டு ஸ்டேஷனுக்குப் போறதுக்கு முன்னால பார்க்கணும்.''

சில நிமிடங்களில் இன்ஸ்பெக்டர் முரளிதரனின் தனி வீட்டின் முன் பைக் நின்றது.

இறங்கி பஸ்ஸரை அழுத்த - அவர் மனைவி திறந்தாள். இளம் மனைவி. மூக்கின் இடது புறத்தில் ஒரு கல் மூக்குத்தி. தலை வகிட்டின் துவக்கத்தில் குங்குமம்.

''இன்ஸ்பெக்டர் இன்னும் வரலையா?''

''இன்னும் வரல... அதோ வர்றாரே...''



பட், பட், பட் என்று தன் பைக்கைக் கொண்டு வந்து நிறுத்தி முரளிதரன் இறங்கி வந்தார்.

''குட் ஈவினிங் சார்.''

''குட் ஈவினிங் மிஸ்டர் விவேக். சவ அடக்கமெல்லாம் ஆச்சா?''

''ஆய்டுச்சு சார்.''

''உள்ளே வாங்க. உட்காருங்க'' என்று உள்ளே அழைத்து ஒயர் பின்னின சேர்களைக் காட்டினார். அமர்ந்தார்கள்.

''நிடூர்ல அண்ணன் தம்பிக்கிடையே சொத்துத் தகராறு. தம்பிக்காரன், அண்ணன், அண்ணனோட பொண்டாட்டி, வேலைக்காரன் மூணு பேரையும் அரிவாளால போட்டுத் தள்ளிட்டான். ஒரே ரத்தக் களரி. அரெஸ்ட் பண்ணிட்டோம். ஆஸ்பத்திரியில உங்களைப் பார்த்தேனில்லயா, அப்போ தகவல் வந்து புறப்பட்டுப் போனவன்தான், இப்பத்தான் வர்றேன்.''

''ஸ்டேஷன்லேர்ந்து ரெண்டு முறை போன் பண்ணாங்க. வந்தவுடனே உங்களிடம் சொல்லச் சொன்னாங்க. சிவராமன் பேசினார்'' என்றாள் மனைவி.

''அப்படியா? கொஞ்ச நேரத்திலே ஸ்டேஷனுக்குப் போகப் போறேன். விவேக் உங்களுக்கு பி.எம். ரிப்போர்ட் வேணுமில்லையா? இன்ஷூரன்ஸ் இருக்கா பொண்ணு பேர்ல?''

''இருக்கு. ரிப்போர்ட் வேணும். ஆனா நான் அதுக்காக வரலை சார். நீங்க வீட்டுக்கு வந்தப்போ, உடலை அப்புறப்படுத்தினப்போ, போலீஸ் நாய் வந்தப்போ எல்லாம் நான் இல்லை. நான் லேட்டாத்தான் வந்தேன். போலீசோட தியரி என்ன? ஏதாச்சும் நம்பிக்கை இருக்கா? அங்கேயிருந்து ஏதாச்சும் தடயம் எடுத்தாங்களா? இப்படி இதெல்லாம் தெரிஞ்சுக்கலாம்னு வந்தேன் சார். இந்தக் கொலை கொடூரமானது சார். அவனைக் கண்டுபிடிச்சு...''

''ரொம்ப உணர்ச்சிவசப்படாதீங்க விவேக். உங்க ஆத்திரம் நியாயமானது. ரெண்டாவது, தானாகவே முன் வந்து இத்தனை ஆர்வம் காட்றது பாராட்ட வேண்டியது. போலீசுக்கு வேண்டியது சம்பந்தப்பட்டவங்களோட ஒத்துழைப்பு. அது முழுமையா கிடைச்சுதுன்னா மறைஞ்சிருக்கிற உண்மைகளை கண்டுபிடிக்கிறது ரொம்ப சுலபமாயிடும். மேலும் நான் நாளைக்கு உங்ககூட

பேசறதுக்காக உங்க வீட்டுக்கு வரலாம்னு இருந்தேன். கொலை நடந்த இடத்தில் எங்களுக்கு அதிகமா தகவல் எதுவும் இல்லை. விசாரணையிலே சேகரிச்சதுதான் அதிகம். கைரேகைகள் எங்களுக்குக் கிடைக்கலை. நாய்கள் ரயில்வே ஜங்ஷன் வரைக்கும் போச்சு. ரயிலேறி தப்பிச்சிருக்கான். இன்னும் குழப்பமா இருக்கிறது. சரியான காரணம் இல்லைங்கிறதுதான். பகை இல்லை; நகை ஆசை இல்லை, வீட்ல எதுவும் களவு போகலை.''

''சார். பி.எம்... ரிப்போர்ட்ல...''

''இல்லை. ரேப் நடக்கலை. ஆக, அந்தக் காரணமும் அடிபட்டுப் போய்டுது. நான் இதை இன்னும் தீவிரமா யோசிக்கணும். அதுக்குள்ளே இந்த அரிவாள் வெட்டு வந்து அங்கே ஓடிட்டேன். காப்பியா, டீயா?'' என்ற போது... டெலிபோன் ஒலிக்க... கை நீட்டி எடுத்தார்.

''ஹலோ சிவராமன், சொல்லுங்க. இப்பத்தான் வந்தேன். என்னது? எப்போ? அப்படியா? மத்தியானமா? ஏன் சொல்லலை? ஆமாம். நான் தான் போய்ட்டேனே... சரி, நான் உடனே வர்றேன் ஸ்டேஷனுக்கு'' என்று வைத்தார் முரளிதரன்.

''விவேக், கொலை நடந்த விதம் கத்திக்குத்து. ஆனா கொலை நடந்த இடத்திலேயோ, இல்லை சுற்று வட்டாரங்களிலேயோ கத்தி எங்களுக்குக் கிடைக்கலை. உங்க அம்மாவை விசாரிச்சப்போ உங்க சகோதரி ரூமிலே பழம் நறுக்க ஒரு கத்தி வெச்சிருந்தா, அதை இப்போ காணோம்னு சொன்னாங்க. இப்ப போன்ல கிடைச்ச தகவல் அந்தக் கத்தி குற்றாலம் ஸ்டேஷன்ல கிடைச்சிருக்கு. மத்தியானமே ஸ்டேஷன் மாஸ்டர் வந்து ஒப்படைச்சாராம். நாங்க யாருமே இல்லை அப்போ. சரி மிஸ்டர் விவேக், என்னோட நீங்க ஸ்டேஷனுக்கு வரணும். அது உங்க வீட்டு கத்திதானான்னு சொல்லணும். அதிலே அவன் கைரேகை இருக்கணும்னு விருப்பப்படறேன். வாங்க போகலாம்.''

பத்து நிமிடங்களில் இரண்டு பைக்குகளும் ஸ்டேஷன் வாசலில் வந்து நின்றன.

மேஜை டிராயரிலிருந்து கர்ச்சீப்போடு இருந்த கத்தியை ஒரு வெள்ளைத் துணியால் சுற்றி வைத்திருந்ததை எடுத்து மேலே வைத்தார் ஹெட் கான்ஸ்டபிள் சிவராமன்.

வெள்ளைத் துணியைப் பிரிக்கவும்...



''ஆமாம் சார். இது எங்க வீட்டுக் கத்திதான்'' என்று கத்தினான் விவேக்.

''வெரிகுட்.. வெரிகுட்'' என்றார் உற்சாகமாய் முரளிதரன். எறும்புக்கு வெல்லம் இருக்கிற இடம் தெரிய வேண்டியதில்லை. அதோட வாசனையே போதும். இதோ நமக்கு முக்கியமான வாசனை கிடைச்சாச்சு. சிவராமன், இதை ராஜ்குமார் வந்ததும் உடனடியா பார்க்கச் சொல்லுங்க. ரேகை இருக்கணும்னு நம்பறேன். ஸ்டேஷன் மாஸ்டரே பார்த்தாராமா?'' என்று டெலிபோனை எடுத்தார் முரளிதரன்.

விவேக் அந்தக் கத்தியையும், அதில் படிந்திருந்த ரத்தக் கறையையுமே பார்த்துக் கொண்டிருந்தான். பாவி! எத்தனை ...த்துக்கள் நெஞ்சில், இந்த சின்ன ஆயுதத்தால். ஏண்டா? ஏன்? என்ன செய்தாள் அவள்? உனக்கு அவள் மேல் என்ன பகை?

''ஹலோ, நான் மாயவரம் இன்ஸ்பெக்டர் முரளிதரன் பேசறேன். நீங்க இன்னும் எவ்வளவு நேரம் ஸ்டேஷன்ல இருப்பீங்க? ஒரு அரை மணி நேரத்திலே அங்க வரேன் சார்'' என்று கழற்றி வைத்திருந்த தொப்பியை அணிந்து கொண்டார்.

''விவேக், உங்களை நாளைக்கு சந்திக்கிறேன். உங்க சிஸ்டர் கேஸ் விஷயமாத்தான் போறேன். வரட்டுமா?''

''சார், நாங்களும் உங்க கூட வர்றோமே...''

''தேவையில்லை விவேக். இது என்னோட வேலை.''

''நான் தொந்தரவு எதுவும் பண்ணலை. உங்க நடவடிக்கைகளை மௌனமா கவனிக்கறேன் சார்.''

''அப்ப வாங்க.''

அவர்கள் புறப்பட்டார்கள்.

★ ★ ★

விஜிக்கு உடனே வியர்த்தது. விறு விறு என்றது. எழுந்தான். எதிரே சின்ன ட்ரேயைச் சுற்றி நடந்து வந்து ரவியின் சட்டைக் காலரைப் பிடித்தான். தூக்கினான்.

''என்ன சொல்றே? நான் மாட்டிக்குவேனா? கத்தியை எறிஞ்சது ...த்தனமா? ரவி உனக்குத் தெரியும். நான் செய்யலை.

செய்யலைன்னு சொல்லு. கமான், சொல்லுடா. நான் செய்யலைன்னு சொல்லுடா, சொல்லுடா.''

ரவியை உலுக்க... அவனுக்கு லேசாய் பயம் தொற்றிக் கொண்டது.

''நீ செய்யலை விஜி, எனக்கு தெரியாதா விஜி, நீ செய்யலை'' என்றான் அவசரமாக.

''குட். எனக்கும் அதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் ஃப்ரீ - ஒரு காத்து மாதிரி. கம்ப்யூட்டர் சயின்ஸ் கத்துக்கப் போறேன். க்யூப் சால்வ் பண்ணனும். கஜுராஹோ சிற்பங்கள் பார்க்கலாம் ரவி. பார்த்திருக்கியா நீ? ஹாங்காங் போய் மசாஜ் பண்ணிக்கணும். சிலோன்ல இளநீர் குடிக்கணும். சவூதி அரேபியோ போய் அடல்ட்ரி பண்றவனை மைதானத்தில் வச்சு தலையை சீவுறதை பார்க்கணும். பிரமிட் பார்க்கணும். ஈஃபில் டவர் ஏறணும். புதுக்கவிதை எழுதணும். கல்யாணம் பண்ணிக்கணும். பொண்டாட்டி கர்ப்பமா இருக்கிறப்போ அவ உப்பின வயித்தை தடவிப் பார்க்கணும். மினிக்காய் தீவு போய் ஒரு கேஸட் முழுக்க பாடணும். அன்னை தெரஸாவை சந்திச்சு அவங்க கையை முத்தமிடணும்.''

விஜி மூச்சு விடாமல் வேர்க்க வேர்க்க தொடர்பில்லாமல் சொல்லிக் கொண்டே இருக்க...அவனை அப்படியே கைத்தாங்கலாக மாடியிலிருந்து தன் அறைக்கு அழைத்து வந்தான் ரவி.

''விஜி, முதல்ல படு. தூங்கு.''

''வாழணும்டா ரவி, இன்னும் நிறைய இருக்குடா. நான் செய்யலைடா. அவளை எனக்குத் தெரியாதுடா. புல்லாங்குழல் கத்துக்கணும் ரவி முறைப்படி.''

''கத்துக்கலாம் விஜி. மொதல்ல படு. இந்த மாத்திரையைச் சாப்பிடு'' என்று விஜியின் சட்டைப் பையிலிருந்து வெஸ்பாரெக்ஸ் எடுத்துக் கொடுத்து அவனை குடிக்க வைத்தான்.

விஜி சற்று நேரத்தில் உறங்கிப் போனான். ஆனாலும் அவன் உதடுகள் சன்னமாக முனகிக் கொண்டிருந்தன. ரொம்ப நேரம் அவனையே தளும்பும் கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்த ரவி, தன் படுக்கைக்கு சென்று படுத்த போது...

விஜி புரண்டு படுத்து... கொஞ்சம் உரக்க காற்றோடு பேசினான்.



''நோ. இது தப்புங்க. வேணாம். இது தப்புங்க. சவுதி அரேபியாவில தலையைச் சீவிடுவான். எனக்கு வெடவெடங்குது. தப்பு ஷ்யாமா, இது தப்பு.''

> **பிரியமான நீயே,**
>
> அவனைக் கண்டதும் கேட்டேன்;
> 'சிவனை எதிர்த்தியே, இதோ என் காதலி
> இந்தக் கூந்தலை முகர், சொல்,'
> இயற்கையில் பெண்களின் கூந்தலுக்கு
> மணமில்லையா? என்று.
> நக்கீரன் என் இப்படி ஓடுகிறான்?
>
> **பிரியங்களுடன் நானே.**

## 7

குற்றாலம் ஸ்டேஷனுக்கு இன்ஸ்பெக்டர் முரளிதரனும், விவேக் மற்றும் சுகுமாரும் வந்தபொழுது செங்கல்பட்டு திருச்சி பாசஞ்ஜர் நின்று கொண்டிருந்தது.

அதை அனுப்பி டாட்டா காட்டி விட்டு, விளக்கை எடுத்துக் கொண்டு ஸ்டேஷன் மாஸ்டர் வந்து, ஃபேனைத் தட்டி விட்டுவிட்டு, ''உட்காருங்க சார்'' என்றார்.

தன் சீட்டில் உட்கார்ந்தார். ஒரு ட்யூப்லைட் கர்ர்ர் என்று கத்திக் கொண்டிருந்தது.

''என் பேர் முரளிதரன். இவர் விவேக். மெட்ராஸ்ல படிச்சிக்கிட்டிருக்கார். இவர் இவரோட ஃப்ரண்டு. உங்க பேரென்ன சார்?''

''நித்யானந்தன்.''

''நீங்க ஸ்டேஷன்ல ஒப்படைச்ச கத்தி, ஒரு கொலை விவகாரத்திலே முக்கியமான சாட்சியம். நேத்து நடுராத்திரி இவரோட சகோதரியைக் கொலை பண்ணிட்டு கொலைகாரன் தப்பிச்சிட்டான்.''

''ச்சொச்சோ... எதுக்காக?''

''அது இன்னும் புரியாம இருக்கு. இந்தக் கத்தியை நீங்க எந்த எடத்திலே கிடந்து எடுத்தீங்க?''

''கும்பகோணம் போற லைன்ல ரெண்டு தண்டவாளத்துக்கும் நடுவிலே ஸ்லீப்பர் கட்டை மேல கிடந்திச்சு. நான் சிகரெட் வாங்கலாம்னு டார்ச் எடுத்துக்கிட்டு கிளம்பிப் போனேன் ராத்திரி. அப்போ பார்த்தேன்.''

''எத்தனை மணிக்குன்னு சொல்ல முடியுமா?''

''காலைல நாலு, நாலு பத்து இருக்கும்.''

முரளிதரன் ஒரு நிமிடம் யோசனையில் இருந்தார்.

''போலீஸ் நாய்கள் ஜங்ஷன் வரைக்கும் வந்திச்சு. அதுக்கப்புறம் அதால தொடர முடியலை. ரயில் மார்க்கத்திலே தப்பிச்சிருக்கான்னு தீர்மானிச்சோம். எந்த திசை, எந்த ஊர்ன்னு எப்படிக் கண்டுபிடிக்கிறதுன்னு குழம்பினோம். இப்போ சுத்தமா புரிஞ்சு போச்சு. ரயில்ல பிரயாணம் பண்றப்போ கத்தியைப் போட்டிருக்கான். தண்டவாளத்துக்கு நடுவிலே கத்தி விழணும்னா...''

''பாத்ரூம்ல ஃப்ளஷ் அவுட் வழியா போட்டிருக்கணும்'' என்றான் விவேக்.

''கரெக்ட். சார், நீங்க காலையிலே நாலு மணிக்கு கத்தியை கண்டு எடுத்ததா வச்சுக்கலாம். அதுக்கு முன்னாடி... பி.எம்.ரிப்போர்ட்படி அந்தப் பொண்ணு இறந்தது ராத்திரி ஒண்ணு முப்பதுக்கு... சரியா ஹார்ட்லயே இரண்டு குத்து விழுந்திருக்கு. ஆக, கொலை நடந்தவுடனேயேஅவ இறந்துட்டா. அதுக்கப்புறம் கொலைகாரன் ஜங்ஷன் வந்திருக்கான்'' என்றார் இன்ஸ்பெக்டர் பரபரப்பாய்.

''நீங்க என்ன கேக்க வர்றீங்க இன்ஸ்பெக்டர்?''

''வர்றேன். இப்போ எனக்குத் தெரிய வேண்டிய அடுத்த விபரம் ராத்திரி ஒன்றரை மணியிலேர்ந்து நீங்க கத்தியைப் பார்த்த நாலு மணிக்குள்ளே மாயவரத்திலேர்ந்து இந்த மார்க்கமா குற்றாலத்தைக் கடந்து சென்ற ரயில்கள் எத்தனை? என்னென்ன?''

ஸ்டேஷன் மாஸ்டர் உற்சாகமாய்ச் சொன்னார். ''ரெண்டே ரெண்டு ரயில்தான் இன்ஸ்பெக்டர். திருப்பதி - மதுரை எக்ஸ்பிரஸ், மெட்ராஸ் - ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ். ரெண்டுமே இந்த ஸ்டேஷன்ல நிற்கிறதில்லை.''



முரளிதரன் பேப்பர் எடுத்துக் கொண்டு, பேனா எடுத்துக் கொண்டு, ''ரெண்டோட டயத்தையும் சொல்லுங்க.'' என்றார்.

''மதுரை எக்ஸ்பிரஸ் மாயவரத்திலே ரெண்டு இருபதுக்குக் கிளம்பறான். இராமேஸ்வரம் ரெண்டு நாப்பத்தஞ்சுக்குக் கிளம்பறான்.''

''இந்த ரெண்டு ட்ரையின்ல கூட ஒண்ணை நாம இப்பவே விலக்கிடலாம்னு நினைக்கிறேன்.''

''எப்படி?''

''ஒரு கொலைகாரன் கொலை பண்ணதும் என்ன செய்ய நினைப்பான்?''

''தப்பிக்க நினைப்பான்.''

''உடனேயாவா, சாவகாசமாவா?''

''எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம்.''

''விவேக், உங்க வீட்லேர்ந்து ஜங்ஷனுக்கு ஒருத்தன் நடந்து வர எவ்வளவு நேரமாகும்?''

''அதிகமாப் போனா இருபது நிமிஷம்தான் ஆகும்.''

''போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் சொல்றபடி கொலை எத்தனை மணிக்கு? ஒன்றரைக்கு, இல்லையா? அங்கேர்ந்து ஜங்ஷனுக்கு இருபது நிமிஷம் வேணாம், முப்பது நிமிஷமே வைங்க... என்ன ஆச்சு? ரெண்டு மணி. ரெண்டு மணிக்கு ஜங்ஷன் வந்த கொலைகாரன் ரெண்டு இருபது ரயிலுக்கு ஏறுவானா, இல்லே... பொறுமையா முக்கால் மணி நேரம் காத்திருந்து ரெண்டே முக்காலுக்குப் புறப்படுவானா? ஆகவே, திருப்பதி - மதுரை எக்ஸ்பிரஸ்லதான் ஏறியிருக்கணும்'' என்றார் முரளிதரன்.

''சரியாச் சொன்னீங்க'' என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

முரளிதரன் கையில் இருந்த பேப்பரில் சில விபரங்களைக் குறித்துக் கொண்டார். பேனாவின் தலையைக் கொஞ்ச நேரம் ஆழமாய் முத்தமிட்டுக் கொண்டிருந்தார்.

''ஏன் சார், இந்த எக்ஸ்பிரஸ் மாயவரத்துக்கு எத்தனை மணிக்கு வருது?''

''ஒரு நிமிஷம்'' என்று கைடைப் புரட்டிப் பார்த்து விட்டு, ''ரெண்டு பத்துக்கு வருது. பத்து நிமிஷம் நின்னு ரெண்டு இருபதுக்குப் புறப்படுது.''

''இருங்க.கைடை மூடிடாதீங்க. பக்கம் சொல்லுங்க.'' என்று கைடை வாங்கிப் பார்த்து ''இது நேரா மதுரை போறதில்லையா? திருச்சியிலே ரெண்டு மணி நேரம் இருக்கும்னு போட்டிருக்கு.''

''ஆமாம். அப்படித்தான்.''

''அப்போ திருச்சி வரைக்கும் போறவங்கதான் இந்த ரயில்ல ஏறுவாங்க இல்லையா? மாயவரத்துக்கும், திருச்சிக்கும் நடுவிலே சின்ன ஊர்களை விட்டுட்டா, பெரிய ஊர்கள் என்னென்ன?''

''கும்பகோணம், தஞ்சாவூர் ரெண்டுதான் பெரிய ஊர். அப்புறம் ஆடுதுறை, திருவிடைமருதூர், பாபநாசம், அய்யம்பேட்டை, திருவெரம்பூர்.''

''தாங்க்யூ சார். இந்தக் கத்தியை இந்த மாதிரி அவன் ரயில்வே பிரயாணம் பண்ணினப்போ போட்டதாலே, வசமா க்ளூ கொடுத்தான். என்னால நிச்சயமா சொல்ல முடியும். அவன் இந்த எக்ஸ்பிரஸ்லதான் ஏறியிருக்கான். மாயவரத்திலேர்ந்து, திருச்சிக்குள்ள ஒரு ஊர்ல இறங்கியிருக்கான். எத்தனை பெரிய தகவல் பாருங்க. அடுத்தது இப்போ நான் பாக்க வேண்டியது மாயவரம் ஜங்ஷன், அங்கே நிறைய தகவல் சேர்க்கணும்'' என்று எழுந்தார் முரளிதரன்.

மாறி மாறி கைகுலுக்கி வெளியே வந்தார்கள். விவேக்குக்குள் ஒரு ஜுரம் உச்சத்தை நோக்கி உயர்ந்து கொண்டிருந்தது. ''இன்ஸ்பெக்டர், அவனைப் பிடிச்சிடுவிங்களா?'' என்றான்.

''நிச்சயமா'' என்று இன்ஸ்பெக்டர் பைக்கை ஸ்டார்ட் செய்தார். பைக்குகள் புறப்பட்டன.

★ ★ ★

திருச்சி.

மெயின் கார்ட் கேட்டில், திரு.நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுக்குச் சொந்தமான அந்த ரோடு மக்களின் ஒரே தேவை



துணி, துணி, துணி மட்டுமே என்று சொல்லிக் கொண்டிருந்தது.

தெப்பக்குளம் அருகே 'சரவணா எக்ஸ்ரே கிளினிக் மற்றும் ரத்தப் பரிசோதனை நிலையம் - மாடியில்' என்று பெரிதாக உள்ள போர்டு சரஸ்வதி பூஜை கொண்டாடி முடித்திருந்தது. 'மாடிக்குப் போகும் வழி' என்று மற்றொரு சின்ன போர்டு அம்புக்குறி தாங்கி வழிகாட்டியது.

மாடிக்குப் போகும் வழியில் ஆஸ்பத்திரி வாடை ஆரம்பித்திருந்தது.

குனிந்து வரவும்.

வந்தால்... சுவர் பூரா மருந்துக் கம்பெனிகளின் உபயங்கள். எல்லாக் குழந்தைகளும் புஷ்டியாக கட்டை விரல் சப்பியது, கப்பல் விட்டது, தவழ்ந்தது, சிரித்தது, நாயைத் தடவியது. எந்த வயதில் என்ன செயல் குழந்தைக்குத் துவங்கும் என விபர சார்ட்டுகள், மனித உடம்பை நெடுக்கு வெட்டுத் தோற்றத்தில் பாகம் குறித்து விளக்கும் போஸ்டர், கர்ப்பிணிப் பெண்கள் கர்ப்பம் உறுதி செய்து கொள்ள ஹெச்.சி.ஜி. டெஸ்ட் சிறந்தது என கண்ணாடியில் ஃப்ரேம் போட்டு மாட்டி... இன்னும் சொல்லலாம். இமுவை போதும்.

எக்ஸ்ரே யூனிட் தனியாக ஒரு பெரிய அறையில் இருந்தது. திரு.நரசிம்மன் அந்த அறையை ஒட்டினாற் போலிருந்த தன் அறையில் மேஜையில் இரண்டு கைகளையும் ஊன்றி, கன்னத்திற்குத் தொடர்பு ஏற்படுத்தி வைத்து அந்த புத்தகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அது 'Of course, I love you' புத்தகம்.

''சார்'' என்று அவரைக் கலைத்தாள். ஜாக்கெட் - வெள்ளை, புடவை - வெள்ளையாக மைதிலி.

''என்ன மைதிலி?''

''ஆடியோ கிராஃப் ஒண்ணு பார்க்கணும். கேசவன் அனுப்பியிருக்கார்.''

''வரச் சொல்லு.''

அவள் வரச் சொல்லி, வந்தவர் காதில் ஹெட்போனை மாட்டி விட்டு, இந்த உபகரணத்தைத் திருகி, வால்யூம் கூட்டி, ''இப்ப

கேக்குதா, இப்ப? இப்ப? இப்ப?'' சின்சியராய் குறித்துக் கொண்டு அப்புறம் சார்ட் போட்டுக் கொடுத்தனுப்பிவிட்டு...

மறுபடி அந்தப் புத்தகத்தையே பார்த்தார் நரசிம்மன்.

''எக்ஸ்க்யூஸ் மி சார். நேத்திலேர்ந்து நீங்க ஒரு மாதிரி இருக்கீங்க. என்ன விஷயம் சார்?'' என்றவள் பெயர் நீங்கள் அறிவீர்கள்.

''இந்தப் புத்தகம்! இந்தப் புத்தகம்தான் என்னைத் தொந்தரவு பண்ணுது மைதிலி. இப்படி உட்கார். வெளியில யாரும் இல்லையே?''

''இல்லை சார்.''

''நேத்து காலையிலே. நான் திருச்சில இறங்கறப்போ ரயில்ல கிடந்ததா என் பையன் இந்தப் புத்தகத்தை எடுத்துக் கொடுத்தான். பாரேன்... இந்த சிகப்பு புள்ளிகள் என்ன? உறைஞ்ச ரத்தம். சுத்தமா உறைஞ்சிடுச்சு. லேபரட்டரிக்கு லாயக்கில்லாத நிலை. பிராணியோடது இல்லை. மனிதனோட ரத்தம்தான்ங்கிறதை மட்டும்தான் என்னால உறுதி செய்ய முடியுது.''

''உங்க கைக்கு வந்தப்போ கொஞ்சம்கூட ஈரப்பசை இல்லையா சார்?''

''இல்லை, ஸீரம் கண்டென்ட் இல்லாம க்ருபுக்கு போக முடியலை. இது டெஸ்ட் ஆங்கிள். இதை விடு. ரயில்ல பிரயாணம் செய்றான் ஒருத்தன். அவன் கையிலே ஒரு பெட்டி. அதுக்குள்ளே ஒரு புத்தகம். அது மேல உறைஞ்ச ரத்தப் புள்ளிகள். எங்கயோ லாஜிக் இடிக்குது மைதிலி. தெறிச்சு, சிதறின மாதிரி இருக்கு இது. ஏதோ ஒரு பெரிய குற்றம் நடந்திருக்கணும்னு எனக்குள்ளே சொல்லுது.''

''என்ன சார் இத்தனை சீரியஸாப் பேசறிங்க?''

''பின்னே? இங்கே பாரேன். நல்லாப் பாரு. புண்ணுலேர்ந்து சொட்டின ரத்தம் மாதிரி தெரியலை இது. ஒரு உடம்பிலேர்ந்து பீய்ச்சி அடிச்சப்போ பட்ட துளிகள் மைதிலி.''

''ஒத்துக்கறேன் சார். நீங்க சொல்ற மாதிரி அந்த சூட்கேஸ்காரன் ஒரு கொலைகாரனா இருக்கலாம். அப்போ நீங்க இந்த விபரங்களை போலீஸ்ல சொல்லிடறது நல்லது. புத்தகத்தை திறந்து பார்த்துட்டீங்களா? உள்ளே எதுவும் விபரங்கள் இருக்கா?''



''ஓ! முதல் பக்கம் பார்.''

நரசிம்மன் புத்தகத்தின் அட்டையைத் திறந்தார்.

முதல் பக்கத்தில்...

'பிரியமான நீயே,

பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

பிரியங்களுடன்,

நானே.'

நகர் கிளை நூலகம் சென்னை - 49

தவிர பக்கத்தின் மூலையில் வட்ட[illegible] ஸ்டாம்ப் அடித்திருந்தது. அந்த வட்டத்துக்குள்... 'மணி புத்தக நிலையம், தஞ்சாவூர்'

59390/6362734

மைதிலி புத்தகத்தை கையில் எடுத்தாள்.

''தஞ்சாவூர்ல எந்தக் கடையில புத்தகம் வாங்கினதுன்னு தெரியுது. பேர் எதுவும் இல்லையே சார்.''

ரூ100/-

''இந்தப் புத்தகம் இருந்தது அந்த இளைஞன்கிட்டே. ஆகவே, இது காதலி, காதலனுக்கு கொடுத்த புத்தகப் பரிசு. காதலன் பேர் தெரியும். மைதிலி.''

''எப்படி சார் தெரியும்?''

''நேத்து ராத்திரி பூரா சுப்புவைக் குறுக்கு விசாரணை செஞ்சு வச்சிருக்கேனே, அவன் எப்படி இருந்தான், என்ன கலர் சட்டை, நீ பேசினியா, அவன் யார் கூடவாவது பேசினானா இப்படி கேட்டுத் தெளிச்சு ஒரு டிம்மி முழுக்க ரிப்போர்ட் மாதிரி எழுதி வச்சிருக்கேன்.''

''அப்போ நீங்க போலீஸ்ல இந்த விரங்களைச் சொல்லிடறதுதான் சரி. இந்தாங்க புத்தகம்'' என்று மேஜை மேல் போட... புத்தகம் முனையில் பட்டு கீழே பிரிந்து விழ... எடுக்கக் குனிந்தவள், ''சார் இந்தப் பக்கத்திலே கையெழுத்து இருக்கு சார்'' என்று உற்சாகமாய் எடுத்துக் காட்டினாள்.

அந்தப் பக்கத்தின் மேல் வெள்ளைப் பகுதியின் ஓரத்தில், பென்சிலத்தில் 'சித்ரா' என்று கையெழுத்து போடப்பட்டிருந்தது.

**பிரியமான நீயே,**

மதுரையில், கொடியில் காணவில்லை
என செய்தி சொன்னான். இதுவா பார் என
உன் விழிகளைக் காட்டினால் ஆம் என்கிறான்.
எப்போது திருடினாய்?

**பிரியங்களுடன் நானே.**

## 8

''மனமே! நீயிதை
ஆழ்ந்து கருதி ஆய்ந்தாய்ந்து பலமுறை
சூழ்ந்து, தெளிந்து, பின் சூழ்ந்தார்க்கெல்லாம்
கூறிக்கூறிக் குறைவறத் தேர்ந்து
தேறித் தேறி நான் சித்தி பெற்றிடவே
நின்னாலியன்ற துணை புரிவாயேல்,
பொன்னால் உனக்கொரு கோயில் புனைவேன்
மனமே! எனை நீ வாழ்த்திடுவாய்!''

-பாரதியார்

என்னும் வரிகள் சுவரில் கண்ணாடி ஃப்ரேம் போட்டு தொங்கிக் கொண்டிருக்க, டேப் ரிக்கார்டர் இயங்கிக் கொண்டிருந்தது.

அறை குளிர் சாதன வசதி செய்யப்பட்டிருந்தது. தொண்ணூறு சதவீத இருள். மேஜை விளக்கு மீதி பத்து சதவீத வெளிச்சத்தை உற்பத்தி செய்து கொண்டிருந்தது.

முகம் வியர்த்திருக்க... சொகுசான அந்தச் சாய்வு நாற்காலியில், கிட்டத்தட்டப் படுத்திருந்தான் விஜி.

எதிரே ரிவால்விங் சேரில் கைகளை மார்பின் குறுக்காகக் கட்டிக் கொண்டு விஜியையே பார்த்துக் கொண்டிருந்தார் டாக்டர்.

''சொல்லுங்க விஜயராகவன். உங்க ஃப்பார்ம் ஹவுஸ்ல மோட்டார் வேலை செஞ்சி தண்ணி கொட்டும், அப்புறம்...''

''நீங்க பார்த்திருக்கீங்களா டாக்டர் அந்தக் காட்சியை?''



''சினிமாக்கள்ல.''

''உலக அதிசயங்கள்ல தண்ணீர் ஒண்ணு டாக்டர். என்னென்ன செய்யும் தெரியுமா? சிரிக்கும், சிதறும், ஓடும், உடையும், தவளும், தலை வரும், தழுவும், பயமுறுத்தும். குற்றாலம் போயிருக்கீங்களா?''

''நயாகராவே பார்த்திருக்கேன் விஜயராகவன்.''

''விஜின்னு கூப்பிடுங்க. தண்ணி மனிதனோட மனநிலையிலே மாறுதல் உண்டு பண்ணும். நான் சொல்றது சரியா?''

''சரி, நாம பேசிக்கிட்டிருந்ததை விட்டுட்டோம். சொல்லுங்க. தஞ்சாவூர் பக்கத்திலே இருக்கிற உங்க பண்ணை பத்திச் சொல்ல வந்தீங்க.''

''அது அப்புறம். நான் மழையை விரும்பறனே. சொட்டுச் சொட்டா தண்ணி, தரை முழுக்க கொப்பளங்கள் புறப்பட்டு உடைஞ்சு... அன்னிக்குக் கூட மழை.''

''என்னைக்கு?''

விஜி உடனே அமைதியானான்.

''சொல்லுங்க விஜி. என்னைக்கு மழை?''

பார்வை நிலைகுத்தியது. நெற்றியோரத்தில் நரம்புகள் துடித்தன.

''நோ. நம்புங்க டாக்டர். நான் இல்லை'' என்று கத்தத் தொடங்கினான். எழ முயற்சித்தான்.

டாக்டர் எழுந்து அவன் தோள்களை அழுத்தி உட்கார வைத்து, ''சரி நான் எதுவும் கேட்கலை. நாம பேச வேணாம். ரெஸ்ட் எடுத்துக்குங்க.''

அப்படியே அமைதியாய் அமர்ந்திருந்தான் விஜி. அவன் உதடுகள் திரும்பத் திரும்ப, ''மழை, மழை'' என்று உச்சரித்துக் கொண்டிருந்தன. டாக்டர் ஒரு இன்ஜெக்ஷன் போட்டு விட்டு டேப்பை ஆஃப் செய்தார்.

மேஜை மேலிருந்த அழைப்பு மணியை அழுத்தினார்.

கதவைத் திறந்து வந்த பையனிடம், ''ரவிங்கிறவர் வெளியிலே இருக்கார். உள்ளே வரச் சொல்லு'' என்றார். அறையில் மற்ற விளக்குகளைப் போட்டார். தன் நாற்காலியில் வந்து அமர்ந்து விஜியைப் பார்த்தார். கண்கள் செருகிய நிலையில் சாய்ந்தவாறு

உறங்கத் துவங்கியிருந்தான்.

''வா, ரவி உட்கார்.''

ரவி வந்து எதிரே அமர்ந்தான். மேஜை மேல் R.பார்த்திபன், M.B.B.S., D.P.M., என்று பிளாஸ்டிக் எழுத்துக்கள் சொன்னது. மேஜையின் மேல் கண்ணாடிக்கு அடியில் ஒரு அச்சடித்த வாக்கியம் செருகப்பட்டிருந்தது.

'பறவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதை உங்களால் தடுக்க முடியாது; ஆனால் உங்கள் தலைமுடியில் அவை கூடு கட்டாமல் தடுக்க முடியும்.'

''சொல்லு பார்த்தி, என்ன அவனுக்கு?''

''ஸ்கிஸஃப்ரேனியா' வியாதின்னு நான் நினைக்கிறேன்.''

''பயமுறுத்தாதே பார்த்தி.''

''இல்லை ரவி. மற்ற வியாதிகளுக்கு இதுதான் டெஸ்ட்ன்னு குறிப்பா இருக்கு. போன் ப்ராக்ச்சர்ன்னா எக்ஸ்ரே பேசும். அல்ஸர்ன்னா பேரியம் ட்ரீட்மெண்ட், இருதயம் சம்பந்தப்பட்டதுன்னா ஈ.சி.ஜி. ஆனா மனோ வியாதிக்கு... நாம அத்தனை சுலபமா கண்டுபிடிக்க முடியாது. பேஷண்ட்டை பேச விட்டுக் கவனிக்கணும். என்ன மாதிரி நடந்துக்கிறார்னு போலீஸ் சி.ஐ.டி. மாதிரி அந்த நோயாளியைச் சேர்ந்தவர்களை விசாரிக்கணும். நான் உன் ஃப்ரண்ட் விஜிகிட்டே போன ஒரு மணி நேரமா பேசினதிலே... ரெண்டு மூணு தடவை ஒரு மாதிரி ஆயிட்டார். நீ என்கிட்டே சொன்ன குழப்பமான அந்த சமீபத்து நிகழ்ச்சி ரொம்ப பாதிச்சிருக்குது.''

''இங்கே சிகரெட் குடிக்கலாமா பார்த்தி?''

''வேணாம். அவர் ரெஸ்ட் எடுக்கட்டும். நாம பிரைவேட் ரூமுக்குப் போகலாம்.'' அத்தோடு இணைந்த டாக்டரின் பிரைவேட் அறைக்குள் வந்தார்கள்.

''சிகரெட் பிடிச்சுக்கிட்டே பேசு.''

சிகரெட்டைக் கொளுத்தாமல் கேட்டான் ரவி, ''அந்த நிகழ்ச்சியோட பாதிப்புன்னு சொல்றியா இதை?''

''இப்படியும் இருக்கலாம். ரவி, நான் சொன்ன அந்த வியாதி சிறுக சிறுக வளர்ந்து அதோட உச்சத்திலே அந்த நிகழ்ச்சி நடந்திருக்கலாம்.



இன்னும் சொன்னா இந்தக் கேஸை நான் எடுத்துக்கவே கூடாது. என்கிட்டே எல்லா விபரங்களையும் சொன்னப்போ... விஜி ...ச்சிக்கு எங்கே ரயில் ஏறினதா சொன்னே?''

''மாயவரத்திலே.''

''இதோ பார், பேப்பர். படி. நேத்து மாயவரத்திலே மர்மமான ...றையிலே கொலை நடந்திருக்குது. கொலை செய்யப்பட்டது ...ராங்கிற பெண். நான் உண்மையான குடிமகன்னா விஜியை ...ஸ்ல ஹாண்ட் ஓவர் பண்ணனும். அப்புறம்தான் ட்ரீட்மெண்ட் ...லாம்.''

''ஏண்டா அதுக்காகவா அவனை உங்கிட்டே கூட்டிட்டு வந்தேன்? ...செய்தியை முழுக்க முழுக்கப் படிச்சிடறேன்.''

ரவி பேப்பரில் வந்திருந்த செய்தியை பரபர என்று படித்தான்.

படித்து விட்டு ''அடப்பாவி! இவனும் மங்களம்னு தாண்டா சொன்னான்.''

''யார் மங்களம்?''

''பொண்ணோட அம்மா பேரு மங்களம்னு சொன்னான். இங்கே ...ளம்னு போட்டிருக்கு. இவன் கைல கத்தி இருந்ததா... அவ ...க் கிடந்ததா... கத்தி ஒரே ரத்தமா இருந்ததா... இவன் அவசர ...ரமா கிளம்பி வந்துட்டதா சொன்னான். அப்போ?''

''விஜி அந்தக் குற்றத்தைச் செஞ்சிருப்பான் ரவி.''

''ஏன்? ஏன் பார்த்தி? அவ யாரு? இவன் யாரு? எதுக்காக?''

''ஸ்கிஸஃப்ரேனியா'' என்றான் பார்த்தி.

அவனை உற்றுப் பார்த்தான் ரவி.

''அவனை பைத்தியம்னே முடிவு பண்ணிட்டியா?''

''பைத்தியம்கிறதெல்லாம் பெரிய வார்த்தை ரவி, மூளைக் ...றாறு சைகோபத்ஸ்லே ரெண்டு மூணு வகை உண்டு. உனக்குத் தெரியுமா, கவிஞர் கண்ணதாசன் கூட ஒரு சைகோபத். ஆனா அவர் ...டிவ் அண்ட் அக்ரசிவ் சைகோபத். இந்த விஜி கிரிமினல் ...கோபத், பேசறப்போ நல்லாத் தெரியுது. நல்ல அறிவாளி. நிச்சயம் ...டுத்துப் பார்த்தா 110 டிகிரிக்கு மேலே இருக்கும்.''

மௌனமாயிருந்தான் ரவி.

''என்ன ரவி, மௌனமாயிட்டே?''

''எனக்கு எதுவும் புரியலை. என்ன செய்றதுன்னே தெரியலை. எத்தனை பெரிய சிக்கல்? பேசறப்போ நல்லா பேசறான். எப்படி இவனுக்கு மனோவியாதி வந்திச்சு?''

''அதை இனிமேதான் ஆராயணும். அதுக்கப்புறம் தான் சிகிச்சை.''

''சிகிச்சை இருக்கட்டும். வீட்டை விட்டுக் கோவிச்சிக்கிட்டு வந்ததாய்ச் சொன்னான். இப்போ இவங்கப்பாவுக்கு தகவல் தர்றதா இல்லையா?''

''ரவி அதுக்கு முன்னாடி போலீசுக்குத் தகவல் தந்துடணும்.''

''விளையாடறியா? போலீஸ்ல இவனை மாட்டி வைக்கவா நான் உன்கிட்டே வந்தேன்?''

''ரவி, சின்னப் பிள்ளைத்தனமா பேசாதே. ஒரு மூளைக் கோளாறு உள்ளவன் ஏதோ ஒரு காரணத்திலே மனம் பிசகினதோட விளைவா முழுசா ஒரு கொலையைப் பண்ணிட்டு வந்து இருக்கான். நாம ஒரு கொலைய மறைக்கிறதே தப்பு.''

''ஷட் அப் பார்த்தி. அவன் ஒண்ணும் கொலையாளி இல்லை. யார் பார்த்தது? என்ன சாட்சி? அவனா உளறினதாலே தானே நாம் தெரிஞ்சிகிட்டோம்? அந்தக் கொலை இவன் தான் செஞ்சான்ங்கிறதே நிச்சயமா நமக்குத் தெரியாது. வேற யாராவது கொலை செஞ்சதைப் பார்த்ததால் இவனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். அந்தச் சமயத்திலே இவன் கைல கத்தியைச் செருகிட்டு கொலைகாரன் ஓடியிருக்கலாம். விஜியால தெளிவா எதையும் சொல்ல முடியலை.''

''ரவி, நீ அநாவசியமா வம்பிலே மாட்றே. அந்தக் கொலை வேற யாரோ செஞ்சுதா? சரி, மெட்ராஸ் எக்மோர் வந்த உன் ஃப்ரண்ட் எதுக்காக மாயவரம் போனான்னு அவனால விளக்க முடியலை. அந்த வீட்டுக்கு ஏன் போனான்னு அவனால விளக்க முடியலை. என்னால முடியும். அந்தச் சமயங்கள்ல அவன், அவனுக்கப்பாற்பட்ட கட்டளைகளுக்கு பணிஞ்சிருக்கான் ரவி. அதை கமாண்டிங் ஹல்யூசினேஷன்னு சொல்லலாம்.''

ரவி வேகமாக எழுந்தான்.

''பார்த்தி, ஒரு சைக்கியாட்ரிஸ்ட்டா பேசாதே. ப்ளீஸ்! அவனையும் உன் நெருங்கிய சிநேகிதனா நினைச்சுக்கோ. அவனுக்கு



...னி செய். எத்தனை கனவுகள் தெரியுமா இவனுக்குள்ளே. இன்னும் கல்யாணமாகலை. இவன் வாழ்க்கையைச் சிதறடிச்சுடாதே.''

''இவன் கொலை செஞ்சான்னு நிரூபணம் ஆயிடுச்சுன்னா இவன் இந்த வியாதியால பீடிக்கப்பட்டு, அதனாலேதான் செயல்பட்டான். அவனா செயல்படலைங்கிறதை நிருபிச்சிடலாம். கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடல் சைக்கியாட்ரிஸ்ட்ஸ் கிட்டே அனுப்பி, அவங்க ரிப்போர்ட்படி மனநோய் மருத்துவமனைக்குத்தான் இவனை அனுப்பி வைப்பாங்க போலீஸ் பாதுகாப்போட. வேற தண்டனைகள் எதுவும் கிடையாது ரவி.''

''ட்ரீட்மெண்ட்டுக்குப் பிறகு இவன் மறுபடி சமுதாயத்துக்கு வர்றப்போ ஒரு குற்றவாளியாத்தான் பார்க்கும். ஒரு பைத்தியமாத்தான் பார்க்கும். உடைஞ்சு போய்டுவான். இந்தக் கொலையை இவன்தான் செஞ்சான்னு வச்சுக்குவோம். என்ன காரணம்? ஒண்ணும் இல்லை. என்ன உறவு? ஒண்ணும் இல்லை. அந்த வியாதிதான் செஞ்சது. இப்போ இவன் சாதாரணமாத்தான் பேசறான். சமயங்கள்ல விலகறான். இவனை போலீஸ்ல காட்டிக் கொடுத்து, கோர்ட்ல நிறுத்தி, இவனுக்கு மூளைக் கோளாறுன்னு ஊர் பூரா பறை ஏத்த நான் தயாரா இல்லை. இவன் சுயநினைவோட இந்தக் கொலையைச் செஞ்சிருந்தா, மொதல்ல நானே போலீசுக்கு போன் பண்ணியிருப்பேன். இப்போ? இவனோட சமுதாய இமேஜை உடைச்சு இவன் நொறுங்கிப் போக நான் விடமாட்டேன். பார்த்தி, உனக்கு எதுவும் தெரியாதுன்னு நினைச்சுக்கோ. ஒரு பேஷண்ட்டா உன்கிட்டே ஒப்படைக்கிறேன். அவனைக் குணப்படுத்து. நாமா போலீசுக்குத் தகவல் தர வேணாம். இவனைத் தேடி வந்தா...அப்புறம் அது இவன் விதி. என்ன சொல்றே பார்த்தி?''

அமைதியாய் இருந்தான் பார்த்தி.

''ரவி, நான் சொல்ல வர்றதை...''

''நீ எதுவும் சொல்ல வேணாம். என்ன பிரச்னை வந்தாலும் நான் பார்த்துக்கறேன். விஜி, உன் நர்சிங் ஹோம்ல இப்பவே அட்மிட் ஆகறான். நீயாக போலீசுக்கு தகவல் தரக் கூடாது. மாட்டேன்னு சத்தியம் பண்ணு பார்த்தி.''

வலது கையை நீட்டினான் ரவி. கொஞ்சம் தயக்கத்திற்குப் பின் தன் வலது கையை இணைத்தான் பார்த்திபன்.

எக்ஸ்-ரே கிளினிக் வைத்திருக்கும் நரசிம்மன் அந்த ஆங்கிலக் கவிதைத் தொகுப்பு புத்தகத்தோடு பாலக்கரை போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்து, வெளியே போயிருந்த இன்ஸ்பெக்டர் வரும் வரை காத்திருந்து, வந்ததும்...

''குட்மார்னிங் இன்ஸ்பெக்டர்'' என்றார்.

> **பிரியமான நீயே,**
>
> நான் வளர்க்கும் கிளி நேற்று
> உன் பெயரை உச்சரித்தது எனக்கு வியப்பு.
> அதை நான் சொல்லித் தந்ததில்லை
> பின் எப்படி? ஓ! உறக்கத்தில் என் உதடுகள்
> உன்னைத்தான் உச்சரிக்கின்றனவோ?
>
> **பிரியங்களுடன் நானே.**

## 9

**1981-ம்** வருடம்.

மொத்தக் கொலைகள் - 27

கண்டு பிடிக்கப்பட்டவை - 25

''இதுக்குப் பின்னணியிலே ஒரு கொலை இருக்குன்னு நம்புறிங்க. அப்படித்தானே?'' என்ற கேள்விக்கு பதில் சொல்ல, குற்ற விபர சார்ட்டிலிருந்து கண்களை எடுத்தார் நரசிம்மன். ஊர் - திருச்சி, இடம் - பாலக்கரை போலீஸ் ஸ்டேஷன். ஃபேன் தயக்கமாய் ஓடியது.

''பதிஞ்சிருக்கிற இந்த ரத்தத் துளிகளுக்கு வேற எந்த விளக்கமும் என் மனசுக்குத் தோணலை சார்.''

இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி சிந்தனையுடன் டெலிபோனின் டயலைச் சும்மா டர்ரட்டு, டர்ரட்டு என்று சுற்றிச் சுற்றி விடுவித்துக் கொண்டிருந்தார்.

''வெல். உங்க கோணம் எனக்குப் பிடிச்சிருக்கு.



அலட்சியப்படுத்தாம ஸ்டேஷன் வந்து தகவல் சொல்லி ஒப்படைச்சதுக்கு ரொம்ப தாங்க்ஸ். உங்க பையனை விசாரிச்சு, அவனைப் பத்தி குறிச்சு வச்ச விபரங்களைத் தந்துட்டிங்க. உங்க அட்ரஸ் என்கிட்டே இருக்கு. என்ன செய்யணுமோ செய்றேன். ஒரு சேலஞ்சிங் ஜாப் இது. ஆனா சில விபரங்கள் இருக்கு நம்பிக்கை தர. பார்க்கலாம்.''

''அந்தப் பொண்ணைக் கண்டுபிடிச்சா அவனைக் கண்டுபிடிச்சிடலாம் சார். அவனும் திருச்சியிலதான் இறங்கினான்.''

''மணி புத்தக நிலையம்னு தஞ்சாவூர்ல ஒரு கடை. அங்கே புத்தகம் வாங்கினா நம் கதாநாயகி சித்ரா. அதிலே 'பிறந்த நாள் வாழ்த்துக்கள்'ன்னு எழுதி நம் ஹீரோகிட்டே கொடுத்தா. ஹீரோ இப்படி இப்படி இருப்பார். புத்தகத்திலே ரத்தத் துளிகள் இருக்குதுங்கிறதைத் தவிர எல்லாமே யூகங்கள்தான். அந்தப் புத்தகம் யாரோ யாருக்கோ தந்த புத்தகமாகக் கூட இருக்கலாம். இது தான் எனக்கு லீட். நாளைக்கு மந்திரி வர்றார். நகர முடியாது. நாளன்னைக்கு நான் இதில இறங்கறேன். உங்க உதவி தேவைப்பட்டா சந்திக்கிறேன் மிஸ்டர் நரசிம்மன்'' என்று கை குலுக்கினார். மீசையைத் தடவி விட்டுக் கொண்டார் கிருஷ்ணமூர்த்தி.

நரசிம்மன் சென்ற பிறகும் மேஜை மேல் இருந்த புத்தகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். மற்றொரு கை டெலிபோன் டயலை... டர்ரட்டு.. டர்ரட்டு... டர்ரட்டு.

★ ★ ★

மஞ்சள் தேய்த்துக் குளித்து, கன்னங்களில் சிவப்பேற சிரித்த வானம் திடுமென மதம் மாறி கறுப்பு கோஷா அணியத் தொடங்கியது. உயரத்தில் பறவைக் கூட்டம் பறந்து கொண்டிருந்தது. மாயவரத்து மாலை.

இன்ஸ்பெக்டர் முரளிதரன், சாப்பிட்டு முடித்த பின்பும் காபிக் கோப்பையைக் கையில் வைத்துக் கொண்டிருந்தார். மனைவி கம்பளம் விரித்தமர்ந்து வீணை வாசித்துக் கொண்டிருந்தாள். நிறுத்தினாள்.

''இந்த ராகம் எப்படி இருந்திச்சுங்க?''

''கொஞ்சம் சர்க்கரை போதலை.''

''என்ன?''

''ஸாரி.. ஸாரி டியர். நான் கவனிக்கலை. அந்த சித்ரா பொண்ணு கொலை செய்யப்பட்டதையே நினைச்சிட்டிருந்தேன்.''

''கொலைக் கேஸ் உங்களுக்குப் புதுசா என்ன?''

''இல்லை. ஆனா இந்தக் கேஸ் புதுசு. எல்லாக் கொலைக்கும் கொலையாளி பின்னாடி கிடைச்சாலும், கொலைக்கான காரணம் முன்னாடியே பளிச்சுன்னு தெரிஞ்சிடும். இந்த கேஸ்ல என்னை அலைக்கழிக்கிறதே காரணம்ங்கிற பாயிண்ட் தான். பணம் இல்லை. நகை இல்லை. கற்பு இல்லை. விரோதம் இல்லை. பின்னே என்ன? நான் அவங்கம்மாவை இன்னொரு தடவை பார்க்கணும். நிதானமா கேக்கணும். போய்ட்டு வந்துடறேன். கதவைச் சாத்திக்க.''

என்ஃபீல்ட் அவரைச் சுமந்தது. என்ஜின் உடனே சினந்தது. சக்கரங்கள் சுழன்றன.

★ ★ ★

ஃபேன் சுழன்றது. தரையில் அமர்ந்திருந்த மங்களத்தின் சேலை நுனியில்ஒரு கொத்து நூல் தள்ளாடிக் கொண்டிருந்தது. சதாசிவம் மாமா, இன்ஸ்பெக்டர் முரளிதரனையே பார்த்துக் கொண்டிருந்தார். விவேக் பனியன் மட்டும் அணிந்திருந்தான்.

''பரவாயில்லை. ஸ்மோக் பண்ணுங்க சார். எங்கம்மாவாலே எதையும் கோர்வையா சொல்ல வரலை சார். துண்டு துண்டாப் பேசறாங்க. சட்டுன்னு அழுகையிலே இறங்கிடறாங்க'' என்றான் விவேக்.

''வேணாம். அவங்க கோர்வையா சொல்ல வேணாம். நேத்து அவங்களை தீவிரமா விசாரிக்கலை. விசாரணைக்குத் தயாரான நிலையிலே அவங்க இல்லை. எஃப்.ஐ.ஆர். தயாரிச்சாச்சு. இப்போ நான் வரிசையாக கேக்க, நிதானமா யோசிச்சுப் பார்த்து தெளிவா பதில் சொன்னாப் போதும் அவங்க.''

''சொல்வாங்க சார். அதுக்கு முன்னாடி நேத்து குற்றாலம் ஸ்டேஷனிலிருந்து வந்ததும் ஜங்ஷன் போனிங்களே, ஏதாச்சும் புதிய தகவல் உண்டா சார்?''



அரை நிமிடம் விவேக்கையே பார்த்தார் முரளிதரன்.

''மிஸ்டர் விவேக், நீங்க என்ன எதிர்பார்க்கறீங்க? என்னோட ஒவ்வொரு நடவடிக்கையையும், அதோட ரிசல்ட்டையும் உங்ககிட்ட ரிப்போர்ட் பண்ணச் சொல்றீங்களா? நேத்து குற்றாலம் ஸ்டேஷனுக்கே கூட உங்களை என்னோட வர அனுமதிச்சிருக்கக் கூடாது.''

''ஸாரி சார்.''

''நீங்க சொல்லுங்கம்மா. கொலைகாரனைப் பார்த்த, அவன் அப்படி இருப்பான்னு தெரிஞ்ச ஒரே நபர் நீங்க. சாயங்காலம் ஆறரை மணிக்கு வந்து, நடு ராத்திரியிலே கொன்னுட்டுக் கிளம்பிட்டான். இடையிலே நீங்க அவனைப் பார்த்தது, அவன் பேசின விதங்கள் எல்லாம் ஒண்ணு விடாம எனக்கு வேணும். ஆறரை மணிக்கு வீட்டுக் கதவு சாத்தியிருந்திச்சா, திறந்திருந்திச்சா?''

''சாத்தியிருந்திச்சு, பெல் சத்தம் கேட்டு நான் தான் போய்த் திறந்தேன்.''

''அவன் 'அம்மா'ன்னோ, 'வீட்ல யாரு?'ன்னோ இல்லை 'விவேக்'ன்னு பேர் சொல்லியோ கூப்பிடலையே? வெறுமனே காலிங் பெல்லைதான் அழுத்தினான். அப்படித்தானே?''

''ஆமாங்க, வேற ஒண்ணும் சொல்லிக் கூப்புடலை.''

''நீங்க 'யாரது'ன்னு கேக்கலை?''

''இல்லை. கதவைத் திறந்தேன். கைல சூட்கேசோட நின்னுக்கிட்டிருந்தான். அவன் வந்த ரிக்ஷா திரும்பிக்கிட்டிருந்திச்சு.''

''மைகாட்! இந்தத் தகவலை நீங்க நேத்து சொல்லலை. பெரிய தகவல்ம்மா இது. ரிக்ஷாவிலே வந்து இறங்கியிருக்கான்ங்கிறது எத்தனை சிந்தனையைத் தூண்டும் தெரியுமா?''

''பதட்டத்திலே வாய் வந்திருக்காது அவளுக்கு நேத்து'' என்றார் சதாசிவம்.

''நீங்க யார் சார்?''

''எங்க மாமா சார்.''

"என்ன கலர் சூட்கேஸ்ம்மா அது?"

"கறுப்புக் கலர்."

"சரி கதவைத் திறந்திங்க. நீங்க என்ன கேட்டீங்க? அவன் என்ன சொன்னான்? கொஞ்சம் ஞாபகப்படுத்தி நீங்க பேசிக்கிட்டதை அப்படியே சொல்லுங்க."

"யாரு, என்ன வேணும்னு கேட்டேன். 'அவன் இல்லையா'ன்னு கேட்டான். உள்ளேர்ந்து சித்ரா சொன்னா 'அண்ணனோட ஃப்ரெண்டு போலிருக்கும்மா, வெளிய வச்சே பேசறியே, உள்ளே கூட்டிக்கிட்டு வந்து பேசு'ன்னா. 'வாப்பா உள்ளே'ன்னேன். வந்தான், உட்கார்ந்தான். தண்ணி கேட்டான். 'விவேக் மெட்ராஸ்ல ஹாஸ்டல்ல இருக்கானே, தெரியாதா'ன்னேன், 'தெரியும், விவேக்தான் லெட்டர் எழுதியிருந்தான். எனக்கு இந்த மாசத்திலே லீவு வருது. ஊருக்குப் போனாலும் - போவேன்னு. நான் மாயவரத்துக்கு வேற ஒரு வியாபார விஷயமா வந்தேன். காலையில வேலை முடியுது. விவேக் வந்திருந்தான்னா பார்த்துப் பேசிட்டு, தங்கிட்டுப் போலாம்னு நினைச்சு வந்தேன்'னான். 'அவன் இல்லாட்டி என்ன, பரவால்லை. இங்கேயே தங்கிட்டு உன் வேலையைப் பார்த்துட்டுப் போப்பா'ன்னேன். சரின்னான். அவன் இப்படி இவளுக்கு எமனா வருவான்னு நான் பாவி தெரியாதவளாயிட்டேனே..."

மங்களம் உடைந்துபோய் கொஞ்சம் கேவ ஆரம்பித்தாள்.

முரளிதரன் இரண்டு முறை முயற்சித்து லைட்டரில் தீ உருவாக்கினார். கொஞ்சம் அழுகை அடங்க நேரம் கொடுத்தார். பாண்ட்டில் பிசிறியிருந்த நூலைப் பிய்த்தார்.

"விஷயத்திலேர்ந்து விலகிப் போய்டாதீங்க. அப்படியே மிச்சத்தைச் சொல்லுங்க. அப்புறம் என்ன, என்ன பேசினிங்க?"

"முகம் கழுவிக்கிறியான்னேன். கழுவிக்கிட்டான். கடைக்குப் பக்கத்து வீட்டு பையனை அனுப்பி வாங்கிட்டு வரச் சொல்லி, சோன்பப்டியும், மிச்சரும் வச்சேன். சாப்ட்டான். காபி தந்தேன், குடிச்சான். என்ன வியாபாரம் பண்றே தம்பின்னு கேட்டேன். துணி வியாபாரம்னான். பேரு பாஸ்கர்ன்னான். ஊரு மானாமதுரைன்னான். குடும்ப போட்டோ ஆல்பம் காட்டினேன். அதிகமா பேசலை. விவேக்கோட ரூமிலே கட்டில்ல விரிப்பு மாத்தி



லிஸ்ட் எடுத்துக்கப்பான்னேன். படுத்துக்கிட்டே படிச்சிக்கிட்டிருந்தான், ஏதோ புத்தகம். ஒன்பது மணிக்கெல்லாம் சாப்பாடு போட்டேன். சாப்டுட்டு படுத்தவன் கொஞ்ச நேரத்திலே தூங்கிட்டான். பத்து மணிக்கு பக்கத்து வீட்டு மீனாட்சி சாவாட்சேபத்துக்குக் கூப்ட்டா. கிழவிக்குச் சாப்பாடு போட்டுட்டுப் போனேன். ஒரு வேத்து மனுஷன் வீட்டுக்குள்ளே இருக்கிறான், வயசுக்கு வந்த பொண்ணு இருக்குதுங்கிற சொரணையே இல்லாம முண்டை நான் போய்த் தொலைஞ்சேன்."

"முஞ்சி கழுவ துண்டெடுத்தப்போ, புத்தகம் எடுத்தப்போ அவன் சூட்கேஸைத் திறந்திருக்கணும். அவன் சூட்கேஸைத் திறந்தப்போ கவனிச்ச ஞாபகம் வருதா? சூட்கேஸ்க்குள்ளே என்ன, என்ன இருந்திச்சு?"

"அதெல்லாம் கவனிக்கலை சார் நான்."

"சரி, உங்க பொண்ணு சித்ரா அவன்கிட்டே எதுவுமே பேசலையா?"

"வாங்கன்னா, அவ்வளவுதான். ஒரு பொண்ணுக்கு வேற என்ன பேச இருக்கு?"

"ஆள் எப்படி இருந்தான்னு நேத்தே சொல்லிட்டிங்க. இன்னிக்குக் கிடைச்ச புது தகவல் அவன் ரிக்ஷாவிலே வந்தான்ங்கிறதுதான். கொலை நடந்திருக்கிறது சித்ரா ரூமிலே. உள் தாழ்ப்பாள் போட்டுக்கிட்டுதானே உங்க பொண்ணு தூங்குவா வழக்கமா?"

"ஆமா சார்."

"நடு ராத்திரி உங்க பொண்ணை கதவைத் திறக்க வச்சிருக்கான். கதவைத் திறந்ததும் கொல்லலை. அந்த நிமிஷம் அவன்கிட்டே ஆயுதம் இல்லை. சித்ரா ரூமிலே, கதவிலேர்ந்து தள்ளி படுக்கை கிட்டே கொலை நடந்திருக்கு. படுக்கைக்குப் பக்கத்திலேதான் மேஜை இருக்கு. மேஜை மேலேதான் பழம் நறுக்கற கத்தி இருக்கும் எப்பவும். அப்படித்தானே?"

"ஆமாம் சார்" என்றான் விவேக்.

"இந்தக் கேசிலே குழப்பம் வர வர அதிகமாகுது விவேக். முதல் குழப்பம்... காரணம் தெரியலைங்கிறது. உங்களுக்கு பாஸ்கர்ன்னு

மானாமதுரையிலே துணி வியாபாரம் செய்ற யாரும் ஃப்ரண்ட் இல்லை. ஆக, திட்டம் போட்டு பொய் சொல்லித் தங்கியிருக்கான். இது திட்டமிட்ட கொலைன்னு சொல்லலாம். ஆனா, இவ்வளவு திட்டம் போட்டவன் எப்படிக் கொல்றதுங்கிறதை மட்டும் திட்டம் போடாம விட்டிருக்கானே... சித்ரா ரூமுக்குள்ளே கத்தி இருக்குங்கிறது அவனுக்கு தெரிய வாய்ப்பில்லை. அந்தக் கத்தியை ஆயுதமா பயன்படுத்தினது எனக்கு யதேச்சையா படுது. சித்ரா கதவைத் திறந்தவுடனே என்னமோ சொல்லி அவளை ரூமுக்கு உள்ளே அழைச்சிக்கிட்டு வந்திருக்கான். அவங்களுக்குள்ளே ஏதோ சில வாக்குவாதங்கள் ஏற்பட்டிருக்கலாம்னு நினைக்கிறேன். அவ வாயை ஒரு கையால பொத்திக்கிட்டுத்தான் கத்தியால குத்தியிருக்கான். ஏன்னா, நேத்து பக்கத்து, எதிர்த்து வீடுகள்ல இருபத்தாறு பேர்ல யாருமே அலறல், கத்தல் எதுவும் கேட்கலைன்னு சொல்றாங்க. கொலையாளி கிடைக்கிறதுக்கு முன்னாடி எனக்குக் காரணம் தெரிஞ்சாகணும். சித்ராவோட தோழிகள், பழகினவங்க எல்லோரையும் நாம் விசாரிக்கணும். விவேக், உதவி செய்யணும் எனக்கு.''

''நிச்சயமா சார்.''

''வெல். இப்போ அப்பட்டமா கேக்கறேன். மறைக்காம பதில் சொல்லுங்கம்மா நீங்க. உங்க பொண்ணு யாரையாவது நேசிச்சாளா? அது தெரிய வந்து நீங்க எப்பவாவது கண்டிச்சதுண்டா?''

திடுக்கிட்டாள் மங்களம். விவேக்கைப் பார்த்தாள்.

''சின்ன சின்ன தகவல்களும் அவங்களுக்கு உதவும்மா. சொல்லலாம். தப்பில்லை. இன்ஸ்பெக்டர், நானே சொல்றேனே... அதைக் காதல்னு சொல்ல முடியாது. அந்த வயசுக்குள்ள சலனம், அம்மாவும், நானும் கண்டிச்சிருக்கோம்'' என்றான் விவேக்.

''அவன் பேர் தியாகராஜன், சரியா?'' என்றார் முரளிதரன்.

ஆச்சர்யமாக அவரைப் பார்த்தான் விவேக்.



**பிரியமான நீயே,**

அன்றொரு நாள் அச்செடியினைக் கண்டேன்
செடி முழுக்க உன் உதடுகள் தொங்கின
பின்னர் அறிந்தேன் - அது
கொவ்வைச் செடியென்று.

**பிரியங்களுடன் நானே.**

## 10

''இன்ஸ்பெக்டர், உங்களுக்கெப்படி தெரியும்?'' என்றான் விவேக்.

முரளிதரன் இரண்டு பற்கள் மட்டும் தெரியச் சிரித்தார்.

''நேத்து உங்க தங்கை ரூமிலேர்ந்து கொஞ்சம் கடிதங்கள், பாட்டு நோட்டு! புத்தகம் இதெல்லாம் உங்க அம்மா கிட்ட லிஸ்ட் கொடுத்திட்டு எடுத்துப் போயிருந்தோம். நோட்டு புக்கிலே பக்கம் முழுக்க தியாகராஜன், தியாகராஜ், தியாகு, என் செல்ல ... இப்படி எழுதியிருந்திச்சு, மேலே ஊகிக்கிறது அத்தனை ...இல்லை போலீஸ்காரனுக்கு. சொல்லுங்க விவேக். யார் இந்த தியாகராஜன்?

''எதிர்த்த வீட்டுக்காரர் பையன். இது நடந்தது ஆறு மாசம் முன்னாடி. எப்படி ஆரம்பிச்சது இப்பழக்கம்னு தெரியலை. ஒரு ... இவ அவசரமா ஒரு லெட்டரை மறைச்சதை அம்மா ...ட்டு மிரட்டிக் கேட்டாங்க. ஒத்துக்கிட்டிருக்கா. என்கிட்டே ...ன்னாங்க அம்மா! நானும் இவளை விசாரிச்சேன். என்னம்மா, ...க் காதலா? தேதி பார்த்துடட்டுமான்னேன்? அழுதா. ...ச்சிடுன்னா. சும்மா லெட்டர் மட்டும் தான் ...கிட்டோம். இனிமே செய்யலைன்னா. அவளுக்கே ...ஞ்சது அது காதல், இல்லைன்னு. அவ வார்த்தைகள்ல ...ஞ்சமும் ஒரு உறுதி இல்லை. தியாகராஜனைத் தனியாக் ...ட்டுப் பேசினேன். அட, அவனாச்சும் நான் அவளைக் ...க்கிறேன். உண்மையான காதல், எங்களைப் ...காதீங்கன்னு டயலாக் அடிப்பான்னு பார்த்தேன். அவனும்

ஸாரி சார்... இனிமே லெட்டர் கொடுக்கலை உங்க தங்கைக்குன்னான். கண்டிச்சு விட்டுட்டேன். அது ஒரு தீவிரமான விஷயமாவே எனக்கு அன்னிக்கும் படலை. இப்பவும் சொல்றேன் வாழ்க்கையிலே அந்தச் சம்பவம் ஒரு கெட்ட கனவு மாதிரிதான்.''

''என்ன செய்றார் அந்த தியாகராஜன் இப்போ?''

''திருத்துறைப்பூண்டியிலே வேலை செய்றார்.''

''எதுக்கும் அவர் அட்ரஸ் கொடுங்க'' என்று வாங்கிக் கொண்டார் முரளிதரன். மங்களம் கொண்டு வந்து தந்த பால் சாப்பிட்டார். புறப்படும் முன் ஒரு சிகரெட்டை கொளுத்திக் கொண்டார்.

''விவேக், பாஸ்கர் அன்னிக்குப் படுத்தது உங்க ரூம்ல. அத்தனை தீவிரமா பார்க்கலை உங்க ரூமை. வாங்க. இரண்டாவது முறையா நல்லா பார்த்துடுவோம்.''

விவேக்கின் அறையில் பத்து நிமிடம் மையமாய் நின்று சுற்றிலும் கண்களை ஓட்டினார். குனிந்து கட்டிலின், மேஜையின் அடியில் நிதானமாய்ப் பார்த்தார். விவேக் பென் டார்ச் அடித்தான். மேலும் பத்து நிமிடங்கள் மௌனமாக ஆராய்ந்து விட்டு புறப்பட்டார். பைக் வரை விவேக் வந்தான். விவேக்கின் தோளில் தட்டினார்.

''விவேக், உங்க ஆர்வம் புரியுது. கேஸ் டெவலப்மெண்ட் பத்தி டி.எஸ்.பி.க்கு தகவல் சொல்ற மாதிரி உங்களுக்கும் சொல்றேன், திருப்தியா? நாளைக்குக் காலையிலே... வேணாம். சாயங்காலம் அஞ்சு மணிக்கு என் வீட்டுக்கு வாங்க. அங்கே நான் இல்லாட்டி ஸ்டேஷனுக்கு வாங்க. எத்தனை நாள் லீவு போட்டிருக்கிங்க யுனிவர்சிடில?''

''நாளைக்கு என் ஃப்ரண்டு திரும்பிப் போறான் சார். ஒரு பதினைஞ்சு நாளைக்கு லீவு போடப் போறேன். அதுக்குள்ளே அவனைக் கண்டுபிடிக்கணும் சார். கண்டுபிடிச்சு...''

''கண்டுபிடிச்சு...''

''கண்டுபிடிக்கணும். அவ்வளவுதான்.''

''வரட்டுமா?'' ஃபில்ட்டர் வரை புகைத்து விட்டு, எறிந்து விட்டு, கியரை மாற்றி, கிளட்சை விடுவித்து ஆக்ஸிலேட்டரைத் திருகி, கன்னத்தைத் திருகினார்.



நாளைக்கு நமக்கு திருமணநாள். ஞாபகமிருக்கா?'' என்றாள் ...ளவி. அவர் மார்பின் ரோமங்களுக்குள் விரல்களால் சிக்கல் ...விக் கொண்டு.

''என்ன வேணும் உனக்கு? ஸ்பெஷல் முத்தம் வேணுமா?''

''கோயிலுக்குப் போகணும் காலையிலே.''

''போகலாம்.''

''சாயங்காலம் சினிமா.''

''போகப் போறதில்லை... என்னதிது? அன்னிக்கு மோதிரம் பட்டு, ...மானது இன்னும் ஆறலையா'' என விரலால் மருந்து போடப் ...னவரைப் புறக்கணித்துப் படுத்தாள்.

★ ★ ★

புரண்டு படுத்த போது கை பட்டு அந்தக் குதிரை வீரன் நின்ற ...திலேயே டொகடக், டொகடக் என தலையை தனியாய் ...த்துக் கொண்டு குதிரை ஓட்டினான். சுத்தமாய் இரண்டு தரம் ...ண்டு விட்டான் ரவி. உறக்கம் வரவில்லை. ஜன்னல் வழியே ...ந்த காற்று நாட்டியமாடியது.

எழுந்து விளக்கைப் போட்டுக் கொண்டு ஒரு புத்தகம் எடுத்துக் ...ண்டு கட்டிலில் அமர்ந்து புரட்டினான். மனம் பதியவில்லை. மூடி ...டு மணி பார்த்தான். பதினொன்று. வினாடி முள் ஏராப்ளேன் ...த்து சுற்றிக் கொண்டிருந்தது.

விஜி அங்கே ஆஸ்பத்திரியில், தூங்கியிருப்பானா? தூங்கியிருக்க ...ண்டும். தூக்கம் வர ஊசி இல்லை, மாத்திரை கொடுத்திருப்பான் ...ர்கள்.

எத்தனை உற்சாக இளைஞன் விஜி. கல்லூரி நாட்களில் அடித்த ...ட்டங்கள், சேர்ந்து சுற்றிய பயணங்கள்... ஜீராவில் ஊறும் ...லோப்ஜாமூன் போல அந்த ஒவ்வொரு நிமிடங்களும் ...னிப்பானவை. திரும்பத் திரும்ப அசை போடத் தக்கவை.

என்ன ஆயிற்று அவனுக்கு? மனம் பாதிக்கப்படும் வகையில் என்ன ...ந்தது? ஓ! நான் மடையன். நேற்று அவன் உறக்கத்தில் உச்சரித்த '...ாமா' பற்றி பார்த்தியிடம் சொல்ல மறந்தேன். கடந்த ஆறு ...ங்களாக இவனிடமிருந்து தகவலே இல்லை. தஞ்சைக்கருகே ...ணையைப் பார்த்துக் கொள்வதாய்ச் சொன்னான். யார்

ஷ்யாமா? இவனுக்கு மன அதிர்ச்சி எங்கே, எப்படி ஏற்பட்டது?

இந்த அளவுக்கு கொலை செய்யும் வரையா கொண்டு வந்து நிறுத்தும்? என்ன சொன்னான் பார்த்தி?

ஸ்கிஸஃப்ரேனியா...! என்ன எழவு பெயரோ...

மறுபடி மணி பார்த்தான். பார்த்தி இன்னும் உறங்கியிருக்க மாட்டான். எழுந்து அறையை விட்டு வெளியே வந்து கீழே ஹாலுக்கு வந்தான். அம்மா அவள் அறையில் உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. விஜி ஊருக்குப் போய்ட்டானம்மா என்று சொல்லியிருந்தான். ரிசீவரை எடுத்தான்.

''ஹலோ பார்த்தி, நான்தான். தொந்தரவு பண்றேனா?''

''பத்திரிகை படிச்சிக்கிட்டிருந்தேன். சொல்லு.''

''நீ சொல்லு. விஜி எப்படியிருக்கான்?''

''நான் நாளைக்குதான் அவனோட பேசப் போறேன். நர்சிங் ஹோமிலேர்ந்து புறப்படறதுக்கு முன்னாடி அவன் நல்லா தூங்கறதுக்காக ஊசி போட அவன் ரூமுக்குப் போனேன். அழுதுகிட்டிருந்தான் ரவி. எனக்கு என்ன டாக்டர்? நான் பைத்தியமாயிட்டேனான்னு அழுதான். உடனே துடைச்சுக்கிட்டு முறைச்சான். காலைல பேசலாம்னு வந்துட்டேன். எதுக்குப் போன் பண்ணினே ரவி?''

''நேத்து ராத்திரி தூக்கத்திலே விஜி உளறின ஒரு வாக்கியத்தை உனக்கு சொல்ல மறந்துட்டேன். அது உனக்கு உபயோகப்படலாம்னு கூப்ட்டேன்.''

''சொல்லு'' எதிர்முனையில் ஒரு கொட்டாவி எதிர்க்கப்பட்டது கேட்டது.

''நோ... வேணாங்க ஷ்யாமா, இது தப்பு. சவுதி அரேபியாவிலே தலையைச் சீவிடுவான். அப்படின்னு உளறினான்.''

''தாங்க்யு ரவி. எல்லாத்துக்கும் பின்னணியிலே ஒரு பெண்! குட் நைட்!''

''குட் நைட் பார்த்தி.''

போனை வைத்து விட்டான்.



விஜி அந்தக் கொலையைச் செய்யலை. அந்த வியாதி! போலீஸ் ...னைப் பிடிக்கக் கூடாது. நோ! விஜியோட பேர் எல்லோருக்கும் ...ம்படியா ஆகக் கூடாது.

...களில் ஏறும்போது யோசித்தான். நான் என்ன செய்யலாம் ...? ஒரு நல்ல 'சைக்கியாட்ரிஸ்ட்'டிடம் ஒப்படைத்திருக்கிறேன். இவன் மன வியாதிக்கு. அதன் விளைவாய் இவன் செய்து விட்டு ...இருக்கும் காரியத்தின் விளைவாக போலீஸ் இவனைத் ...ராமல் இருக்க நான் என்ன செய்ய முடியும்?

...கிங்.

...கிங்.

...னால்...! படுக்கையில் படுத்த போது உள்ளுக்குள் பளிச்சிட்டது ...க்கு. இவனுக்கு ஒரு கவசம் அணிவிக்க முடியும். அதில் ...ச்சாட்டு அம்புகள் மோதி மழுங்கி விழ வேண்டும். ...படிப்பட்ட ஒரு கவசம்.

இவனல்ல அது என்பதற்கு... இவன் அன்று வேறு எங்கோ ...த்தாய் உறுதியான ஒரு 'அலிபி' தயாரிக்க முடியுமா?

இரவு முழுக்க யோசனையில் மேலும், மேலும் புரண்டான். ...லையில் முதல் காக்காய் தொண்டையைக் கனைத்துக் கொண்ட ...து உள்ளே எழுந்தது நம்பிக்கை கேள்வி.

...வாய் நாட்?

அவன் உதடுகள் உச்சரித்தன அதன் தமிழாக்கத்தை, ''ஏன் ...யாது?''

* * *

இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி மந்திரி வருகையில் பிஸியாக ...யாற்றி முடித்த கையோடு நரசிம்மன் ஒப்படைத்த புத்தகத்தை ...த்த வைத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தார்.

நரசிம்மனின் சந்தேகங்கள் சரியே. ஒரு முக்கியமான குற்றத்தைச் ...து விட்டு தப்பியிருக்கலாம் அவன். பெட்டியிலிருந்து புத்தகம் ...டுத்தது எதேச்சையான செயல். அதன் அட்டையில் மனித ரத்தத் ...ன்றால்? யாருமே வேறு கற்பனைகளுக்குப் போக முடியாது.

இங்கே ஆயிரம் வேலைகள் உள்ளன. அதை எல்லாம் போட்டு விட்டு தலையும் இல்லாமல், வாலும் இல்லாமல் இந்த விஷயத்தில் தீவிரமாக இறங்குவதாக டி.எஸ்.பி. யிடம் சொல்லி தஞ்சை புறப்பட நினைத்தால்... என்ன சொல்லுவார்?

இந்தத் தகவல் போதாது. அது என்ன குற்றம் என்பதே தெரியாது. அடிதடியில் ஏற்பட்ட காயமா? கத்திக்குத்தா? துப்பாக்கிச் சூடா? என்ன நடந்தது இவ்வளவு ரத்தம் தெறிக்க? பாதிக்கப்பட்டவன் இறந்து விட்டான் அல்லது விட்டாள் எனச் சொல்ல முடியுமா? எல்லாம் நிழல் கற்பனைகள்.

கையில் இருக்கும் விபரம் எல்லாம்... அவன் பெயர் விஜி. அவன் காதலி அல்லது தோழி பெயர் சித்ரா. அந்த சித்ரா தஞ்சாவூரில், மணி புத்தக நிலையத்தில் இந்த ஆங்கில கவிதை புத்தகத்தை வாங்கினாள். பிரியங்களுடன் நானே என பிறந்த நாள் வாழ்த்தெழுதி இவனுக்குப் பரிசளித்தாள்.

இதை வைத்துக் கொண்டு அந்த விஜியின் விலாசத்தைக் கண்டுபிடிக்க முடியுமா? ஒரு சுறுசுறுப்பான, புத்திசாலி போலீஸ்காரனால் நிச்சயம் முடியும். என்னால் முடியும். ஆனால் இப்போது நான் நகர முடியாது.

லெட்டர் பேட் எடுத்து தஞ்சாவூர் போலீசுக்குக் கடிதம் எழுதினார். அப்புறம் அதைக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டு விட்டு டெலிபோன் எக்சேஞ்சில் கால் புக் செய்து விட்டுக் காத்திருந்தார்.

தஞ்சை போலீஸ் விவரம் சேகரிக்கிறார்களா என்று பார்க்கலாம். அவனின் விலாசம் மட்டும் கிடைத்தால்... அப்புறம் அவனைக் கண்காணித்து... ஓரளவு தகவல்களுடன் டி.எஸ்.பி.யைப் பார்க்கலாம்.

அதுதான் நல்லது. 'க்ளீன் வொர்க் கிருஷ்ணா' என்பார்.

டெலிபோன் ஒலிக்க... எடுத்தார்.

''கொடுங்க... ஹலோ.. தஞ்சாவூர் போலீஸ்? யார் பேசறது? நாகராஜன், எப்படி இருக்கீங்க? ரொம்ப நாளாச்சு தொடர்பு கொண்டு; லேட்டஸ்டா என்ன குழந்தை, வெரிகுட், அது இருக்கட்டும். எனக்கு நீங்க ஒரு உதவி செய்யணும்...''



விபரமாகப் பேசி வைத்து விட்டு, வெறுமனே டயலைக் கொஞ்ச நேரம் சுற்றினார் டி.எஸ்.பி. 'கிருஷ்ணா' என்றழைக்கும் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி.

★ ★ ★

கதிரவனின் கதிர்கள் தொலை தூரத்தில் களைத்த குதிரையாக மெல்ல வந்து கொண்டிருந்தன. ஒரு வார தொடர் மழை காரணமாய் ... தன் மேல் தளத்தில் மங்கின மஞ்சள் நிறமாய் ஓடினாள். ...தின் மேல் நடந்து கொண்டிருந்தார்கள் டாக்டர் பார்த்திபனும், ...யும். ஒரு சர்ச் விழித்துக் கொண்டு மணியடித்தது.

பார்த்திபன் ஸ்வெட்டர் அணிந்திருந்தார். பிரதேசமெங்கும் ...யாய் பனி அலைந்து கொண்டிருந்தது. 'கிணி கிணி' பால் ...டன் நான்கு சைக்கிள்கள் விரைந்தன.

''இந்த காலை நேர வாக்கிங் பிடிச்சிருக்கா விஜி?''

பதில் சொல்லவில்லை விஜி.தலையை மட்டும் ஆட்டினான்.

டாக்டர் நின்றார். அவன் பக்கம் திரும்பினார்.

''விஜி, உங்களுக்குத் தெரியுமா? 'கள்'ளை பாட்டில்ல ஊத்தி ... வச்சு அடைச்சிடறோம். பொங்கிப் பொங்கி என்னாகும்? ... பறக்கும். உங்களுக்கு உள்ளே எந்தத் தடையும் வேணாம். இப்போ எனக்கு உங்க கடந்த வாழ்க்கை, நீங்க சந்திச்ச ...ஷங்கள், வருத்தங்கள் எல்லாத்தையும் சொல்லப் போறீங்க, ...றீங்களா?''

''சொல்றேன் டாக்டர்'' என்று கொஞ்ச நேரம் கீழே சுழித்தோடும் ...ப் பார்த்துக் கொண்டிருந்தான். ''இப்படியே உட்காரலாமே'' ... பாலத்தின் ஓரத்திலுள்ள கைப்பிடி கட்டை மேல் குதித்து ...த்தான்.

''டாக்டர் நீங்க தேவதையை சந்திச்சிருக்கீங்களா?'' என்றான்.

...ண்டு தூரமாய்ப் பார்த்தான் விஜி. இரண்டு கன்னங்களிலும் நீர் ...ணம் செய்து கொண்டிருந்தது.

...ளி கொஞ்சம் கொஞ்சமாய் விலகிக் கொண்டிருந்தது. ராபின் ...ளில் தோய்த்தது போல் வானம் நீலமாகிக் கொண்டிருந்தது. ...ள இரண்டு இளைஞர்கள் ஷார்ட்ஸ் போட்டுக் கொண்டு டக், ...என்று ஜாகிங் ஓட்டத்தில் வந்து... 'ஐ லைக் ஸ்ரீதேவி, மூக்கு ...ஷனுக்கு முன்பா, பின்பா?'... கடந்து ஓடினார்கள். டக், டக், ...டக்...

''சொல்லுங்க விஜி.''

பார்த்திபனையே கண்களுக்குள் உற்றுப் பார்த்தான்.

இரண்டு கைகளையும் இல்லை என்பது போல் அவர் முகத்துக்கு ...ர விரித்தான்.

''மேலே ஒண்ணும் சொல்ல மாட்டேன். இப்ப நான் பார்க்கணும். ...ணும். மடியில படுத்துக்கணும். பூட்ஸ் காலால ...தைச்சுட்டாராம்மா, ரொம்ப வலிக்குதா, அவன் கிடக்கான் ...சலன்னு காயத்தைத் தடவி கொடுக்கணும். தப்பு செஞ்சு ...லயிலே குட்டு வாங்கணும். ஜுரம் வந்து நெத்தியிலே தைலம் ...விக்கணும். சொல்லுங்க டாக்டர், அதோ அந்த மேகங்கள்ல எந்த ...த்துக்குப் பின்னாடி அவங்க ஒளிஞ்சிருக்காங்க?''

அடுத்த நிமிடம் ஐந்து வயது பாப்பா மாதிரி நிஜமாகவே, ...ம்மா,அம்மா'' என்று தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தான் விஜி.

அவன் கைகளைப் பற்றினார் டாக்டர்.

''ஸாரி விஜி. நீங்க எதுவும் பேச வேணாம். வாங்க நாம ...கலாம்.''

''மோசமானவன் டாக்டர் அவன். அயோக்கியன். சொல்லுங்க, ...ன் மோசமானவன் தானே?''

''நிச்சயமா. ரொம்ப மோசமானவன். வாங்க...''

...மதியாய் நடந்தான் விஜி. சட்டென்று ஒரு கையால் மற்றொரு ...யைக் குத்தினான். பின் பாண்ட் பாக்கெட்டுகளில் செருகிக் ...ண்டான். நடந்தான். பற்களை நெறித்துக் கொண்டான். அவன் ...கள் ஜெபம் செய்வது போல் ஓசை எழுப்பாமல் ஏதோ பேசிக் ...ண்டிருந்தன.

---

பிரியமான நீயே,

உறவின், பிறரின் முணுமுணுப்புகள்
நம் தேசத்தின் மேல் தோலில் அமரும் தூசித் துணுக்குகள்.
புரிந்து கொள் பெண்ணே.
பறவை எச்சம் பட்டு அணில்கள் சாவதில்லை.

பிரியங்களுடன் நானே.

## 11

'தேவதையை சந்திச்சிருக்கிங்களா?' என்று விஜி போன அத்தியாயம் கடைசி வரியாய் கேட்டதற்கு, இந்த அத்தியாயம் முதல் பாராவில் இப்போதுதான் டாக்டர் பார்த்திபனுக்கு லேசான சிரிப்பு எழுந்தது.

தொள தொள என்று வெள்ளை உடை உடுத்தி ஸ்லோமோஷனில் பாரதிராஜாவின் கனவு சீன் நாயகி குதித்தாள். பெத்லஹேமில் இயேசு பிறந்ததும், முதுகில் இறக்கை முளைத்த வெள்ளை உடை தேவதைகள் 'பூ'ப் பொழிந்து வாழ்த்தினார்கள்.

''இல்லை விஜி, சந்திச்சதில்லை'' என்றார் டாக்டர்.

''எங்கம்மா டாக்டர்! அவ்வளவு அழகா இருப்பாங்க. அவ ஒரு நல்ல மனைவி. அவளுக்கு அவளைப் புரிஞ்சுக்கிற ஒரு கணவன் கிடைக்கலை டாக்டர். என் அப்பாவை ஒரு அப்பாவுக்குரிய அர்த்தங்களோட நான் பார்த்ததில்லை. என்னைப் பொறுத்தவரை அவர் நான் உருவாகக் காரணமா இருந்த ஒருவர், அதனால நான் அவருக்கு கடமைப்பட்டிருக்கேன். எனக்கு வயசு ஏழோ,எட்டோ இருக்கும் - அம்மா செத்தப்போ. நோ. டாக்டர் அவ சாகலை டாக்டர். கொன்னுட்டான் அந்த பாவி. உலகத்திலேயே கொடுமையான ஆயுதம் எது டாக்டர்? கத்தி? துப்பாக்கி? அணுகுண்டு? இல்லை? இதெல்லாம் இல்லை. வார்த்தைகள்! வெறும் வார்த்தைகள். அதனாலேயே கொலை செய்யப்பட்டா டாக்டர் அந்தத் தேவதை. அம்மா இறந்தப்போ வயசு இருபத்தேழு.''

பேசுவதை நிறுத்தி விட்டு மார்பின் குறுக்காக கைகளைக் கட்டி...

நடந்தார்கள்... வலது புறம் பெரிய மைதானம். ஜன்னல் ஜன்னலாய்த் துருத்திக் கொண்டு கட்டிடங்கள். செயிண்ட் ஜோசப் கல்லூரி ஹாஸ்டல் மாணவர்கள் சில பேர் கால்பந்தாடிக் கொண்டிருக்க... நிறைய பேர் கைலியை மடக்கிக் கட்டிக் கொண்டு நடந்தபடியே பாடம் படித்துக் கொண்டிருந்தார்கள். ரானா ஹெக்ஸா டாக்டெய்லாவின் ரெஸ்பிரேட்டரி சிஸ்டம், ரிக்கார்டோவின் பாப்புலேஷன் தியரி, தென்னையின் ட்ரை கார்ப்பெல்லரி பானிப்பட்டு யுத்தம் - அதன் விளைவுகள், கம்பனின் காவியச் சுவை, வெண்டலீபன் பிரியாடிக் டேபிள், மாக்னெட்டா மீட்டர் இயங்கும் விதம் என்று படித்து பரீட்சைக்கு அடுத்த வாரம் மறந்து போகும் பாடங்கள்.

"என்ன நின்னுட்டிங்க? வாங்க விஜி!"

"நான் ஒண்ணாவதுலேர்ந்து டிகிரி வரைக்கும் ஹாஸ்டல்லதான் தங்கிப் படிச்சேன் டாக்டர்."

"அப்படியா? எந்த ஊர்ல?"

"மெட்ராஸ்லதான்."

"மெட்ராஸ்லதானே உங்க வீடும் இருக்கு. பின் ஏன்?"

"வீடு இல்லை டாக்டர். பங்களா. இருபத்து ரெண்டு அறைகள். மூணு மதத்திலே ஒவ்வொரு பக்கம் உக்காந்து கல்யாணம் பண்ணலாம் அந்த ஹால்ல. ஆறு ரூம் ஏ.சி., டி.வி., பிரிஜ், துணி துவைக்கிற மிஷின், பன்னிரண்டு வேலைக்காரங்க, மூணு கார், ரெண்டு நாய், நாய்ன்னா முன்சிபல் நாய் இல்லை. டாய்பூடில் என்ற வகை. இன்னும் என்ன சொல்ல? பங்களாவுக்குள்ள உலாத்தற காத்தில் கூட பணம் தெரியும். திரு.சந்திரசேகருக்கு நான் வீட்டில் இருந்தால் தொல்லை. டாக்டர் நீங்க கஞ்சா அடிச்சிருக்கிங்களா?"

"அடிச்சிருக்கேன்."

"பதினேழு வயசிலேயே அடிச்சிருக்க மாட்டிங்க."

"இல்லை."

"நான் அந்த வயசிலேதான் ஆரம்பிச்சேன். பி.யு.சி. படிக்கிறப்போ சர்க்காதேவ்னு ஒரு பையன் எனக்கு குரு. நிறைய 'முதல் தடவை'களை எனக்கு அறிமுகப்படுத்தினான். பட்டனை எல்லாம் போட்டுக்கிட்டு, பணத்தை வாங்கிச் செருகிக்கிட்டு, 'என்ன படிக்கிற தம்பி?'ன்னு கேட்டா சார் அவ. நல்லா ஞாபகமிருக்கு.



...துணியிலே வெள்ளை வெள்ளை பொடி வட்டம் போட்ட ...ட். கொசகொசன்னு ஒரு சேலை. பல் எல்லாம் போட்ட ...தலைக் காவி. நான் மொத மொத தபால் எழுதிப் போட்ட ...ஸ்ட் பாக்ஸ். ஹ ஹா!" என சிரிக்க ஆரம்பித்து கண்ணில் நீர் ...ம் வரை சிரித்தான்.

...ன் அமைதியானான். எதுவும் பேசவில்லை. பார்த்திபனும் ...ம் கேட்கவில்லை.

...யின்கார்ட் கேட்டில் சுறுசுறுப்பு ஏறிக் கொண்டிருந்தது. ...ட், சீவல் கடைகளில் யாருக்கோ விற்பனையாகி, யாருக்கோ ... போக... பெண்கள் காட்டிக் கொண்டு வரிசையாகத் ...ங்கினார்கள். அடுத்தடுத்த ஹோட்டல்களில் சாம்பிராணி ...டுக் கொண்டிருந்தார்கள்.

"ஒரு காபி சாப்பிடலாமா விஜி."

சாப்பிடலாம் என தலையாட்டினான். டோக்கன் வாங்கி ...ப்பையில் காபியோடு வந்தார் டாக்டர். மௌனமாக ...ந்தினார்கள். நடைபாதையில் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களைப் ...விக் கொண்டிருந்தான் சிறுவன். அருகில் இன்னொரு சிறுவன், ..., இந்தியா வேணுமா?" என்று விற்றுக் கொண்டிருந்தான் ...பாடங்களை.

...வுன் பஸ்சில் அமர இடம் கிடைத்தது.

"இனமும் நாம இது மாதிரி இங்கே வந்து வாக்கிங் போகலாமா ...டர்?"

"போகலாம், என் பேர் பார்த்திபன். உங்க கூட வாக்கிங் ...ப்போ நண்பன். என் பேரைச் சொல்லியே கூப்பிடுங்க. ...போர்டு பியர்ஸ் என்ன சொல்கிறார் தெரியுமா? ஒவ்வொரு மன ...யாளிக்கும் மிகவும் தேவையான ஒன்று ஒரு நண்பன்" என்று ...ன்னி முடித்து விட்டு சொல்லிய வார்த்தைகளுக்காக உள்ளுக்குள் ...க்கப்பட்டான் பார்த்திபன்.

எந்த மன நோயாளியையும், நீ மன நோயாளி என்று குறிப்பிடுவது ...சே! நான் சொல்லியிருக்கக் கூடாது.

அமைதியாய் இருந்த விஜியின் கையைப் பிடித்து, "ஸாரி விஜி... ...ன் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது."

"பரவாயில்லை சார். எனக்கே தெரியுது. நான் நார்மலா

இல்லைன்னு... நான் புதிராயிட்டேன். என்னால தொடர்பா எதையும் நினைச்சுப் பார்க்க முடியலை. பட்,பட்னு நூல் அறுந்துடற மாதிரி என் சிந்தனை அறுந்துடுது. என்னைக் காப்பாத்துங்க டாக்டர். எனக்கு நிறைய நாட்கள் வாழணும்னு ஆசையிருக்கு டாக்டர். நிறைய திட்டம் எல்லாம் வச்சிருந்தேன். சத்தியமா! அவ யாருன்னே எனக்குத் தெரியாது. ஆனா என் கைல கத்...''

''உஸ்'' என்றான் பார்த்தி. ''இது பஸ். எதுவும் பேச வேணாம் விஜி அமைதியாயிருங்க. உங்களுக்கு ஒண்ணுமில்லை''

விஜியின் கைகள் முன் சீட்டின் கம்பியைப் பிடித்திருந்தது. அந்தப் பிடி, நரம்புகள் புடைக்க வலுவடைந்தது.

மேலும் உணர்ச்சிகளின் உச்சத்தில் அவன் உடைந்து விடுமுன் ''விஜி, நாம இறங்கணும்'' என்று அவன் தோளை அசைத்து எழுப்பினான் பார்த்தி. இயந்திரமாய் இறங்கினான் விஜி.

ஆஸ்பத்திரி வந்து, அவன் அறைக்கு வந்து...

''கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துட்டு, குளிங்க, குளிச்சுட்டு ரெடியா இருங்க. நானும் வந்த பிறகு சேர்ந்து டிபன் சாப்பிடலாம்'' என்று பார்த்திபன் சொல்லிச் சென்ற பிறகும் கூட, விஜியின் வெறித்த பார்வை அவன் கணகளை விட்டு அகலவில்லை.

★ ★ ★

தஞ்சாவூர்.

எஸ்.ஐ.நாகராஜன் டெரிக்காட்டன் காக்கிப் பாண்ட்டை அணிந்து கொண்டார். சுருக்கமில்லாமல் சட்டையை உள்ளே செருகினார். பெல்ட் போட்டார்.

சலவைத் தொழிலாளிக்கு அவர் மனைவி துணிகளைப் போட்டுக் கொண்டு கணக்கு எழுதிக் கொண்டு இருந்தாள்.

நாகராஜன் சீப்பெடுத்து மிசையை சீவினார். பேனாவைத் தேடி சட்டையில் செருகிக் கொண்டார்.

''ஸ்டாண்ட்ல தொங்கற சட்டையை சலவைக்குப் போட்டுடட்டுமா?''

''போட்டுடு''

ஸ்டூலில் அமர்ந்து ஷூ போட்டுக் கொண்டார். லேஸை இறுக்கி



...ச்சுப் போட்டார்.

''போய்ட்டு வர்றேன்.''

வாசலில் வந்து 'பைக்'கை லேசாய் துடைத்து விட்டு ...துகையில்...

''இந்த பேப்பர் வேணாமா? சட்டையிலே இருந்திச்சு.''

வாங்கிப் பார்த்து, ''அடடா! நேத்து திருச்சிலேர்ந்து ஒரு தகவல் ...ரிக்கச் சொல்லி போன் வந்தது. விவரம் குறிச்சு வெச்சேன். ...மா மறந்துட்டேனே!''

ஸ்டேஷன் வந்து அமர்ந்தார்.

''சார், குடிச்சிட்டு இவன் இவரோட கடையில கண்ணாடியை ...டைச்சுட்டான்'' என்றார் கான்ஸ்டபிள் 737.

''அப்படி இருக்கட்டும். பார்க்கிறேன்'' என்று அந்தப் பேப்பரை ...த்தார்.

மணி புத்தக நிலையம்- of course, I love you கவிதைப் புத்தகம் - ...ன சித்ரா என்று கையெழுத்து - பிறந்த நாள் வாழ்த்துகள், ...ரியங்களுடன் நானே என்று கையெழுத்து - இதை வைத்து ...த்தாளின் முகவரி தேவை - அவளைப் பார்த்து, பேசி... இதை ...ருக்குக் கொடுத்தாளோ அவனின் முகவரி தேவை.

பெருமூச்சு விட்டார். குப்பை பெறாத தகவல். இதை வைத்துக் ...கண்டு கண்டுபிடிப்பது நடக்கிற காரியமா?

''யோவ் 261, மணி புத்தக நிலையம்னு புத்தகக் கடை இருக்கா ...ங்கே?''

''ஆமாம் சார்.''

''எங்கே இருக்கு?''

''அரண்மனைக்காரத் தெருவிலே.''

''சைக்கிள் எடுத்துக்கிட்டுப் போய், அதோட மொதலாளி இல்லை ...ஜேனர் மாதிரி யாரு பொறுப்பா கடையிலே இருக்காங்களோ, ...வங்களைக் கூட்டிக்கிட்டு வா.''

அவன் போனதும் வாசனைப் புகையிலையைப் போட்டுக் ...கொண்டு டிராயரைத் திறந்து பொட்டலம் எடுத்துப் பிரித்து ...யிலையை எடுத்தார்.

''இப்படி வாங்க நீங்க. உங்க கடை கண்ணாடிதான் உடைஞ்சது! என்ன நடந்திச்சு? விபரமாச் சொல்லுங்க...''

விசாரித்து விட்டு இவனிடமிருந்த வாட்ச்சை வாங்கி அவரிடம் கொடுத்து, ''புதுக் கண்ணாடி ஒண்ணு நீயே வாங்கி கடையில போட்டுட்டு உன் வாட்ச்சை வாங்கிக்க போ, இன்னொரு தடவை இங்கே வந்தே உள்ளே தள்ளிடுவேன். போடா''

போனான். கான்ஸ்டபிள் 261ம், மணி புத்தக நிலைய முதலாளி கண்ணபிரான் இருவரும் வந்தார்கள். பத்து நிமிடம் கழித்து கண்ணபிரான் 'வர்றேன் சார்' என்று போனார்.

விசாரணையில் கிடைத்த தகவல்.

அந்தப் புத்தகம் பல பேர் வாங்குகிறார்கள். நன்றாய் விற்கும் புத்தகம் அது. கடைக்கு வரும் கஸ்டமர்கள் பெயர் தெரியாது. சித்ரா என்று யாரையும் தெரியாது. பில் போடும் போது புத்தகத்தின் பெயரைப் போடுவது உண்டு. வாங்குபவர் பெயர் போடுவது இல்லை.

நாகராஜன் வந்த தீர்மானம்.

இது நடக்கிற காரியமில்லை.

அவர் எடுத்த முடிவு?

திருச்சிக்கு போன் செய்து... 'விசாரித்தேன், தகவல் சேர்க்க முடியவில்லை. இன்னும் ஏதாவது அதிக துப்பு கிடைத்தால் தெரிவியுங்கள். முயற்சிக்கிறேன்' என்று சொல்லி விடலாம்.

சொன்னார்.

★ ★ ★

''இதுதான் உங்க வீடா டாக்டர்?'' என்றான் விஜி.

''ஆமாம்'' என்றான் பார்த்திபன்.

''ரொம்ப அழகு. அந்த ஃபோட்டோல இருக்கிறது யார் டாக்டர்?''

''என் மனைவி. இப்போ ஊர்ல இல்லை. காதல் கல்யாணம்.''

ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தான் விஜி. கத்தினான் உடன்.

''பொய்! பொய்! காதல்ன்னு ஒண்ணு கிடையாது. இன்னொரு



தடவை சொல்லாதீங்க... மனிதன் காதலிக்கக் கூடாது டாக்டர். காதலிக்கக் கூடாது. நோ! நோ! கூடவே கூடாது...

> **பிரியமான நீயே,**
>
> என் உதட்டில் தடயம் தேடும் போது
>
> கிடைக்க வேண்டும்- உன் உதட்டின் ரேகை.
>
> எப்போது நிகழப் போகிறது
>
> அந்தக் குற்றம்?
>
> **பிரியங்களுடன் நானே**

## 12

''ஏன் விஜி அப்படிச் சொல்றீங்க?'' என்றான் பார்த்திபன்.

விஜி பதில் சொல்லவில்லை. சோபாவில் சௌகரியமாக அமர்ந்து கொண்டான். ட்ரேயின் மேல் இருந்த ஆஷ்ட்ரேயைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு சிகரெட் வைக்கும் பள்ளத்தில் சுண்டு விரலால் தேய்த்தான்.

பார்த்திபன் சிரித்துக் கொண்டே அவன் அருகில் அமர்ந்து ஆஷ்ட்ரேயை வாங்கி வைத்து விட்டு, ''என்னைப் பாருங்க விஜி'' என்றான்.

பார்த்தான்.

''ஏன் சொன்னீங்க அப்படி?''

''என்ன சொன்னேன்?''

''காதலிக்கக் கூடாதுன்னு.''

''ஆமாம் டாக்டர். கூடாது. ஏமாந்துடுவீங்க.''

''நான் ஏமாறலையே விஜி.''

''நான் ஏமாந்திருக்கேனே டாக்டர்.''

''சொல்லுங்க... எப்படி ஏமாந்தீங்க? யாரு ஏமாத்தினது?''

அருகே கிடந்த ஒரு ஆங்கிலப் பத்திரிகையை எடுத்தான் விஜி. அட்டையில் ஒரு பெண் சிரித்துக் கொண்டிருந்தாள்.

''இந்தச் சிரிப்பு பொய் டாக்டர்! சருகுகள் மறைச்ச பள்ளம் இருக்கு டாக்டர் இந்தச் சிரிப்புக்குப் பின்னாடி.''

''ஏன்?''

''இவ பொம்பளை டாக்டர். ஒரு பெண்ணை நீங்க நம்பவே கூடாது.''

''பெண்கள் இனிமையானவங்க விஜி.''

''இல்லை!'' என்று மேஜை மேல் குத்தினான். ''பெண்களோட உடம்புதான் இனிமையானது மனசு இல்லை, இல்லை, இல்லை. வாழைப்பழங்கிறது என்ன டாக்டர்? தோலும், பழமும் சேர்ந்தது தானே?''

''ஆமாம்.''

''பழம் இனிக்கும். தோல்? வழுக்கிவிழ வச்சுடும். அது மாதிரி உடம்புதான் இனிப்பு. மனசுக்குள்ளே எப்படா இவனைக் கீழே தள்ளலாம்ங்கற எண்ணம் புதைஞ்சு கிடக்கும். டாக்டர், சிகரெட் கொளுத்தி விடுங்க ப்ளீஸ்...''

தனக்குக் கொளுத்திக் கொண்டு விஜிக்கும் கொளுத்திவிட்டு, லைட்டரைப் போட்டு விட்டு, ''ஏன் விஜி தள்ளணும்'' என்றான் பார்த்திபன்.

''ஏன்? ஏன்? எனக்கு பதில் கிடைக்கலை டாக்டர். மனசளவிலே நான் ஒரு செத்துப்போன மனுஷன் டாக்டர். அவ... அவதான் காரணம். பீஸ் பீஸா நொறுங்கிப் போயிருக்கேன். என்னைக் கொலை செஞ்சது அவ... அவதான்...''

இப்போது விஜி எழுந்து நின்று கொண்டான். வலது கையின் கட்டை விரலையும், சுட்டு விரலையும் துப்பாக்கி போல் வைத்துக் கொண்டு... தன் நெஞ்சில் வைத்து...

''இங்கே சுட்டா டாக்டர். நோ துப்பாக்கி, நோ 'டுமீல்'. ஆனா செத்துப் போச்சு மனசு. அவளோட ஒவ்வொரு செல்லையும் காதலிச்சேன் டாக்டர். சொடுக்கினா ஓடற நாய் மாதிரி அவ கண்களைப் பார்த்தவுடனே என் இதயம் ஓடிச்சு டாக்டர். அவ பாடின பாட்டை என் டேப்பில் போட்டு ஆறாயிரம் தடவை



ட்டிருக்கேன். ஒரு குயர் நோட்டு பூரா ஒரு இண்டு, இடுக்கு விடாம பேரை எழுதி அவளுக்கு ப்ரசண்ட் பண்ணேன் டாக்டர். என்ன சொன்னா தெரியுமா? 'விஜி, நான் உங்களை எந்த அளவு காதலிக்கிறேன் தெரியுமா? இந்த யுனிவர்ஸ் அளவு!' பஞ்சு மெத்தை வார்த்தைகள் இல்லை டாக்டர். அது, புதைமணல் வார்த்தைகள். கொசுவைக் கூப்பிடற எண்ணெய்ப் பேப்பர்! கரும்புத் தோட்டத்திலே ஒளிஞ்சு காத்திருக்கிற மின்சாரக் கம்பி! அது முதல் மாடி டாக்டர்! 'வா விஜி!'ன்னா. ரெண்டாம் மாடிக்குப் போனேன். 'வா விஜி'ன்னா. மூணாம் மாடி, நாலாம் மாடி, அஞ்சாம் மாடி... அப்புறம் மொட்டை மாடி. அங்கேர்ந்து தள்ளினா டாக்டர். தொபக்கடீர்ன்னு விழுந்தேன். உடைஞ்சு போயிட்டேன் டாக்டர். நான் ஏமாந்துட்டேன், ஏமாந்துட்டேன்...''

உடன் அப்படியே தரையில் அமர்ந்து குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தான் விஜி.

''எந்திரிங்க விஜி. கண்ணைத் துடைச்சுக்கங்க. வாங்க, டீ சாப்பிடலாம்.''

விஜியின் தோள் மீது கை போட்டுக் கொண்டு டைனிங்ஹாலுக்கு அழைத்துச் சென்றான் பார்த்திபன். அமைதியாய் டீ சாப்பிட்டார்கள்.

''அவ பேர் என்ன விஜி?''

''சித்ரா!'' என்றான். இன்னொரு டீ கேட்டு வாங்கிச் சாப்பிட்டான்.

''இந்த மாத்திரையை இப்ப சாப்பிடலாமா இந்த டீயிலே?'' கேட்டான் விஜி.

''சாப்பிடுங்க விஜி''

சாப்பிட்டு விட்டு... ''நான் ஆஸ்பத்திரிலே போய்ப் படுத்துக்கறேன் டாக்டர்.''

''தாராளமா. நானும் கூட வர்றேன்.''

ஆஸ்பத்திரி வந்து அவனது அறையில் படுத்ததும் சில நிமிடங்களில் தூங்கிப் போனான் விஜி. பார்த்திபன் தன் அறைக்கு வந்து இரண்டு கைகளையும் கன்னத்தில் வைத்துக் கொண்டு யோசித்துக் கொண்டிருந்தான் நிறைய நேரம்.

அப்புறம் டிராயரிலிருந்து அந்த நோட்டை எடுத்து கொஞ்ச நேரம் எழுதிவிட்டு மூடி வைத்தான். நோட்டின் மேல் 'விஜி' என்று எழுதியிருந்தது.

★ ★ ★

மாயவரம்.

கிர்ர் என்று இழுத்து டைங்! கிர்ர் என்று இழுத்து டைங்! இந்த ரீதியாக பத்து முறை அடித்தது அந்த சுவர்க் கெடிகாரம். அதன் தலை மேல் முண்டாசாய் ஒரு குருவி ஜாகை அமைத்திருந்தது. பின்புற பாத்ரூமிலிருந்து தண்ணீர் சத்தம் மெலிசாய்.

இன்ஸ்பெக்டர் முரளிதரன் நாற்காலியில் காத்திருந்தார்.

''என்ன கேக்கணும் என் பொண்ணை?'' என்றார் அவர். விசிறி மட்டையின் பின்புறத்தால் பனியனுக்குள் விட்டு நடுமைய முதுகை தேய்த்துக் கொண்டிருந்தார்.

''சித்ராவுக்கு உங்க பொண்ணு நிமா ரொம்ப ஃப்ரெண்டு. அதனால அவளோட குணங்கள் பத்திக் கேக்கணும்.''

சமையல்கட்டிலிருந்து பாத்ரூமுக்குச் செய்தி போனது. ''சீக்கிரம் குளிச்சுட்டு வாடி, உன்னைப் பார்க்க இன்ஸ்பெக்டர் வந்திருக்கார். ஏங்க, கேளுங்க, காபி சாப்பிடறாரான்னு...''

பத்து நிமிடங்களுக்குப் பிறகு...

''உன் பேர் என்னம்மா?''

''நிறைமதி. கூப்பிடறது நிமா.''

''சித்ரா உனக்கு ரொம்ப நாள் ஃப்ரெண்டா?''

''ஒண்ணாங் கிளாஸ்லேர்ந்து நாங்க கிளாஸ்மேட்ஸ் சார்.''

''அவ எப்படி? மக்கா, புத்திசாலியா?''

''எல்லாப் பரிட்சையிலேயும் அஞ்சு ரேங்குக்குள்ளே வருவா.''

''நீங்க எல்லா விஷயமும் பேசிக்குவீங்களா? சினிமா... அரசியல்... இப்படி...''

''பேசுவோம் சார்.''

''குடும்பத்தைப் பத்தி! உங்களைப் பத்தி?''



''பேசுவோம் சார்.''

''உங்கப்பாவுக்கு முன்னாடி வச்சே உன்னைக் கேக்க வேண்டியதா ...தர்மசங்கடம். சித்ரா, தியாகராஜனை காதலிச்சதைப் பத்திச் சொன்னாளா?''

அப்பாவைப் பார்த்து தயங்கி, ''ம்.''

''கல்யாணம் பண்ணிக்கப் போறதா சொன்னாளா?''

''இல்லை. விளையாட்டா ரெண்டு பேரும் லெட்டர் எழுதிக்கிட்டிருக்கோம். வீட்டுக்குத் தெரிஞ்சா காலை ...டச்சுடுவாங்கன்னா. அவ காதலிக்கலை சார். விளையாட்டுத்தனம் ...னு.''

மேலும் சில கேள்விகள்.

மேலும் சில பதில்கள்.

வீட்டை விட்டு வெளியே வந்தார் முரளிதரன். அந்த தியாகராஜன் ...யத்திற்கு நான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறேனோ? இந்த ... தப்போ? வேறு நுனியைத் தேடாமல் கிடைத்த ஒரே நுனியை ...த்துக் கொண்டு திண்டாடுகிறேனா?

அவன் எக்ஸ். அவன் எப்படி இருப்பான் என்கிற சில குறிப்புகள் ...வசம். கத்தியில் கைரேகை இல்லை. அதைச் சுற்றி இருந்த ...சிப்பில் புதுத் தகவல் இல்லை. வண்ணான் குறி இல்லை. புது ...சிப். சம்பவம் நடந்த அன்று இரவு திருப்பதி- மதுரை ...ஸ்பிரஸ்ஸில் ஏறியிருக்கிறான். திருச்சி வரை உள்ள ஊர்களில் ...ன்றில்... அல்லது கடைசி ஸ்டேஷனான திருச்சியில் ...கியிருக்கலாம்.

ரிக்ஷாக்காரர்கள் அனைவரையும் விசாரித்தாயிற்று. யாருக்கும் ...றைய தினம் மாலை அந்த வீட்டிற்கு சவாரி கொண்டு வந்து விட்ட ...வு இல்லை. மறந்து போவதும் நியாயமானது.

திருச்சி, தஞ்சை எல்லா ஸ்டேஷன்களுக்கும் அடையாளங்கள் ...ப்பிட்டு தகவல் போயிருக்கிறது. போட்டோ இருந்தாலே ...டுபிடிப்பது சிரமம். இப்படி, இப்படி இருப்பான் என்கிற ...ண்டி அடையாளங்களை வைத்துக் கொண்டு எதுவும் செய்ய ...டியாது.

...து அடுத்த நடவடிக்கை என்ன?

இன்னும் கொஞ்சம் ரிக்‌ஷாக்காரர்கள் விசாரிக்க வேண்டியிருக்கிறார்கள். விசாரிக்கலாம். இதில் நான் எதிர்பார்க்கிற ஒரே தகவல்...

எங்கிருந்து சவாரி ஏற்றினான் என்பது. அது தெரிந்தால் அதிலிருந்து வேறு ஏதாவது வழியில் இறங்கலாம். ஆனால் அதுகூட அத்தனை உதவியான தகவல் என்று சொல்ல முடியாது.

இத்தனை கொடூரமான கொலை என் ஏரியாவில் நடந்திருக்கிறது. இதைக் கண்டுபிடிக்காமல் விடுவதா? நோ. அவன் கிடைத்தே ஆக வேண்டும். ஒரு புது வழி எனக்குத் தேவை நுழைவதற்கு.

என்ன வழி அது? எப்போது தெரியும்?

பைக்கை ஸ்டார்ட் செய்தார் முரளிதரன். ஸ்டேஷனில் அன்றைய தபாலில் அவருக்கு டிரான்ஸ்ஃபர் ஆர்டர் வந்து காத்துக் கொண்டிருந்தது.

★ ★ ★

''ரெண்டு பைனாப்பிள் ஐஸ்க்ரீம் கொண்டாப்பா''

ஒவ்வொரு மேஜைக்கும் ஒரு சொற்ப வெளிச்ச விளக்கு. சுவர் மறைவினில் இருந்து திடும் திடும் என்று மேற்கத்திய இசை தெறித்துக் கொண்டிருந்தது.

செர்ரிப் பழத்தை முதலில் எடுத்து சாப்பிட்டுக் கொண்டே ''சொல்லு பார்த்தி... என்ன சொல்றான் விஜி? அது அவன் செய்யலையே?'' என்றான் ரவி.

''நான் ஏற்கனவே உனக்கு சொல்லிருக்கேன் ரவி. வயத்த வலிக்குதா, என்ன சாப்ட்டேன்னு கேட்டு வைத்தியம் பார்க்கப்பட வேண்டிய நோயாளி இல்லை அவன். ரொம்பப் பொறுமையா அவன் போக்குக்கு விட்டு விஷயங்களை வாங்கணும். வாங்கிட்டிருக்கேன். இன்னும் அந்தச் சம்பவத்துக்கு வரலை. ரவி, உன் ஃப்ரண்டு சித்ரான்னு ஒரு பெண்ணைக் காதலிச்சான்கிறது உனக்குத் தெரியுமா?''

''அப்படியா? எனக்குத் தெரியாதே.''

''ரொம்ப அழுத்தமான டைப். சின்ன வயசிலேர்ந்து அன்புக்காக நிறைய ஏங்கியிருக்கான். ஒவ்வொரு கட்டத்திலேயும் அவனுக்கு அது மறுக்கப்பட்டிருக்கு. அந்தக் காதல் தோல்விதான் சீட்டுக்கட்டு



...புறத்தின் மேல் தட்டின் கடைசி கார்டு. அது அவனை ...றுக்கிடுச்சு. எனக்கு விவரங்கள் இன்னும் வேணும்.''

''யாரைக் காதலிச்சதா சொன்னே? என்ன பேரு?''

''சித்ரா.''

''வெய்ட். மாயவரத்திலே கொலை செய்யப்பட்ட அந்தப் பொண்ணு பேரும் சித்ரா.''

''தெரியும். என்னால சில முடிச்சுக்கள் போட முடியுது ரவி.''

''அப்போ ஷ்யாமான்னு உளறினான்னு சொன்னேனே, அது யாரு?''

''இன்னும் அவன் சொல்லலை. சொல்வான். இப்போ எந்த ...வான தீர்மானங்களுக்கும் வர நான் தயாரா இல்லை ரவி. என்னை நான் இங்கே அழைச்சுக்கிட்டு வந்தது வேற ...த்துக்காக.''

''என்ன பார்த்தி?''

''இன்னும் ரெண்டு நாள் கழிச்சு நான் ஊட்டி போறேன். உனக்குத் தெரியுமே, அங்கே எனக்குக் கொஞ்சம் தோட்டம் இருக்கு. அதை ...றேன். அது சம்பந்தமான வேலைகள். திரும்ப மூணு நாள் ஆகும். ...ன் காரை எடுத்துக்கிட்டுப் போறேன். இந்தப் பயணத்திலே நீயும், ...யும் என்னோட கலந்துக்கறீங்க. மலைப்பிரதேசம். ஒரு ...மான சூழ்நிலை. விஜியோட மனநிலைக்கு ஆறுதல் தரும். ...ன, வர்றியா?''

''நிச்சயமா வர்றேன் பார்த்தி. அதுக்கு முன்னாடி நான் ...னைக்கு ராத்திரி ராக்ஃபோர்ட்ல புறப்பட்டு மெட்ராஸ் ...றேன். நாளன்னைக்கு வந்துடறேன். நாம எப்போ ...றோம்?''

''நாளன்னைக்கும் அடுத்த நாள். என்ன விஷயமா போறே ரவி?''

''விஜி விஷயமாதான்.''

''விஜி விஷயமா என்ன செய்யப் போறே?''

''அவன் நன்மைக்காக சில ஏற்பாடுகள் செய்யறதுக்கு. நோய் ...க்கு முன்னாடியே தடுப்பூசி போடற மாதிரி... போய்ட்டு வந்து ...மா சொல்றேன். ஏய்... ஏய்... பில்லை எடுக்காதே, நான் பணம் ...றேன்'' என்றான் ரவி.

'டேக் வாட் யு ஃபைன்ட்' என்று அனிதா சாராவ ரகசியக் குரலில் பாடிக் கொண்டிருக்க... எழுந்தார்கள்.

★ ★ ★

நரசிம்மன் தன் க்ளினிக்கை பூட்டிக் கொண்டு தன் வீட்டிற்கு வெஸ்பாவில் புறப்பட்டு பிரயாணித்துக் கொண்டிருக்கையில்... பாலக்கரையைக் கடக்க வேண்டியிருந்தது. கடக்கையில் போலீஸ் ஸ்டேஷன் கண்ணில் பட்டது. பட்டதும் அந்தப் புத்தக விஷயமாய் இன்ஸ்பெக்டர் என்ன செய்து வைத்திருக்கிறார் என்று அறிய விருப்பம் எழுந்தது. எழுந்ததும் வண்டியை நிறுத்தி உள்ளே நுழைய, இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

''வாங்க சார், உக்காருங்க. அந்தப் புத்தக விஷயமா நான் கொஞ்சம் முயற்சி எடுத்தேன். சரியா பலன் இல்லை. நானே காரியத்திலே நேரடியா இறங்க முடியாம இங்கே பிரச்னைகள். ஆனாலும் அதை நான் விடறதா இல்லை. வேற முயற்சி பண்ணலாம்னு இருக்கேன். அதுக்குள்ளே எனக்கு டிரான்ஸ்ஃபர் வந்திருக்கு.''

''அடடா! எந்த ஊருக்கு சார்?''

''மாயவரத்துக்கு'' என்றார் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி.

> பிரியமான நீயே,
>
> 'என்னிடம் காதலை வாங்கு. கனவுகள் இலவசம்'
> என்கிறார் கவிஞர் தேவரசிகன்.
> என்னிடம் காதலை வாங்கு.
> காதலை விற்பனை செய்-
> கனவுகளைப் பகிர்ந்து கொள்வோம் என்பது...
>
> பிரியங்களுடன் நானே.

## 13

மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் சென்னை எழும்பூரை அடைந்தபோது... தொந்தரவு செய்யாதீர்கள், கொஞ்சம் நேரம் கழித்து விடிகிறேன் என்றது வானம். பனியால், மழை பெய்த மாதிரி தரையெல்லாம் தண்ணீர் பூத்திருந்தது. தொட்ட இடம் எல்லாம் ஜிலீர் என்றது மார்கழி!



ரவி தன் சின்ன சூட்கேஸை எடுத்துக் கொண்டு இறங்கினான். பரிசோதகரிடம் டிக்கெட்டைத் தந்துவிட்டு வெளியே வந்தான். மணி பார்த்தான். 5.20. சூடாக ஒரு காபி சாப்பிட்டுவிட்டு ஆட்டோ ஒன்றில் ஏறிக் கொண்டான்.

★ ★ ★

''விடுங்க, நான் எழுந்திருக்கணும்'' என்றாள் ஷ்யாமா போர்வைக்குள்.

''என்ன பண்ணப் போறே எழுந்து? சும்மா இரு'' என்றார் சந்திரசேகர் போர்வைக்குள்.

''உடற்பயிற்சி செய்யணும்.''

''இது மட்டும் பயிற்சி இல்லையா?''

''இன்னிக்கு கிளப்பிலே ஒரு டிஸ்கஷன் இருக்கு பத்து மணிக்கு.''

''பெரிய டிஸ்கஷன். யார் யார். புதுசா என்ன புடவை, நகை வாங்கியிருக்காங்கன்னு தெரிஞ்சுக்கத்தானே உங்க கிளப் எல்லாம். குளிருது ஷ்யாம். இன்னும் பக்கத்திலே வா.''

★ ★ ★

ஆட்டோவிலிருந்து இறங்கிக் கொண்டான் ரவி. கந்தசாமி கார் துடைத்துக் கொண்டிருந்தான்.

''அய்யா ஊர்லதானே இருக்கார்?''

''ஆமாம். இன்னும் எந்திரிக்கலைன்னு நினைக்கிறேன். உள்ளே வாங்க. சூட்கேஸைக் கொண்டாங்க, நான் எடுத்துட்டு வர்றேன். உங்க ஃப்ரண்ட் ரெண்டு மூணு நாளா ஊர்ல இல்லை''

''தெரியும்.''

ரவி உள்ளே வந்து...

''அவரைத் தொந்தரவு பண்ண வேணாம். எழுந்திரிச்சு வர்றப்போ வரட்டும். நான் குளிக்கணும். வெந்நீர் ஏற்பாடு பண்றீங்களா கந்தசாமி?''

''ஏற்பாடு என்ன ஏற்பாடு? கெஸ்ட் ரூமுக்கு வாங்க... பாத்ரூம் போங்க. திருகுங்க. வெந்நீர் தானா வருது.''

வந்தான். போனான். திருகினான். வந்தது. குளித்தான்.

பயண உடையை மடித்து வைத்துவிட்டு வேறு உடை அணிந்து கொண்டு, மணிபர்ஸ் எடுத்து வைத்துக் கொண்டு ஷூ அணிந்து கொண்டபோது... சுந்தரம் வந்தான்.

''குளிச்சிட்டீங்களா? அய்யா எழுந்திரிச்சுட்டாங்க. கீழே வந்து பேப்பர் பார்த்துக்கிட்டு இருக்காங்க.''

''இதோ வர்றேன்.''

★ ★ ★

பேப்பரைத் தாழ்த்தி, ''அடடே.... வாப்பா வாப்பா... ரவிதானே உன் பேரு... உக்காரு'' என்றார் சந்திரசேகர். இன்னும் குளிக்கவில்லை.

''என்ன சார், எப்படி இருக்கீங்க?'' என்று அமர்ந்தான்.

''நல்லா இருக்கேன். விஜி இப்பல்லாம் என் வார்த்தைக்குக் கட்டுப்படறதில்லைப்பா முந்தி மாதிரி... பிஸினஸ்லயும் அக்கறை இல்லை. தஞ்சாவூர்ப் பக்கத்திலே நமக்கு பண்ணை இருக்குதில்லே, அங்கே போறேன்னான். சரி, எதிலையாவது அக்கறை இருந்தா சரின்னு அனுப்பி வச்சேன். அங்கேர்ந்தும் வந்துட்டான். இப்ப பாரு, ஆள் புறப்பட்டு எங்கேயோ போயிருக்கான். மூணு நாள் ஆச்சு... எந்தத் தகவலும் இல்லை. போன மாசம் இந்த மாதிரி எங்கேயோ போய்ட்டு ஒரு வாரம் கழிச்சு வந்தான். எங்கேடா போனேன்னா சித்தன்ன வாசல் போனேன் ஓவியம் பார்க்கிறதுக்குங்கறான். வரவர அவன் போக்கே ஒரு மாதிரி இருக்கு. எக்ஸெண்ட்ரிக் மாதிரி நடந்துக்கறான்.''

ரவி சற்று அமைதியாய் இருந்துவிட்டு சொன்னான்.

''விஜி இப்போ திருச்சில என் வீட்லதான் இருக்கான்.''

''அப்படியா? இருக்கட்டும். தாராளமா இருக்கட்டும். இந்த மாதிரி நான் திருச்சி போறேன், ரவி வீட்ல ஒரு வாரம் இருந்துட்டு வர்றேன்னு என்கிட்டே சொன்னா நான் என்ன சொல்லிடப் போறேன்? வேணாம்னு கட்டியா போடப் போறேன்?''



''கோவிச்சுக்கக் கூடாது சார். அவனுக்கு மனசிலே ஏதோ வருத்தங்கள் இருக்கு.''

''தெரியும்.'' என்றார். சுருட்டு கொளுத்திக் கொண்டார். பேப்பரை மடக்கிப் போட்டு விட்டு நடந்தார் பத்தடி வரை. திரும்பினார் நாடகத்தனமாக.

''இங்கே பாரு ரவி, யாருக்கு வருத்தங்கள் இல்லை? உனக்கு இல்லையா சொல்லு? இத்தனை பணம் இருக்கே, எனக்கு இல்லையா? உணர்வுகளுக்கு நாம அடிமையாயிடக் கூடாது. சந்தோஷம், சங்கடம் எல்லாம் அலைகள் மாதிரி. ஒண்ணு பின்னாடி ஒண்ணு வந்துகிட்டே தான் இருக்கும். ஆனா அந்த அலைகளுக்கு அடியிலே ஆழமா இருக்கிற கடல் நிரந்தரமானது. அது மாதிரிதான் வாழ்க்கை. என்ன துயரம், சிரிப்பு, தோல்வி எது வந்தாலும் வாழணும். அதுவும் சிரிச்சுக்கிட்டே. பிறக்கறப்போ அழுகிறோம். சாகறப்போ அழுகிறோம். நடுவில முழுக்க சிரிக்கலாமே... எந்த உணர்வுமே எல்லை மீறக் கூடாது பாசம் உள்பட. விஜிக்கு என் மேல வெறுப்பு நிறைய. என் கிட்டேர்ந்து பாசத்தை ரொம்ப எதிர்பார்க்கிறான். அவனுக்கு அப்பாவாகவே இருக்கணும் இருபத்து நாலு மணி நேரமும்- இது அவன் எதிர்பார்ப்பு. உறவினாலே நான் அப்பா. ஆனா நான் சந்திரசேகர். சந்திரசேகர் எண்ணப்படி சந்திரசேகர் வாழ்றதை இவனால ஜீரணிக்க முடியலை. மனப்பக்குவம் பத்தாது. என் ஆபீஸ்ல வேலை பார்த்த ஒரு பொண்ணை எனக்குப் பிடிச்சிருந்தது. அவளும் சம்மதிச்சா. நான் ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கிட்டேன். இதை ஒத்துக்க அவனால முடியலை...''

மாடிப்படிகளில் ஷ்யாமா முழு கவுனில் இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

''ஒரு நிமிஷம் இங்கே வாயேன்'' என்றழைத்தார். வந்தாள்.

''இவர் ரவி. திருச்சிலே வேலை பார்க்கிறார். நம்ம விஜியோட நெருங்கிய சிநேகிதன். ரவி, இவதான் என் இரண்டாவது மனைவி. டிபன் ஏற்பாடு பண்ணச் சொல்லும்மா.''

ஷ்யாமா சென்றாள்.

விஜியின் மனநிலை பாதிப்பிற்கு பார்த்திபன் சொன்ன காதல் தோல்வி பல காரணங்களில் ஒன்று என்று நினைத்தான் ரவி. எதிலுமே பற்றில்லாத மனநிலை கொண்ட அப்பா அவன் மனசில் ரொம்ப

நாளாய் பாதிப்பை உண்டு பண்ணியிருக்கிறார். அதற்கு உச்சமாய் இரண்டாம் கல்யாணம்! இதை தன் தாய்க்கு இழைக்கப்பட்ட துரோகமாய் நினைத்திருக்கிறான் விஜி.

''என்ன ரவி பேசலை? என்னை வெறுத்துப் பேசியிருப்பானே அவன்?''

''அதெல்லாம் இல்லை சார். மனசு சரியில்லைன்னு மட்டும்தான் சொன்னான்.''

மாயவரம் கொலை- மனோவியாதி ட்ரீட்மெண்ட் என்ற எதையும் இவருக்கு இப்போது தெரியப்படுத்த வேண்டாம் என்று தீர்மானித்துக் கொண்டான்.

''சரி, நீ என்ன வேலையாப்பா வந்தே?''

''ஒரு ஆபீஸ் வேலையா வந்தேன் சார்.''

''விஜிகிட்டே எடுத்துச் சொல்லு... உங்கப்பாவை நல்லாப் புரிஞ்சுக்கடான்னு. அவன் மேல எனக்கு பாசம் இல்லாம இல்லை. அவன்தான் கிட்டேயே வர்றதில்லை. இவ்வளவு சொத்துக்களும் அவனுக்குத்தான் சம்பாதிச்சேன். சம்பாதிக்கிறேன். ஒரு கல்யாணம் பண்ணி வைக்கணும். இவன்தான் பித்துப் பிடிச்சவன் மாதிரி எதையோ மனசில வச்சுக்கிட்டுத் திரியறானே. எடுத்துச் சொல்லு அவனுக்கு... நான் குளிச்சுட்டு வந்துடறேன். டிபன் சாப்பிடலாம்'' என்று சென்றார் சந்திரசேகர்.

ரவி ட்ரேயின் அடித்தட்டில் இருந்த ஆங்கிலப் பத்திரிகைகளை எடுத்துப் புரட்டினான். ஒன்றில் ஷ்யாமா என்று கையெழுத்துப் போட்டிருக்க... கடந்து சென்ற கந்தசாமியைக் கேட்டான். ''சின்னம்மா பேரு என்ன?''

''ஷ்யாமா'' என்று விட்டுச் சென்றான்.

தூக்கிவாரிப் போட்டது ரவிக்கு. ஷ்யாமா! சித்தி! தன் தந்தையின் மனைவி! இளம் மனைவி! அவள் பெயரை தூக்கத்தில் உளறினான் விஜி. அதோடு இல்லாமல் சவுதி அரேபியாவில் தலையைச் சீவிவிடுவான் என்று உளறினான். தப்பு... வேணாம் என்று உளறினான்.

குழப்பமாய், திகிலாய், புரியாமல் ஏதோ புரிந்தது ரவிக்கு.

டிபன் சாப்பிட்டு விட்டு சந்திரசேகர் ஆபீஸ் புறப்படும் போது



அவர் காரிலேயே ஏற்றிக் கொண்டு பாரிஸ் கார்னரில் இறக்கி விட்டார். ''மாலை பார்க்கலாம்'' என்று சென்றார்.

ரவி ஹோட்டல் ரம்யா நோக்கி நடந்து, உள்ளே சென்று, மாடிக்கு வந்து மானேஜர் டேபிள் பின் நாற்காலியில் உட்கார்ந்து மும்முரமாய் எழுதிக் கொண்டிருந்தவனின் தோளில் தட்டி, ''குட்மார்னிங் சார்!'' என்று சொன்னதும்...

''ஹேய்! ரவ்வ்வி! நீ... நீதானா? வாடா, வாடா... எப்படிம்மா இருக்கே? என்ன திடுதிப்புன்னு... என்னால நம்பவே முடியலை, முதல்ல உட்கார்டா...'' என்றான் அந்த மானேஜர்.

''உன் கிட்டேர்ந்து எனக்கு உதவி வேணும் சந்துரு...''

''என்ன செய்யணும் சொல்லு... செஞ்சிடலாம். உனக்கில்லாத உதவியா? மொதல்ல கூல்ட்ரிங்'' என்று கால்பாயை அழைத்தான் மானேஜர் சந்துரு.

★ ★ ★

மாயவரம்.

டி.எஸ்.பி. ஆபீஸ்.

திருச்சியிலிருந்து மாற்றலான புது இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தியும், மாயவரத்திலிருந்து காரைக்குடிக்கு மாற்றலாகி இன்றைக்கு பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படும் இன்ஸ்பெக்டர் முரளிதரனும் கை குலுக்கிக் கொண்டார்கள். அறிமுகம் செய்து வைத்தார் டி.எஸ்.பி.

'பிரியங்களுடன் நானே'க்கு தொடர்பு இல்லாமல் ஒரு மணி நேரம் பேசினார்கள்.

ஸ்டேஷன் வந்தார்கள்.

அறிமுகங்கள்...

இன்னும் முடிவடையாமல் இருக்கிற கேஸ் ஃபைல்களை எடுத்து வைத்துக் கொண்டு பேசினார்கள்.

சித்ராவின் ஃபைல் திறக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் முரளி விளக்க விளக்க... கிருஷ்ணமூர்த்தி தாடையைத் தடவிக் கொண்டே இருந்தார்.

''இந்த கேஸ் எனக்கு சவால் விடற மாதிரி அமைந்த கேஸ். இதை

முடிக்காமப் போறதுதான் எனக்கு வருத்தமா இருக்குது'' என்றார் முரளி.

மௌனமாக முரளிதரன் எடுத்த நடவடிக்கைகளின் ரிப்போர்ட்களைப் படித்தார் கிருஷ்ணமூர்த்தி. முடித்து விட்டு...

''மைகாட்!'' என்றார்.

''என்ன?''

''இந்தக் கேஸின் இன்னொரு முனை அங்கே திருச்சியிலே இருக்கு மிஸ்டர் முரளிதரன்.''

''என்ன சொல்றீங்க? புரியலை.''

''இதே தேதி! இருங்க, வர்றேன்'' என்று போனைத் தொட்டார். திருச்சி பாலக்கரை ஸ்டேஷனின் போன் நம்பருக்கு கால் புக் செய்தார் கிருஷ்ணமூர்த்தி.

''மிஸ்டர் முரளிதரன், நரசிம்மன்னு ஒருத்தர் ஒரு புத்தகத்தை தூக்கிட்டு வந்து ஒரு ரிப்போர்ட் கொடுத்தார். அந்தப் புத்தகத்தை இவர் ஒரு டிரையின்லே கிடந்து எடுத்திருக்கார். புத்தகத்தோட சொந்தக்காரனை இவர் பையன் பார்த்திருக்கான், பேசியிருக்கான். இளைஞன். அவன் திருச்சில இறங்கியிருக்கான். இவர் ஏதோ ஒரு கொலை நடந்திருக்கு எங்கேயோ, அந்த இளைஞன் கொலைகாரனா இருக்கலாம்னு நான் சந்தேகப்படறேன்னு ரிப்போர்ட் தந்தார். அதிலே திருப்பதி- மதுரை எக்ஸ்பிரஸ்ல இத்தனாம் தேதி பிரயாணம் செஞ்சப்போன்னு விவரம் இருக்கு. இங்கே இந்தக் கேஸ்ல நீங்க குற்றாலத்திலே கத்தி கிடந்ததை வச்சு, போலீஸ் நாய்கள் ஜங்ஷன் வரை வந்ததை வச்சும், பி.எம். படி இறந்த நேரத்தை வச்சும் ரொம்ப அழகா திருப்பதி-மதுரை எக்ஸ்பிரஸ்லதான் அவன் பயணம் செஞ்சிருக்கான்னு முடிவுக்கு வந்திருக்கீங்க. ஆக, இந்த சித்ரா கொலைக் கேஸ்ல உள்ள கொலையாளிதான் அது... அவனோட புத்தகம்தான் அது...''

கிருஷ்ணமூர்த்தி பேசப்பேச சிலிர்த்தது முரளிதரனுக்கு.

''நீங்க சொல்றது கரெக்ட். நான் எதிர்பார்க்கவேயில்லை இப்படி. அது என்ன புத்தகம்? நீங்க என்ன ஆக்ஷன் எடுத்தீங்க? அந்தப் புத்தகத்திலே அவன் கைரேகை நிச்சயம் கிடைக்கும். எடுத்திங்களா நீங்க? இங்கே ஒரு இடத்திலே கூட அவன் கைரேகை கிடைக்கலை எங்களுக்கு... ஐய்யோ! இப்ப எனக்கு பரபரங்குது.''



டெலிபோன்.

''ஹலோ... கொடுங்க... ஹலோ, யார் பேசறது? குட்மார்னிங் ...ராஜன், நான் கிருஷ்ணமூர்த்தி பேசறேன். ஓ, இன்னிக்குதான் ...தேன். ஒரு நாலஞ்சு நாள் முன்னாடி நரசிம்மன்னு ஒருத்தர் ஒரு ...த்தையும், ஒரு ரிப்போர்ட்டையும் அவர் பையன்கிட்டே ...சிச்சு எழுதினதா ஒரு ஸ்டேட்மெண்டையும் தந்தார். ஃபைல்ல ...க்கும் பாருங்க. எனக்கு அந்த ரிப்போர்ட், ஸ்டேட்மெண்ட் ...ப் புத்தகத்தோட முதல் பக்கம்...) இதோட ...போட்டோஸ்டெட் காப்பி இன்னிக்கே எடுத்து, இன்னிக்கு தபால்ல ...னுப்பி வைங்க... அப்புறம்... அந்த புத்தகம் பேரு... இருங்க ...றேன்... of course I love you அதை அனுப்பி கைரேகை பார்க்கச் ...ல்லணும். செய்றீங்களா? ஆமாம். அது ஒரு கொலையோட ...பந்தப்பட்டிருக்கு. ரைட். தாங்க்ஸ்'' என்று வைத்தார் ...ஷ்ணமூர்த்தி.

''என்ன கேட்டீங்க? நடவடிக்கைகளா? ம்... எடுத்தேன். ...ணியமில்லை. அதிலே பிரியமான நீயே, பிறந்தநாள் ...த்துக்கள், பிரியங்களுடன் நானேன்னு ஒரு பெண் கையெழுத்து ...ந்திச்சு. புத்தகம் தஞ்சாவூர்ல மணி புத்தக நிலையம்ங்கிற ...யிலே வாங்கப்பட்டிருக்கு. இதைத் தவிர ஒரு பக்கத்திலே ...ரான்னு கையெழுத்து போடப்பட்டிருந்திச்சு...''

''என்ன, என்ன? சித்ரான்னா? அப்போ... அப்போ...''

''வர்றேன், இருங்க. நான் இந்த விவரங்களை தஞ்சாவூருக்குச் ...ல்லி விசாரிக்கச் சொன்னேன். எதுவும் தகவல் கிடைக்கலை. ...ஷயம் பத்தாதுன்னு பதில் வந்துடுச்சு. இப்ப இங்கே மாயவரத்துக்கு ...றேன். இந்த ஃபைல்ல கொலை செய்யப்பட்டது, தேதி, செய்யப்பட்ட முறை, தப்பினவன் எப்படிப் போனான்ங்கிற ...மானங்கள் எல்லாம் இருந்தும் கொலை செய்யப்பட்டதன் ...ரணம்னு ஒரு கேள்விக்குறி போட்டு வச்சிருக்கீங்க. இப்ப நான் ...றேன் பதில்.' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

''வேணாம், நீங்க தரப்போற பதிலை நானே ஊகிச்சுட்டேன். கொலை செய்யப்பட்டது சித்ரா. கொலைகாரன் கிட்டே இருந்த ...த்திலே கையெழுத்து சித்ரா. அது அவளை அழைக்கிற விதம் ...யமான நீயே... புத்தகம் காதல் கவிதைகள் கொண்டது. ...போதாதா ஊகிக்க... சித்ரா அவனைக் காதலிச்சா. கொலை செய்யப்பட்டது கொலை செய்தவனுடைய காதலிங்கறப்போ

காரணம் சுத்தமா வந்துடுது....'' என்று விட்டு கொஞ்சம் அமைதியாக இருந்தார். ''ஆனா இந்தக் காதலைப் பத்தி சித்ரா வீட்ல எந்தத் தடையமும் இல்லை. அவங்கம்மா முன்னாடி பாஸ்கான்னு சொல்லி வந்தவனை முன்னே பின்னே தெரியாதவன் மாதிரிதான் நடந்திருக்கா... தியாகராஜனங்கிறவன் மேலே சன்னமா ஒரு சலனம் இருந்திருக்கு... அப்போ இத ரகசியமான காதலா? நான் குழம்பறேன்...''

''தேவையில்லை மிஸ்டர் முரளிதரன். நாளைக்குக் காலைலே ஜெராக்ஸ் காப்பிகள் வந்துடும். இந்த சித்ராவோட கையெழுத்தை ஒப்பிட்டுப் பார்த்துட்டா காதல் உறுதியாயிடும்.''

''கரெக்ட். நான் காரைக்குடியிலே இன்னும் நாலு நாள் கழிச்சுத்தான் வேலையில் சேரணும். அதுக்குள்ளே இந்தக் கேஸுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறதுக்கு நான் உங்ககூட ஒத்துழைக்கப் போறேன்.''

''நல்லது. இது உங்க கேஸ். நான்தான் ஒத்துழைக்கிறேன்.''

★ ★ ★

மறுநாள் காலை தபாலில் திருச்சியிலிருந்து கிருஷ்ணமூர்த்தி கேட்ட காப்பிகள் வந்திருந்தன.

> **பிரியமான நீயே,**
>
> உன்னைப் பார்த்து கண்ணடிக்கிறாங்கள்
> படவா நட்சத்திரங்கள்.
> உன்னைத் தொடுகிறான், நழுவுகிறான்
> தூது வேலை செய்ய வந்த தென்றல்.
> உன் கன்ன நிறத்தை வானவில்காரன் பழிக்கிறான்.
> ஆகவே இயற்கையை வெறுக்கிறேன்.
>
> **பிரியங்களுடன் நானே.**

## 14

பாதி குடித்துக் கொண்டிருந்த காபி கப்பை அப்படியே வைத்து விட்டு கத்திரிக்கோலால் கவரின் முனையை வெட்டினார்



இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி.

இன்ஸ்பெக்டர் முரளிதரன், சித்ரா வீட்டிலிருந்து எடுத்து வந்த பாட்டு நோட்டை எடுத்து கையில் வைத்துக் கொண்டு ஒப்பிடத் தயாராய் இருந்தார்.

திரு.நரசிம்மனின் ரிப்போர்ட்டின் காப்பி.

ஸ்டேட்மெண்ட்டின் காப்பி.

புத்தகத்தின் முதல் பக்கத்தின் காப்பி.

மற்ற இரண்டையும் தூக்கிப் போட்டு விட்டு புத்தகத்தின் முதல் பக்கத்தின் ஃபோட்டோஸ்டெட் காப்பியை கையில் எடுத்துக் கொண்டு சித்ராவின் கையெழுத்தை ஒப்பிட்டார் முரளிதரன்.

''கொஞ்சம்கூட சம்பந்தமில்லை.''

கிருஷ்ணமூர்த்தி வாங்கிப் பார்த்து மேற்படி இரண்டு வார்த்தைகள் கொண்ட வாக்கியத்தை ஆமோதித்தார்.

''நாம போட்டு வந்த கதை பூரா கவுந்துடிச்சே... அது வேற சித்ரா, இது வேற சித்ரான்னா, நாம மறுபடி கொலைக்கு ஒரு ஸ்ட்ராங்கான காரணத்தைத் தேடியாகணும்...''

''புத்தகத்திலே உள்ள கையெழுத்து ஏன் அந்த விஜியோடதா இருக்கக் கூடாது?''

''பிறந்த நாள் வாழ்த்துக்கள்னு மேட்டர் வருது. ஒண்ணு அதை தன் காதலிக்குக் கொடுத்திருக்கணும். கொடுக்கலை. தன் கிட்டேயே வச்சிருக்கான். தானே தனக்குப் பிறந்தநாள் வாழ்த்து எழுதிக்குவானா ஒருத்தன்? லாஜிக் இடிக்குது. புத்தகத்துக்கு உள்ளே சித்ரான்னு கையெழுத்து இருக்கே...''

''கேஸ் கொஞ்சம் தெளிவான மாதிரி இருந்திச்சு. ரொம்ப சந்தோஷப்பட்டேன். மறுபடி சிக்கலாய்டுச்சு.''

''ஒண்ணும் சிக்கல் இல்லை. அந்தப் புத்தகம் இவனுக்குத் தரப்பட்ட புத்தகம்தான். இதுக்கு சரி சொல்றிங்களா நீங்க?''

''சரி.''

''பிரியமான நீயேன்னு துவங்கி பிறந்த நாள் வாழ்த்து சொல்லி பிரியங்களுடன் நானேன்னு முடியுது. அதனால அந்தப் புத்தகம் அவன் காதலி, இல்லை நெருக்கமான தோழி கொடுத்த புத்தகம். சரியா?''

''சரி.''

''புத்தகத்துக்குள்ளே ஒரு இடத்திலே சித்ரான்னு கையெழுத்து இருக்கிறதாலே அந்தக் காதலி, இல்லை தோழி பேரு சித்ராவா இருக்கலாம். சரியா?''

''சரி.''

''இங்கே கொலை செஞ்சுட்டு தப்பிச்சவன் ஏறியிருக்கலாம்னு முடிவுக்கு வந்த திருப்பதி- மதுரை எக்ஸ்பிரஸ்லதான் அவனை சந்திச்சுப் பேசியிருக்கான் நரசிம்மன் மகன் சுப்பு. புத்தகத்தோட அட்டையில் ரத்தத் துளிகள். இவன்தான் அவன். அவன்தான் இவன். இதிலே எதுவும் இடிக்குதா?''

''இல்லை.''

''இப்போ நம்மைக் குழப்பற ஒரே விஷயம் சித்ராங்கற பேர். சித்ராங்கிறது அபூர்வமான பேர் இல்லை. எதிர்பாராம ஏற்பட்டிருக்கிற ஓர் ஒற்றுமை. விஜியின் காதலி சித்ரா வேற. கொலை செய்யப்பட்ட சித்ரா வேற. என்ன, இந்த முடிவுக்கு வந்துடலாமா?''

''வேற வழி?''

''சரி. கடைசியா கிடைச்ச ரிப்போர்ட்டுகள் படி விஜி திருச்சியிலேயே இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். அவன் யாரு என்னன்னு எந்த சரியான விவரமும் இல்லை நம்மகிட்டே. கொலை பண்ணின இடத்திலேயும் எந்தத் தடயமும், ரேகையும் கூட இல்லை. அவனைப் பார்த்து பேசின, நமக்குத் தெரிஞ்ச ஒருத்தர் சித்ராவோட அம்மா. இன்னொரு நபர்... ரயில்ல பார்த்த நரசிம்மன் மகன் சின்னப்பையன் சுப்பு. ரெண்டு பேரும் சொல்லியிருக்கிற அடையாளங்கள் ஒத்துப் போகுது. ஆனா வெறும் அடையாளங்களை வச்சுக்கிட்டு நாம் எதுவும் செய்ய முடியாது. இந்த நிமிஷம் அவன் இஸ்ரேல் கூடப் போயிருக்கலாம்.''

''அப்ப நாம என்னதான் பண்றது? எல்லா வழிகளும் அடைபட்டு, அடைபட்டு மறுபடி மறுபடி நடுமையத்துக்கே வந்து நிக்கிறோமே...''

''இருங்க. சுப்புவுக்கும் சரி, இறந்த சித்ராவோட அம்மாவுக்கும் சரி, விஜியோட விலாசம் தெரியாது. ஆனா விஜியை முழுக்கத் தெரிஞ்ச நபர் இந்தப் புத்தகம் கொடுத்த காதலி சித்ரா. நாம



...க் கண்டுபிடிச்சே ஆகணும்.''

''...ப்படி? தஞ்சாவூர் போலீஸ்தான் கை விரிச்சிடு...

''அவங்க தீவிரமா விசாரிச்சதா நான் நம்பலை... ...யத்திலே வாங்கப்பட்ட புத்தகம் இது. இங்... ...கம். புத்தகங்கள் படிக்கிறவங்க அப்படிங்கிற... ...தான். அதிலே இங்கிலீஷ் புத்தகங்கள் படிக்கி... ...வட்டம். அதிலேயும் இங்கிலீஷ் கவிதைகள்... ...ம். அந்தச் சின்ன வட்டத்திலேர்ந்து சித்ராங்கி... ...ன்னு தெரியணும்.''

''தஞ்சாவூர் சின்ன ஊர் இல்லை. ரெண்டாவ... ...சாவூர்லதான் இருக்கணும்னு இல்லை. ...ப்போகூட வாங்கியிருக்கலாம்.''

''நிச்சயமா. நம்ம ஊகம் பலவீனமானத... ...போதைக்கு இதைத்தான் பிடிப்பா வச்சு இறங்... ...ங்கல்ல நாம அதிகமா கற்பனை பண்றதுகூட ...னிக்கு மத்தியானமே நான் தஞ்சாவூர் ...கிறேன்.''

''நான் முடிக்காமப் போற மேஜர் ஃபை... ...ரைக்குடியிலே இன்னும் மூணு நாள் கழிச்சுதான் ...ல்ல என் ஆர்வம் அதிகமாய்டுச்சு. லீவை நான் ...களோட நானும் வர்றேன்.''

''டி.எஸ்.பி.யை பார்த்துடுவோமா முதல்ல?''... ...மூர்த்தி.

★ ★

அன்றைக்கு மதியம் அவர்கள் புறப்பட்டார்க... ...பார்த்திபன், ரவி, விஜி.

...துபத்தி கொளுத்தி வைத்துவிட்டு, காரை ... ...ரவர்.

கோயமுத்தூர் வந்து டிபன் முடித்துக் கொ... ...டிக்குப் புறப்படுகையில் மாலை நகர்ந்து, இர... ...ரம்ப வரிகள்.

> **பிரியமான நீயே,**
>
> மழை நனைத்துப்போன பாதையில்
> விரிந்திருக்கும் பெட்ரோலியப் பூக்களென
> புரியா வண்ணக் கனவுகள்
> என்னுள் அடிக்கடி, அடிக்கடி.
> அதில் நீ, நீ, நீ, நீ, நீ மட்டுமே.
>
> **பிரியங்களுடன் நானே.**

## 15

**வி**ஜி பின்சீட்டில் நீட்டிப் படுத்து உறங்கிக் கொண்டிருக்க... முன் சீட்டில் ரவியும், பார்த்திபனும். விஜியின் தந்தையை, சித்தியை சந்தித்துப் பேசியதைச் சொன்னான் ரவி.

மௌனமாகத் தலையாட்டிக் கொண்டே வந்தான் பார்த்திபன்.

''உயிர் வாழ இதயம் எத்தனை முக்கியமோ அத்தனை முக்கியம் வாழ்க்கைக்கு மனசுங்கிறது. நிறையப் பேர் உணர்றதில்லை ரவி. விஜி கிட்டேர்ந்து முழுமையான தகவல்கள் எதுவும் இல்லை. ஆனா அவனோட காயங்கள் எனக்குத் தெளிவாத் தெரியுது. சின்ன வயசிலேர்ந்து அவன் மனசிலே அடி வாங்கியிருக்கான்...''

''முக்கியமா அப்பா!'' என்றான் ரவி.

''சின்ன வயசிலேயே இறந்து போன அம்மாவோட பாசம், நிராகரிக்கப்பட்ட அப்பாவோட அரவணைப்பு, தப்பு வழி காட்டி அதை நியாயப்படுத்தின சிநேகிதங்கள்... இதெல்லாம் இவனை அரிச்சிருக்கிற கறையான்கள். இதுக்கெல்லாம் கிளைமக்ஸா இவன் உடைஞ்சு போனது காதல் தோல்வியிலே. அவ யார்ன்னு இன்னும் விரிவாச் சொல்லலை.''

''நீ கேக்கலையா?''

''கேக்கக் கூடாது. அவன் தானா சொல்லணும். சொல்ல வைக்கணும். தொடர்பா நமக்கு செய்திகள் கிடைக்காது. பொறுமையா மீன் பிடிக்கிறவன் மாதிரி இருந்து விஷயங்களைச் சேகரிக்கணும்.''



''சாதாரணமா நல்லாதானே பேசறான் பார்த்தி? கோயமுத்தூர் வரைக்கும் இப்போ நம்மகூட எல்லா விஷயங்களைப் பத்தியும் பேசினானே...''

பார்த்திபன் சிரித்தான்.

''மனநோயாளின்னு நீ கற்பனை பண்ணி வச்சிருக்கிற அடையாளங்கள் தப்பானவை. சட்டையைக் கிழிச்சுக்கிட்டு அலையற பைத்தியக்காரனின் செய்கைகள்தான் உனக்குள்ளே பதிஞ்சிருக்கு. அதனால புரிஞ்சுக்க முடியலை, விடு.''

''எதுக்காக அவனைத் தூக்க மாத்திரை எடுத்துக்கச் சொன்னே கோயமுத்தூர்ல?''

''இரவு நேரப் பயணம்- மலைப் பாதை- சில்லுன்னு காத்து- இந்தச் சூழ்நிலைகள் அவன்கிட்டே பாதிப்பை உண்டு பண்ணும். அதனாலதான் அவனுக்குத் தொடர்ந்து ஓய்வு வேணும். மாயவரம் அனுபவத்தை அவனாலேயே முழுக்க உணர முடியலை. அதுதான் அவனுக்கு இதுவரைக்கும் ஏற்பட்ட ஒரே ஒரு டெல்யூஷன்னு நினைக்கிறேன்.''

''ஊட்டிலேர்ந்து மெட்ராஸ் திரும்பினதும் என்ன ட்ரீட்மெண்ட் கொடுக்க?''

''ரெண்டு தடவை எலக்ட்ரிக் ஷாக் கொடுக்கலாம்னு இருக்கேன்.''

★ ★ ★

**கா**ர் மேட்டுப்பாளையத்தில் நின்றது.

''என்னப்பா டிரைவர்?''

''ரேடியேட்டருக்குத் தண்ணி ஊத்திக்கிறேன் சார்.''

ரவியும், பார்த்தியும் காரை விட்டு இறங்கி நின்றார்கள். ரவி பின் சீட்டில் எட்டிப் பார்த்தான். விஜி சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தான். காரிலிருந்து காலி கேனுடன் டிரைவர் ஒரு டீக்கடையை நோக்கி நடந்தான். பனி மென்மையாய்க் காதுகளில் அறைந்து கொண்டிருந்தது.

வானம் அதிகப் பசியில் மேகங்களை விழுங்கியிருந்தது. உரித்துப்

போட்ட கடலைத் தோல்களாக நட்சத்திரக் குப்பை.

தான் ஒன்று எடுத்துக் கொண்டு ரவிக்கு சிகரெட் பெட்டியை நீட்டினான் பார்த்தி. இரண்டு சிவப்புத் துணுக்குகள் உருவாகி சாம்பல் உற்பத்தி செய்யத் துவங்கின.

''டெல்யூஷன்னா என்ன பார்த்தி?''

''கொஞ்சம் விளக்கமா சொல்றேன். அறுபடத் தயாரா இருக்கியா ரவி?'' என்று பார்த்திபன் சிகரெட்டை நசுக்கிவிட்டுக் காருக்குள் அமர்ந்தான். உள்விளக்கைப் போட்டான். ''உள்ளே வா ரவி'' என்று கூறி விட்டுத் தன் பால்பாய்ண்ட் பேனாவை எடுத்து சிகரெட் பெட்டியைக் கிழித்து அதன் உள் வெள்ளைப் பகுதியில் ஏ.பி. என்று இரு கோடுகள் வரைந்தான்.

''கமான் ரவி, இதைப் பார்த்துச் சொல்லு. ஏ.பி. இரண்டில் உயரமான கோடு எது?''

''பி தான்'' என்றான் ரவி உடனடியாக.

''தப்பு. ஏ, பி ரெண்டு கோடுகளோட உயரமும் ஒரே உயரம்தான். இது நம்மை ஏமாத்தற தோற்றம். இதை ஆப்டிகல் இல்யூஷன்னு சொல்றோம். கொஞ்சம் கவனிச்சோம்னா ஏமாற்றத்திலேர்ந்து தப்பிச்சிடலாம். இப்போ டெல்யூஷனை தமிழ்ல சொல்றதுன்னா போலி நம்பிக்கைன்னு சொல்லலாம். உதாரணமா, ஒருத்தனுக்குத் தன்னை யாரோ கொலை செய்யப் போறாங்கன்னு ஒரு டெல்யூஷன் ஏற்பட்டுப் போச்சுன்னு வச்சிக்கோ, அதை மாத்தறது ரொம்பக் கஷ்டம். அதுக்கப்புறம் அவனோட பார்வை, கண்ணோட்டம், பேச்சு எல்லாமே ஒரு கொலையை எதிர்பார்த்துக்கிட்டேயிருக்கும். அதுமாதிரி... விஜிக்கு ஏற்பட்டிருக்கிற டெல்யூஷன் என்ன தெரியுமா? எல்லாரும் தன்னை வெறுக்கிறாங்க, நிராகரிக்கிறாங்க, தான் அன்புக்குத் தகுதியில்லாதவன்- இப்படியெல்லாம் அவன் மனசிலே இருக்கு. தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் காரணமா அவன் ஒட்டுமொத்தமா பெண்களையே வெறுக்கிறான்.''

''அப்போ மாயவரத்திலே அந்தப் பெண்ணைக் குத்தினது இந்த வெறுப்பு காரணமா இருக்குமா பார்த்தி?''

''தகிச்சிட்டிருக்கிற எரிமலையோட வெடிப்புதான் அந்தச் செயல்.''



கிளை நூலகம் சென்னை - 49 வில்லிவாக்கம்

மாயவரத்துக்குப் போய்... அந்தக் குறிப்பிட்ட பெண்ணை ...த் தேர்ந்தெடுத்தான்?''

''...ச்சே... நீ சரியாப் புரிஞ்சுக்கலை ரவி. இவன் இயங்கினது ...டமிட்ட எண்ணமா இருந்திருக்காது. அந்த நிமிஷம் அவள் ...சும் பேசியிருக்கலாம். அந்த வார்த்தைகள் இவனைத் தூண்டி... ...சுட்டான். முந்தியே சொன்ன மாதிரி இவன் மாயவரம் ...னது, அந்த வீட்டுக்குப் போனது எல்லாம்... இவன் கற்பனை ...க்கிட்ட ஹல்யூசினேஷன்களின் வழி நடத்தல்களால்தான்...''

''முழுசாப் புரியலை பார்த்தி...''

B/001 593901636 2734

...ரைவர் பானெட்டை மூடிவிட்டு வந்து காரை ஸ்டார்ட் ...னான்.

''...ண்ணாடியை ஏத்திவிடு ரவி. இன்னும் விளக்கமாகச் ...ல்றேன். மெட்ராஸ்லேர்ந்து வெளியேறணும்னு நினைச்சான் ... தன் வீட்டை விட்டுக் கோபமா வந்ததாச் சொன்னான் ...லையா உன்கிட்டே?''

''ஆமாம்.''

''...க்மோர் வந்திருக்கான். எங்கே போறதுன்னு இன்னும் ...னிக்கலை. மனசு முழுக்கக் கோபம், பரபரப்பு, கொந்தளிப்பு. ...போ யாரோ, 'நான் மாயவரம் போறேன்' அப்படின்னு ...சியிருக்கலாம். உடனே இவனுக்கு அது கட்டளையாப் படுது. ...ம் மாயவரம் போ' அப்படின்னு திரும்பித் திரும்பி காதுகிட்டே ...ரோ சொல்ற மாதிரி உணர்றான். உடனே மாயவரத்துக்கு டிக்கெட் ...க்கறான். இதைத்தான் கமாண்டிங் ஹல்யூசினேஷன்னு ...ல்றோம் நாங்க. இப்பப் புரியுதா?''

''கொஞ்சம்.''

''இந்தத் துறை ஒரு கடல்'' என்று பார்த்திபன் சொன்ன போதுதான் ...ர்' என்ற சப்தத்துடன் காரின் பின்டயர் வெடித்தது.

* * *

கார் கொஞ்சம் சாலையிலிருந்து விலகி, ஓரமாய் தள்ளாடி, ...ரைவர் அடித்த கச்சக என்ற பிரேக்கில் குலுங்கி நின்றது.

...னியின் முன் மண்டையில் லேசாய் வீக்கம் புறப்பட்டது.

விஜி திடுக்கிட்டு எழுந்து, ''என்னாச்சு?'' என்றான்.

அனைவரும் கீழே இறங்கினார்கள்.

''என்ன சண்முகம், ஸ்டெப்னி ரெடியா இருக்கா?'' என்றான் பார்த்திபன்.

''இருக்கு சார்.''

''ஜாக்கி?''

''இருக்கு. ஒரு பதினஞ்சு நிமிஷத்திலே மாட்டிடறேன் நல்லவேளை, ஓரத்திலே மரம் எதுவும் இல்லை'' என்று செல்லு டிக்கியைத் திறந்தான்.

''நாம எங்கே இருக்கோம்?'' என்றான் விஜி.

''மேட்டுப்பாளையம் தாண்டி கொஞ்ச தூரத்திலே. ஸாரி, உங்க தூக்கம் கெட்டுடிச்சு. ரவி, நல்லா தேய்ச்சு விட்டுக்கோ. ஊட்டி போனதும் அயோடெக்ஸ் வாங்கிப் போடலாம்.''

''பரவாயில்லை. டிரைவர் மாட்டட்டும். நாம அப்படி அந்த பாலத்துக் கிட்டே கொஞ்ச நேரம் உக்காரலாமே?'' என்றான் ரவி.

பிறையாய் கத்தரிக்கப்பட்ட நிலா கொஞ்சம் கொஞ்சமாக இருளை உதைத்துக் கொண்டிருந்தது. இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு, கழுத்தை நேர் பின்னால் மடக்கி நட்சத்திரங்களைத் தேடினான் விஜி. விரும்பி வந்த காற்றில், கைகளை மார்பின் குறுக்காகக் கட்டியிருந்த ரவியின் உதடுகள் லேசாக நடுங்கின.

கைக்குட்டை போட்டு, பாலத்தின் சின்ன கட்டைச் சுவரில் பார்த்திபன் அமர்ந்து கொண்டான். அவன் முயற்சித்த இரண்டு தீக்குச்சிகள் உடனுக்குடன் அணைந்தன.

''வாங்க விஜி, உட்காருங்க. என்ன மேலேயே பார்த்துக்கிட்டிருக்கீங்க?''

''நான் தேடிக்கிட்டிருக்கேன் டாக்டர்.''

''எதை?''

''என்னோட நட்சத்திரத்தை. அதோ, அங்கே இருக்கும். நாங்க ஹலோ சொல்லிக்குவோம், பேசிக்குவோம். உங்களுக்கு நட்சத்திர நண்பன் உண்டா டாக்டர்?''



ரவி, பார்த்திபனைப் பார்த்தான். மறுபடி பார்த்திபன் விஜியிடம் தோற்றான்.

''இல்லை விஜி. நீங்க என்ன பேசிக்குவீங்க?''

''இங்கே மக்கள் தொகை ஜாஸ்தியாய்டுச்சுன்னு சொல்வேன். அங்கேயும் அப்படித்தான்னு பதில் சொல்லும். பகல்ல என்ன செய்வீங்கன்னு கேப்பேன். எங்களுக்கு நைட்லதான் டூட்டி. அதனால பகல்ல தூங்குவோம்னு பதில் சொல்லும். மழை அப்போ ஏன் காணாமப் போய்டறீங்கன்னு கேப்பேன். காணாமப் போறதில்லை... எல்லாரும் ஆளுக்கு ஒரு கறுப்புக் குடை பிடிச்சுக்குவோம் நனையாம இருக்கிறதுக்கு. அதனால உங்களுக்குத் தெரியறதில்லைன்னு சொல்லும். கடைசியா ஒரு கேள்வி கேட்பேன். அதுக்கு மட்டும் அது பதில் சொல்றதே இல்லை டாக்டர்.''

''என்ன கேள்வி அது?''

''எங்கம்மாவைப் பார்த்தியா எங்கயாச்சும்? அவங்க நல்லாருக்காங்களா?''

பற்றிக் கொண்டு, காற்றில் ஆடாமல், நிலைத்து தீமொட்டாய் நின்ற போதிலும், சிகரெட்டைப் பற்ற வைக்காமல் அதை அணைத்துப் போட்டு விட்டு எழுந்து விஜியின் கையைப் பிடித்தான் பார்த்திபன்.

''வாங்க. நாம காருக்குப் போய்டலாம். ரவி, வாங்க போகலாம்.''

''ஏன் பார்த்தி, இன்னும் டிரைவர் டயர் மாத்தலை.''

''நோ. விஜியோட வழக்கமான உணர்வுகள் கண் விழிச்சிடுச்சு. கொஞ்ச நேரத்திலே உச்சத்துக்குப் போய்டுவான்'' என்றான் ரகசியமாக ரவியிடம்.

''வா விஜி, போகலாம்'' என்றான் ரவி.

''போகலாம், போகலாம்...'' என்று அமர்ந்தான் விஜி. ''டாக்டர், எனக்கு ஒரு சிகரெட் வேணும்'' என்றான்.

தரப்பட்டதும், புகை பரப்பிக் கொண்டு விஜி எறிந்த தீக்குச்சி ரவியின் கையில் பட, கொஞ்சமாய்ச் சுட, 'ஆ' என்றான் ரவி சின்னதாய்.

''ஸாரி ரவி'' என்று சொல்லிவிட்டு பெரிதாக சிரிக்கத் துவங்கினான் விஜி.

''ஏன் சிரிக்கிறே விஜி?''

உரக்கச் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறே விஜி?''

பதில் பேசாமல் சிரித்தான்.

ஏன் என்று மறுபடி யாரும் கேட்கவில்லை.

உதட்டில் இருந்து சிகரெட்டை எடுத்துக் கொண்டு, சிரிப்பை நிறுத்தி எழுந்து நின்றான் விஜி. இருவரையும் ஒரு தரம் பார்த்து விட்டு சட்டையை வயிற்றுக்கு மேல் தூக்கிப் பிடித்துக் கொண்டு பாண்ட்டின் ஜிப்பைக் கீழே இழுத்தான்.

''விஜி!''

பாண்ட்டை முழங்கால் வரை உருவி, ''பாருங்க, இங்கே பாருங்க'' என்று தன் இடது தொடையைக் காட்டினான்.

அங்கே... பழைய வட்ட ஒரு பைசா அளவுக்கு ஒரு தழும்பு இருந்தது.

மறுபடி பாண்ட்டை அணிந்து கொண்டான்.

''என்ன விஜி அது?''

''நெருப்புத் தழும்பு. உயிருள்ள சிகரெட் செஞ்ச அடையாளம்.''

''மை காட்! யார் செஞ்சது விஜி? எதுக்காக?''

விஜி அமைதியாக ரவியைப் பார்த்தான். கைகளை இறுக்கமாக கட்டிக் கொண்டான். பதிலை நிலவுக்குச் சொன்னான்.

''நானே சுட்டுக்கிட்டது இது''

''ஏண்டா, ஏன்?''

விஜி அந்தக் கேள்வியைக் காற்றில் விட்டுவிட்டு அமர்ந்து, இரண்டு முழங்கால்களுக்கு நடுவே தலையைப் புதைத்துக் கொண்டான். பார்த்திபன் அவன் அருகில் அமர்ந்து முதுகைத் தொட்ட போது...



பிரியமான நீயே,

விளம்பரம் தந்துள்ளேன் விலாசம் தேவையென்று.
கிடைத்தவுடன் பாரி வள்ளலைச் சந்தித்துக்
கடனாய் தேரைப் பெற்று உன் இடையின்
அவஸ்தையைத் தீர்த்து வைக்கின்றேன். பொறு.

பிரியங்களுடன் நானே.

## 16

ஸ்பிரிங் விடுபட்டது போல படக் என நிமிர்ந்த விஜி ''ஏன்? அவள்... அவள்... அவளுக்காக...'' என்றான். ததும்புகிற நிலையில் மிகச் சிவப்பாகியிருந்த கண்கள்.

''சித்ரா?'' என்றான் பார்த்திபன்.

''ம்...''

''எனக்குப் புரியலை. அவளுக்காக நீங்களே சுட்டுக்கிட்டீங்களா? எப்படி? ஏன்?''

''நீங்க பிறந்தநாளுக்கு சாக்லேட் தர்றீங்களே, எதுக்கு?''

''சந்தோஷத்தை வெளிப்படுத்த, ஒரு இனிமையைப் பகிர்ந்து கொள்ள...''

''நல்ல காதலனும், நல்ல நண்பனும் இனிப்பை மட்டும்தான் பகிர்ந்துக்கணுமா?''

''இல்லை. துன்பத்திலேயும் பங்கு கொள்ளணும்.''

''நான் ஒரு நல்ல காதலனா இருந்தேன் டாக்டர். அவள் சிரிக்கிறப்போ சேர்ந்து சிரிக்க விரும்பினேன். அவள் அழறப்போ சேர்ந்து அழ விரும்பினேன். சிரிச்சேன், அழுதேன்...''

''இந்தக் காயம்?''

''மெழுகுவர்த்தி உருண்டு அவள் தொடையிலே விழுந்து, சேலையை எரிச்சு, தொடையிலே தீக்காயம் உண்டு பண்ணிச்சு. அவளுக்கு வலிக்கிறப்போ எனக்கும் வலிக்கணும். அதுக்காக

சுட்டுக்கிட்டேன்.''

''ஓ காட்!'' என்றான் பார்த்திபன்.

ஆச்சர்ய உச்சியில் நின்றான் ரவி.

சட்டென்று உரக்கக் கத்தினான் விஜி ஆங்கிலத்தில்.

''ஆனால் அவள் ஒரு பெண் நாய்!''

அப்புறம் கொஞ்சம் ஆங்கிலக் கெட்ட வார்த்தைகள் சொன்னான்.

டிரைவர் வந்து, ''மாட்டிட்டேன் சார், போகலாம்'' என்றதும் விஜியின் இடுப்பில் கையைக் கொடுத்து நடத்தினான். ''வாங்க விஜி.''

அமைதியாக நடந்தான் விஜி.

காருக்கு வந்ததும், தண்ணீர் பாட்டிலையும், காம்போஸ் மற்றும் டி.எஸ்காசின் மாத்திரைகளை எடுத்து விஜியிடம் நீட்டினான். ''ப்ளீஸ், சாப்பிடுங்க விஜி.''

''நோ, நான் தூங்க விரும்பலை...''

''தூங்க வேணாம். சும்மா ரெஸ்ட்டுக்காக... ப்ளீஸ்... உங்க நன்மைக்காகத் தான்...''

''எனக்கு பதில் வேணும் டாக்டர். அவள் கிட்டேர்ந்து...''

''நான் பதில் வாங்கித் தர்றேன். குடிங்க...''

மாத்திரைகளை விழுங்கினான். காரின் பின்சீட்டில் விஜியும் பார்த்திபனும் ஏறிக் கொள்ள... முன்னால் ரவி ஏறிக் கொண்டான்.

''போப்பா சண்முகம், அவசரம் இல்லை. மெதுவாவே போ...''

கார் புறப்பட்டது.

தூரத்தில் சாலைக்குக் குல்லாயாய்ப் பரவியிருந்த புகைப்பனியைக் காரின் வெளிச்சக் கத்திகள் கிழித்தன.

★ ★ ★

தஞ்சாவூரின் கடைத் தெருவில் வசதியுள்ள பெரும் கடைக்காரர்கள் ஜெனரேட்டர்கள் வாங்கி மின்சாரம் தயாரித்து நிலைமை மாறாமல் இருக்க... ஏனையோர் 'என்ன அரசாங்கம் இது



...!'' என்று பழகிப்போன சபித்தலுடன் மெழுகுவர்த்தி, ...கேன், பெட்ரோமாக்ஸ் கொண்டு வியாபாரம் நடத்தி, ஐந்து ...ய் வாங்கி கல்லாப் பெட்டியில் போட்டு, பத்து ரூபாய்க்கு ...க்கி தந்தார்கள்.

சம்சாரத்திற்கு அடுத்த முக்கியத்துவம் கொண்ட மின்சாரத்தை, ...வெட்டுதல் போல மேலும் மேலும் வெட்டிக் கொண்டிருக்கும் ...ரின், போலீஸ் துறையின் இரண்டு புள்ளிகளான இன்ஸ்பெக்டர் ...ஷ்ணமூர்த்தியும், கூட வந்த இன்ஸ்பெக்டர் முரளிதரனும் ரயிலை ...ட்டு இறங்கியதும் லாட்ஜ் தேடினார்கள்.

★ ★ ★

மறுநாள் பெண்கள் நெளி நெளியாய்க் கோலம் போட்டுக் ...கொண்டிருக்கையில் வியர்க்க உடற்பயிற்சிகள் செய்து, குளித்துப் ...புறப்பட்டு...

எஸ்.ஐ. நாகராஜன் தன் பையனை எழுப்பி, ''எழுந்திரிடா ...டிமாடு. இந்தா, இந்தப் பிளாஸ்கிலே ஓடிப் போய் மூணு காபி ...வாங்கிட்டு, சீனியைப் பொட்டலமாக வாங்கிட்டு வா'' என்று விட்டு ...படி வந்து அமர்ந்தார்.

கிருஷ்ணமூர்த்தி அந்த வீட்டின், அந்த அறையின் அரைகுறை வெளிச்சத்தை வெறுத்தார். காரணமில்லாமல் ஒரு ஜன்னலின் ...வுகள் சாத்தப்பட்டிருந்தது. அவற்றைத் திறந்து வைத்தால் இன்னும் வெளிச்சமாயிருக்கும். வந்தவர்களா போய்த் திறக்க ...டியும்?

''ம், சொல்லுங்க நாகராஜன். நீங்க அவரை என்ன என்ன கேட்டீங்க?''

''புத்தகத்தோட பேரைச் சொல்லி, இதை யார் யார் வாங்கறாங்கன்னு கேட்டேன். நிறையப் பேர் வாங்கறாங்க. குறிப்பா காலேஜ் ஸ்டூடண்ட்ஸ்தான் இதை விரும்பி வாங்கறாங்கன்னு சொன்னார். அப்படி உங்ககிட்டே ரெகுலரா வாங்கறவங்களிலே ...த்தான்னு யாராச்சும் உண்டான்னு கேட்டேன். வாங்கறவங்க பேர் எல்லாம் தெரியாதுன்னார். பில் போடறப்போ வாங்கறவங்களோட பேர் போடறதுண்டான்னு கேட்டேன். இல்லைன்னார். தஞ்சாவூர்ல ஒவ்வொரு வீட்டுக் கதவையும் தட்டி இங்கே 'அஃப்கோர்ஸ் ஐ லவ் ...' புத்தகம் வாங்கின சித்ராங்கிற பெண் இருக்காளான்னு கேக்க

முடியுமா என்ன? அதனால தகவல் பத்தாதுன்னு உங்களுக்கு போன் பண்ணேன்'' என்றார் பனியன் மட்டும் போட்டிருந்த நாகராஜன்.

கிருஷ்ணமூர்த்திக்கு ஏற்பட்ட லேசான கோபத்தை உடனே மென்றார்.

''ஒவ்வொரு வீட்லயும் உங்களைக் கேக்க நான் சொல்லலையே. தடயம்ங்கிறது சின்ன செய்தியைத்தான் சொல்லும். அதை வச்சு டெவலப் செய்யத்தான் நாம இருக்கோம். பேர் சித்ரா. மணி புத்தக நிலையத்திலே வாங்கினா அவ ஒரு புத்தகத்தை. அது ஆங்கில கவிதை புத்தகம். இந்த தகவலை வச்சுக்கிட்டு அந்த சித்ராவை ரொம்ப நெருங்க முடியும்னு நான் நம்பறேன்.''

''நம்புங்க, இதென்ன வம்பா இருக்கு? என்னை விசாரிக்கச் சொல்லி போன் செஞ்சிங்க. செஞ்சேன். எனக்கு நம்பிக்கை இல்லைன்னு பட்டுது. உங்களுக்கு நம்பிக்கையா பட்டா என்ன செய்யணும்னு சொல்லுங்க. ஒத்துழைக்கிறேன்''

பையன் காபி பிளாஸ்க்கைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தான்.

''மெதுவா... மெதுவாடா. கீழே போட்டுடாதே...''

மூன்று கண்ணாடி டம்ளர்களில் காபியை ஊற்றி எடுத்து வந்தார் நாகராஜன்.

''மனைவி ஊர்ல இல்லை'' என்று கேட்காத கேள்விக்கு பதில் சொன்னார்.

''என்ன, மிஸ்டர் முரளிதரன் பேசவே இல்லை?'' என்றார் கி.மூர்த்தி.

''சித்ரா காதலிக்கிற பொண்ணு. ஆங்கிலக் கவிதை படிக்கிற பொண்ணு. அந்தப் புத்தகம் காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் விரும்பி வாங்கறாங்க. ஆக, சித்ரா ஒரு காலேஜ் ஸ்டூடண்டன்னு ஒரு அனுமானத்துக்கு நாம வரலாம்னு நினைக்கிறேன்.''

''நான் அதையேதான் நினைச்சேன். இங்கே விமன்ஸ் காலேஜ் உண்டுல்லே?''

''உண்டு. ஒரு கவர்ன்மென்ட் ஆர்ட்ஸ் காலேஜ் இருக்கு. மெடிக்கல் காலேஜ் இருக்கு. தவிர சரபோஜி காலேஜ்ல சில பாடங்களுக்கு மட்டும் கோ-எஜ-கேஷன் இருக்கு.''



''வெரிகுட். அப்ப நாம ஒவ்வொரு காலேஜா ஆரம்பிக்கலாம்னு நினைக்கிறேன்.''

பகல் பத்தரை மணிக்கு மெடிக்கல் காலேஜ் டீன் அவர்களின் அறையில் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி, முரளிதரன் இவர்களுக்கு காபி வழங்கப்பட்டு, ''மொத்தம் எட்டு சித்ராக்கள் இங்கே'' என்கிற பட்டியலும் வழங்கப்பட்டது.

எட்டு சித்ராக்களில் ஐந்து பேர் ஹாஸ்டலில் தங்கிப் படிப்பவர்கள். மற்றையோர் தஞ்சாவூர்க்காரர்கள்.

''ரொம்ப அவசரமான விஷயமா இது?'' என்றார் டீன்.

''அப்படித்தான்'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

''சாயங்காலம் ஐந்து மணிக்கு விடுதியில் இவர்களைச் சந்திக்க ஏற்பாடு பண்ணட்டுமா? இப்போது வகுப்புகளில் இருப்பார்கள்.''

''ஸாரி. உங்கள் அறைக்கு இந்த எட்டுப் பேரையுமே வரவழைத்தால் நல்லது. தாமதிக்கிற ஒவ்வொரு வினாடியும் குற்றவாளி எங்களை விட்டு தூரமாகப் போய்க் கொண்டே இருக்கிறான்.''

''சரி, இங்கே வரவழைக்கிறேன். அதில் பிரச்னை எதுவுமில்லை'' என்று இன்ட்டெர்காமை எடுத்தார் டீன்.

மேஜை மேல் ஒரு ஆஷ்ட்ரே இருப்பதைக் கவனித்துவிட்டு இன்ஸ்பெக்டர் முரளிதரன் சிகரெட் உபயோகித்தார். கிருஷ்ணமூர்த்தி பாதியில் வைத்திருந்த குளிர் பானத்தை பிளாஸ்டிக் ஸ்ட்ரா மூலம் குறைய வைத்துக் கொண்டிருந்தார்.

''நீ இன்னாரைக் காதலித்தாயா? என்கிற கேள்வி ஒரு சங்கடமான கேள்வி. நாங்கள் அவர்களைத் தனித்தனியாக தனிமையில் விசாரிக்க விரும்புகிறோம்.''

''செய்யுங்கள். நான் விலகிக் கொள்கிறேன். இதே அறையில் ஒவ்வொருத்தராக வரச் சொல்கிறேன். ஒரு அரை மணி நேரம் நான் வெளியே சென்று வரவேண்டிய வேலை இருக்கிறது. நான் திரும்பி வரும் வரையில் காத்திருங்கள் தயவுசெய்து'' என்று எழுந்து கொண்டார் டீன்.

அறையின் கதவை இழுத்து வெளியேறினார்.

இருபது நிமிடங்கள் கழித்து முதல் சித்ரா உள்ளே வந்தாள்.

''உட்காருங்க. இது சாதாரண ஒரு விசாரணை. எங்களுக்கு நீங்க உதவலாம். நீங்க எத்தனாம் வருஷம்?'' என்றார் முரளிதரன்.

''மூணாம் வருஷம்...'' உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள். சவசவ என்று கழுத்தருகே வியர்த்து கூந்தல் பிசிறுகள் ஒட்டிக் கொண்டிருந்தன.

''இது ரொம்ப ரகசியமான விசாரணை. தயக்கம் இல்லாம சொல்லுங்க. விஜிங்கிறவரை நீங்க காதலிச்சீங்களா, இல்லை காதலிக்கிறீங்களா?''

''காதலா? சேச்சே... அதெல்லாம் எதுவும் இல்லை'' காக்கி உடைக்கு சற்று அதிகமாகவே பயந்தாள். இரண்டு கைகளையும் என்ன செய்வதென்று அறியாமல் தவித்தாள்.

''இங்கிலீஷ் கவிதை படிப்பீங்களா?''

''கவிதையே எனக்குப் பிடிக்காது சார். எதுக்காக என்னை விசாரிக்கிறீங்க?''

''உங்களை மட்டும் இல்லை. சித்ராங்கிற பேர் உள்ள எல்லா மாணவிகளையும் விசாரிக்கிறோம்''

''ஏன்?''

''ஒரு குற்றவாளியைக் காதலிச்சிருக்கா அந்தப் பொண்ணு. அந்தப் பொண்ணை நாங்க எதுவும் பண்ணப் போறதில்லை. அவனோட விலாசம் மட்டும்தான் கேக்கறோம். நீங்க எதையும் மறைக்கலையே?''

''சத்தியமா இல்லை சார்.''

''சரி, போங்க. ஒரு நிமிஷம்! இங்கிலீஷ் கவிதை படிக்கிற வேற சித்ரா யாரையாவது தெரியுமா உங்களுக்கு?''

''தெரியாது சார். நான் போகலாமா?''

''சரி'' என்றார் முரளிதரன்.

''இருங்க'' என்றார் கிருஷ்ணமூர்த்தி. ''இந்தக் காகிதத்திலே கையெழுத்தைப் போடுங்க.''

கிட்டே வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு, பெருமூச்சு வெளியேற்றி அவள் சென்றாள்.



> **பிரியமான நீயே,**
>
> சாம்பலிலிருந்தும் உயிர்த்தெழும்
> இறப்பில்லாதது ஃப்யூனிக்ஸ் பறவை.
> நம் காதலுக்குக் கூட ஃப்யூனிக்ஸ்
> என்று பெயரிடலாமே...
>
> **பிரியங்களுடன் நானே.**

## 17

அப்புறம்...

செயினைக் கடித்துக் கொண்டே பேசின சித்ரா. ''காதல்ங்கிறதெல்லாம் சும்மா பம்மாத்தான வார்த்தை சார். ஐ டோண்ட் பிலீவ் லவ். அடிப்படை செக்ஸ்தான்'' என்றாள்.

கண்ணாடி போட்ட சித்ரா, ''எப்பவாச்சும் போரடிச்சா மங்கை படிப்பேன். விஜின்னு எனக்கொரு ஃப்ரண்ட் இருக்கா. எண்பத்து ரெண்டு கிலோ'' என்றாள்.

வெள்ளைக் கோட் அணிந்த கடைசி ஆண்டு சித்ரா, ''யெஸ், நான் காதலிக்கிறேன். அவர் பேர் மைக்கேல் ஃபிலிப். நான் மதம் மாறிடறேன்னு சொன்னா ஒத்துக்க மாட்டேங்கறார். இன்னும் வீட்டுக்குத் தெரியாது'' என்றாள்.

முகத்தில் மட்டும் இளமையைப் பறிகொடுத்துவிட்ட சித்ரா பதறிப் போய், ''என்ன வார்த்தை கேட்டிங்க? ஐயாம் மாரீட். இந்த பாருங்க தாலி'' என்றாள்.

மற்ற மூன்று சித்ராக்களில் இருவர் முதலாண்டு மாணவிகள். காதல் என்ற வார்த்தையை உச்சரிக்கவே தயங்கினார்கள். கடைசி சித்ரா உடல்நிலை சரியில்லாமல் விடுதியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள். உதவியாளர் வழிகாட்டிக் கொண்டு விடுதிக்குக் கூடவே வந்தார்.

மூக்கெல்லாம் விக்ஸ் வேப்போரப்புடன் நொணநொண என, ஹெரால்ட் ராபின்ஸ் தவிர வேறு ஆங்கிலப் படைப்பாளிகள்

இருக்கிறார்களா?'' என்று கேட்டாள்.

மறுபடி டீனின் அறையில் அவருக்காகக் காத்திருந்தார்கள்.

''நாம கடல்ல விழுந்த மோதிரத்தைத் தேடறோமா?'' என்றார் முரளிதரன்- சாம்பலை ஒழுங்காய் தட்டிவிட்டு.

''இல்லைங்க முரளி. எனக்கு நம்பிக்கை இருக்கு. இப்போ அந்த பொண்ணு மெடிக்கல் காலேஜ்ல இல்லைன்னு கிளியர் பண்ணிடலாம். இதுமாதிரி ஒவ்வொண்ணா விலக்கிட்டே வந்துடுவோம். ஆங்கிலக் கவிதைகள்ல இண்ட்ரஸ்ட் உள்ள விஜிங்கிறவனைக் காதலிச்ச, சித்ரான்னு பேர் உள்ள- மணி புத்தக நிலையத்திலே புத்தகம் வாங்கின ஒரு பெண்! பார்த்தீங்களா எத்தனை தகவல்கள். நாம தேடறது மோதிரம் இல்லை. மூழ்கிப் போன கப்பல். எனக்கு நம்பிக்கை இருக்கு'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

டீன் வந்தவுடன் உதவிக்கு நன்றி சொல்லிப் புறப்பட்டார்கள்.

ஆர்ட்ஸ் காலேஜ் காம்பௌண்டுக்குள் அடுத்து நுழைந்தார்கள்.

★ ★ ★

பார்த்திபனின் வீடு கச்சிதமாயிருந்தது. ஆனால் மார்கழியில் முக்கப்பட்டு கன்னாபின்னாவென்று குளிர் குடித்திருந்த ஊட்டியின் அழிச்சாட்டியங்களை அந்த வீட்டால் அத்தனை எதிர்க்க முடியவில்லை.

காலை பத்து மணியைப் பத்து மணி என்று நம்பத் தயங்கினான் ரவி. வேலைக்காரன் வந்து எழுப்பி, பார்த்திபன் எஸ்டேட்டிற்குப் போயிருப்பதைச் சொல்லி விஜியையும், ரவியையும் டிபன் சாப்பிட்டு விட்டு வீட்டிலேயே இருக்கச் சொன்னதாகவும், பன்னிரண்டு மணிக்கெல்லாம் வந்து விடுவதாகச் சொன்னதாகவும் சொன்னான்.

கம்பளிகளுக்குள் மூழ்கி இதமாகத் தூங்கிக் கொண்டிருந்தான் விஜி.

வெந்நீரில் குளித்து விட்டு ரவி உடையணிந்து ஸ்வெட்டர் அணிந்து கொண்டபோது, விஜி எழுந்தான். தன் கைக்கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.



''விஜி, குட்மார்னிங்.''

''குட்மார்னிங் ரவி.''

''குளிச்சுட்டு வா. டிபன் சாப்பிடலாம். சாப்பிட்டுட்டு அப்படியே ஒரு வாக் போய்ட்டு வரலாம். என்ன?''

தலையாட்டினான் விஜி.

எத்தனை பேசுவான் கடகட என்று. இப்போதெல்லாம் ஒரு வார்த்தை பேசுகிறான். அதிகம் பேசினால் உணர்ச்சிவசப்பட்டுப் போய் விடுகிறான். உயிரோடு வைத்து உணர்வுகளைக் கொல்கிற வியாதி இது!

பிறகு அவர்கள் சாலையில் நடந்தார்கள்.

மரங்கள் தங்கள் கிளைகளில், இலைகளில் வெள்ளையாக ஐஸ்க்ரீம் வைத்திருந்தன. தூரத்துக் காட்சிகள் எல்லாம் பனியால் ஃபேட் அவுட் ஆகியிருந்தன. ரவி இரண்டு கைகளையும் தேய்த்து சூடு பண்ணிக் கொண்டே நடந்தான்.

''விஜி, எப்படி உணர்றே?''

''இதமா இருக்கு.''

''இப்பத்தான் சாப்ட்டோம். உடனே பசிக்குது இல்லே?''

''ஆமாம்.''

''என்கிட்டே கூட நீ மறைச்சுட்டே பார்த்தியா?''

''என்ன?''

''சித்ராவைப் பத்தி என்கிட்டே நீ சொன்னதே இல்லை.''

நடப்பதை நிறுத்தினான் விஜி.

''அவளைப் பத்திப் பேசாதே. எனக்கு என்னமோ பண்ணுது.''

''ஸாரி விஜி. சரி, வா நடக்கலாம்.''

விஜி நடக்கவில்லை. பாதையோரமாய் ஒரு யூகலிப்டஸ் மரத்திடம் சென்று, பட்டென்று அமர்ந்து அதில் சாய்ந்து கொண்டான். கைகளை மார்பின் குறுக்காகக் கட்டிக் கொண்டான்.

''வா ரவி, இப்படி உட்காரலாம்.''

ரவி வந்து அருகில் அமர்ந்தான். ரொம்ப நேரம் பேசாமல் இருந்து விட்டு, உடனே அழ ஆரம்பித்தான் விஜி.

''ஸாரி விஜி. நான் கேட்டிருக்கக் கூடாது. வா, வீட்டுக்குப் போய்டலாம்.''

''எத்தனை உண்மையா நேசிச்சேன். நான் என்னடா தப்பு பண்ணேன்? ஏண்டா எனக்குத் தண்டனை?''

''என்ன தண்டனை விஜி? ஏன் உங்க காதல் கூடலை?''

''அதான் எனக்குத் தெரியணும். போ, போய் அவளைப் பாரு. அவ முடியைப் பிடிச்சு உலுக்கு. இதே கேள்வியைக் கேளு. எனக்கு வந்து பதிலைச் சொல்லு. என்ன சொன்னா? ஸாரி விஜி, ஐ டோண்ட் லவ் யு! இந்த யுனிவர்ஸ் அளவு உன்னைக் காதலிக்கிறேன்னு சொன்ன அதே உதடுகள், லாண்டரியை மாத்தற மாதிரி அத்தனை சுலபமா ஆள் மாத்திட்டா. ஏன்? சொல்டா ஏன்?''

''வா விஜி போகலாம். நான் கேட்டுச் சொல்றேன். எங்கே இருக்கா அவ?''

''தஞ்சாவூர்ல. போய்க் கேளு. கேளு...'' என்று அழ ஆரம்பித்தான் மறுபடி.

''அழாதே விஜி, எந்திரி... ப்ளீஸ்...''

மௌனமாகத் திரும்பி நடந்தார்கள்.

மெல்லிதாய் விசும்பிக் கொண்டே நடந்தான் விஜி.

ஒரு வினாடி நிறுத்தி, ''அவனைக் கல்யாணமே பண்ணிக்கிட்டாடா'' என்றான்.

★ ★ ★

விஜியின் காதலி சித்ரா ஒரு கல்லூரி மாணவி இல்லை என்கிற முடிவுக்கு மறுநாள் மாலை வந்தார்கள் இன்ஸ்பெக்டர்கள்.

மணி புத்தக நிலையத்தில் மூன்று மணி நேரம் உட்கார்ந்திருந்து, அங்கு புத்தகம் வாங்க வருகிறவர்களையெல்லாம், 'ஆங்கிலக் கவிதைகள் படிக்கிற பெண்கள் யாரையாவது தெரியுமா?' என்று கேட்டார்கள். சிலர் குறிப்பிட்ட பெண்களைத் தேடிப் போய், 'உங்களை மாதிரி இந்தப் புத்தகங்கள் படிக்கிற சித்ராவைத் தெரியுமா?' என்றார்கள். உதட்டுப் பிதுக்கல்களைப் பெற்றுக் கொண்டார்கள்.



பெண்கள் அதிகமாய் பணி புரியும் அலுவலகங்களுக்குச் சென்றார்கள்.

மூன்றாவது நாளில் கொஞ்சம் சோர்ந்திருந்தார்கள்.

★ ★ ★

திருச்சி.

பார்த்திபனின் 'க்ளினிக்'கில் அவன் அறை.

''நாளைக்குக் காலையிலே விஜிக்கு முதல் எலெக்ட்ரிக் ஷாக் தர்றதா இருக்கேன்'' என்றான் பார்த்திபன்.

எதிரே ரவி பேப்பர் வெய்ட்டை உருட்டிக் கொண்டு சிந்தனையில் இருந்தான்.

''என்ன ரவி?''

''இந்த ஊட்டிப் பயணம் அவன் மனசுக்கு ஓரளவு இதம் கொடுத்திருக்குது.''

''ஓரளவுதான். உள்ளுக்குள்ளே கனல் இருக்கு இன்னும்.''

''நான் அதுக்குச் சொல்லலை. சில அதிகப்படியான தகவல்களை ஊட்டியிலே சொல்லியிருக்கான். அவன் காதலிச்ச சித்ரா ஒரு பாங்கிலே கிளார்க்கா வேலை பார்த்திருக்கா. இவனை ரொம்ப விரும்பியிருக்கா. ஒருநாள் திடீர்னு உன்னை விரும்பலைன்னுட்டு வேற ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்கா. அதிலேதான் தீவிரமா அப்ஸெட் ஆகிட்டான். அவ ஏன் இவனை ஏமாத்தினா? அவளை நான் சந்திக்க விரும்பறேன் பார்த்திபன்.''

''எத்தனையோ காரணம் இருக்கலாம் ரவி. வீட்ல சம்மதம் கிடைச்சிருக்காது. இல்லைன்னா, அவன் மனம் மாறப் பணம் ஒரு காரணமாயிருக்கலாம். வசதியான ஒரு மாப்பிள்ளை கிடைச்சிருக்கலாம். அதனால இவனை உதறியிருக்கலாம்.''

''பணம் ஒரு காரணமாக இருக்க முடியாது பார்த்தி. இவனைவிட வசதியா ஒருத்தனை என்னால கற்பனை பண்ண முடியலை. நான் தஞ்சாவூர் போய் அவளைச் சந்திக்கப் போறேன்.''

''தாராளமாப் பாரு. ஆனா இப்போ அவ இன்னொருத்தன் மனைவி. இல்லையா? உன்கிட்டே பழைய காதல் பத்திப் பேசுவாள்னு எதிர்பார்க்கிறியா? இல்லை, இந்தக் காரணத்தால நான் அவர் கிட்டேர்ந்து கழண்டுக்கிட்டேன்னு சொல்வான்னு எதிர்பார்க்கறியா?''

''நோ பார்த்தி. ஆனாலும் நான் அவளைப் பார்க்கணும்.''

''பாரு. இப்ப இவன் இருக்கிற நிலையைச் சொல்லி அவளை புண்படுத்தாதே. ஒரு பொண்ணோட இயல்பான வாழ்க்கையிலே எதுவும் சலனப்படுத்திடாதே.''

''சேச்சே. மாட்டேன் பார்த்தி.''

அன்று மாலை தஞ்சாவூர் புறப்பட்டான்.

★ ★ ★

கிருஷ்ணமூர்த்தியும், முரளிதரனும் லாட்ஜில் அறையில் அமர்ந்து வேர்க்கடலை உரித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது டெலிபோன் ஒலித்தது.

''ஹலோ...'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

''நான் நாகராஜன் பேசறேன் சார். வஸந்தின்னு ஒரு பொண்ணு இங்கே ஸ்டேஷனுக்கு வந்திருக்கு சார். உங்களைப் பார்க்கணும்னு சொன்னது. பேசுங்க...''

''ஹலோ சார், ரெண்டு நாளைக்கு முன்னாடி மெடிக்கல் காலேஜ் வந்து விசாரிச்சது நீங்கதானே சார்?''

''ஆமாம்.''

''என் பேர் வஸந்தி. நானும் மெடிக்கல் ஸ்டூடண்ட் தான். நீங்க விசாரிச்ச சித்ரா என்கிட்டே விபரங்கள் சொன்னா. ஆங்கிலக் கவிதைகள் படிக்கிற, விஜிங்கிறவரைக் காதலிக்கிற சித்ராங்கிற பெண்ணைத்தானே நீங்க தேடறீங்க? அவள் ஒரு மாணவியாத்தான் இருக்கணுமா?''

''இல்லை, நாங்க அப்படி யூகிச்சோம்.''

''கொஞ்ச நாளைக்கு முன்னாடி பாங்கில் வேலை பார்த்த சித்ராங்கிற பொண்ணு விஜிங்கிறவரைக் காதலிச்சா. அவ ஆங்கிலக் கவிதைகள் நிறையப் படிப்பா'' என்றாள் வஸந்தி.

**பிரியமான நீயே,**

இந்த தண்டனையை கேள்விப்படு.
'கொள்ளையடித்தான் அரசே'
'கட்டி வை, கசையடி கொடு'
'கொலை செய்தான் மன்னவா'
'சிரத்தைச் சீவி கழுகுக்குப் போடு'
'காதலித்தான் வேந்தே'
'யாரவன்? வா இங்கே, கற்றுக் கொடு'

**பிரியங்களுடன் நானே.**

## 18

இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தியும், முரளிதரனும் ஸ்டேஷனுக்கு வந்தபோது அந்தப் பெண் வஸந்தி 'காகிதம் கட்டு' நாவல் ஒன்று படித்துக் கொண்டிருந்தாள்.

கிரிக்கெட் பந்து அளவுக்குதலையில் கொண்டை போட்டிருந்தாள். இரண்டு காதருகிலும் அலட்சிய, கொண்டைக்குத் தப்பிய முடிக்கற்றைகள் அலைந்தன. உன்னிப்பாய்ப் பார்த்ததில் பொட்டு வைத்திருப்பது தெரிந்தது. காந்திஜி சொன்னார் என்பதற்காக விரல்களில் நகம் வளர்த்திருந்தாள்.

''யு ஆர் வஸந்தி?'' என்று உட்கார்ந்தார் கிருஷ்ணமூர்த்தி.

''ஆமாம் சார்'' என்று புத்தகத்தை மூடினாள். அது பாட்டுக்குத் தொங்கிக் கொண்டிருக்கிற நீளமான செயினை இரண்டு கைகளாலும் இழுத்து, இழுத்து பலப்பரிட்சை செய்தாள்.

''சொல்லுங்க, அந்த சித்ரா இப்போ பாங்கிலே வேலை பார்க்கலையா?''

''இல்லை சார்.''

''ஏன்?''

''அவளுக்குக் கல்யாணமாய்டுச்சு.''

''ஓ! புருஷன் யாரு?''

''பி.டபிள்யூ.டி.யிலே என்ஜினீயர். கும்பகோணத்திலே.''

''விஜியைக் காதலிச்சது என்னாச்சு?''

''காரணம் எனக்குத் தெரியாது. அது பத்திக் கேட்டப்போ, 'நான் தப்பான ஆளைக் காதலிச்சுட்டேன் வஸந்தி'ன்னு மட்டும் சொன்னா...''

''ஐ, சீ... அந்த விஜியை உங்களுக்குத் தெரியுமில்லையா?''

''எனக்குத் தெரியாது.''

''என்ன மேடம், விஜியை அந்தப் பொண்ணு காதலிச்சது தெரியும்னு சொன்னீங்களே...''

''ஆமாம் சார். விஜிங்கிறவரைக் காதலிச்சான்னு தெரியும். அதுவும் அவள் சொன்னதுதான். அந்த ஆளை நான் பார்த்ததில்லை.''

''ரைட், நீங்க பார்த்ததில்லை. அவர் என்ன செய்றார், எங்கே இருக்காருங்கிறதாவது தெரியுமா?''

''தெரியாது சார். ஒரு தடவை நான் விஜிங்கிறவரை காதலிக்கிறேன் வஸந்தி. ஆனா எனக்குள்ளேயே ஒரு உறுதி இல்லை. அதனால உறுதியானதும் உன்கிட்டே சொல்றேன்னு சொன்னா. ஒரு பர்ஸனல் விஷயத்தை துருவி துருவிக் கேட்கிறது எனக்குப் பிடிக்காது. அதனால நான் கேக்கலை. இத்தனை கேள்விகள் கேட்டீங்க. இப்போ என் முறை. என்ன விஷயமா இப்போ சித்ராவை நீங்க தேடறீங்க?''

''அந்த விஜியைப் பிடிச்சாகணும்.''

''ஏன்?''

''ஒரு கொலை செஞ்சிட்டு திரிஞ்சுக்கிட்டிருக்கான் மனுஷன்.''

''வாவ்!'' என்று தோள்களை அவள் குலுக்கியபோது முரளிதரன் அரசாங்கத்திற்கு துரோகம் செய்து கடமை விலகினார். மனைவிக்கு துரோகம் செய்து மனது விலகினார்.

''எக்ஸ்க்யூஸ் மீ, மைண்ட் புவர் பட்டன்.''

''மிஸ் வஸந்தி, இந்தப் புத்தகத்திலே இந்தக் கையெழுத்தைப் பாருங்க. நீங்க சொல்ற சித்ராவோட கையெழுத்து தானே இது?''

''டோண்ட் சஜஸ்ட். இது யாரோட கையெழுத்து தெரியுமா?'' என்றார் எஸ்.ஐ. நாகராஜன்.



டாப்சின் பட்டனைப் போட்டுக் கொண்டே, ''சித்ராவோட கையெழுத்துதான்'' என்றாள்.

''நீங்க காபி சாப்பிடுவீங்களா? நாலு காபி வாங்கிட்டு வரச் சொல்லுங்க நாகராஜன். வெல் மிஸ் வஸந்தி. உங்க கிட்டே சித்ராவோட கும்பகோணம் அட்ரஸ் இருக்கு, இல்லையா?''

''வீட்டு அட்ரஸ் எனக்கு எழுதலை. அவ புருஷன் ஆபீஸ் அட்ரஸ்தான் தெரியும். வித்யாசாகர், என்ஜினீயர், பி.டபிள்யூ.டி. ஆபீஸ், கும்பகோணம்னு போட்டா போயிடும்.''

''நாங்க தபால் போடப் போறதில்லை. நேர்ல சந்திக்கணும். இங்கே தஞ்சாவூர்ல சித்ராவோட அம்மா, அப்பால்லாம் இருக்காங்க இல்லையா?''

''அவங்க எல்லாம் கன்னியாகுமரில இருக்காங்க. இவ இங்கே அவ சொந்தக்காரங்க வீட்ல தங்கி வேலைக்கு போய்க்கிட்டிருந்தா.''

''எப்போ கல்யாணமாச்சு?''

''மூணு மாசம்தான் ஆச்சு.''

கிருஷ்ணமூர்த்தி யோசிக்கையில் எல்லாம் சிகரெட் கொளுத்திக் கொள்வார். இப்போது யோசித்தார். காபி வர மறுத்துவிட்டு வாங்கிக் கொண்டாள்.

''நீங்க இது மாதிரி வந்து தகவல் சொன்னதுக்கு ரொம்ப நன்றி. இந்த மாதிரி பொறுப்புணர்ச்சியோட எல்லாரும் நடந்துக்கிட்டா குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிறதிலே எங்களுக்கு எவ்வளவு உதவியா இருக்கும் தெரியுமா?''

கிளாஸை வைத்து விட்டு, கிளாஸை அணிந்து கொண்டாள். எழுந்தாள்.

''நான் வரலாமா சார்?''

''நீங்க ஹாஸ்டல் மாணவின்னு தானே சொன்னீங்க, உங்க அட்ரஸ் கொடுத்துட்டுப் போங்க'' கொடுத்து விட்டுப் போனாள்.

''கும்பகோணத்துக்கு அடிக்கடி பஸ் இருக்குதில்லே?'' என்றார் முரளிதரன்.

★ ★ ★

ரவியின் வீட்டில் டெலிபோன் அடித்தது.

சூட்கேசை மூடி சாவியை எடுத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு சென்று எடுத்தான் ரவி.

''ஹலோ, ரவியா? நான் பார்த்தி பேசறேன். நீ இன்னும் தஞ்சாவூருக்குக் கிளம்பலையே?''

''இதோ புறப்பட்டுக்கிட்டிருக்கேன்.''

''வேணாம், போக வேணாம். ரவி, இங்கே வா.''

''ஏன் பார்த்தி?''

''விஜிக்கு ஈ.சி.டி. இன்னிக்கு ஆரம்பிக்கிறேன். நீ பக்கத்திலே இருக்கணும்னு அவன் விரும்புறான்.''

''ஈ.சி.டி.? என்ன சொல்றே?''

''எலெக்ட்ரோ கன்வல்சிங் தெரபி. உன்கிட்டே ஏற்கனவே சொல்லியிருக்கேன். நீ இங்கே வா. விபரமா சொல்றேன். தஞ்சாவூருக்கு நாளைக்குப் போகலாம்.''

''சரி, வர்றேன்.''

★ ★ ★

வந்தபோது கையில் இன்ஜெக்ஷன் செய்யத் தயாராய் ஸிரிஞ்சுடன் பார்த்திபன் இருக்க... அருகே இரண்டு நர்சுகள் நிற்க, அறையின் மூலையில் ஒண்டிக் கொண்டு இருந்தான் விஜி, கண்களில் பயத்தோடு.

''வாங்க விஜி, இதோ பாருங்க உங்க ஃப்ரண்ட் ரவி வந்துட்டார். உங்க நல்லதுக்காகத் தான் ட்ரீட் பண்றோம். சின்னக் குழந்தை மாதிரி அடம் பிடிக்காதீங்க.''

''நான் வரமாட்டேன், வேணாம், ரவி, ரவி, வாடா... இங்கே பார்டா, எனக்கு ஊசி போட்டு உடம்புல எலெக்ட்ரிசிடி பாய்ச்சப் போறாங்களாம். நான் நல்லாத்தானே இருக்கேன்... மாத்திரை போதும். இதெல்லாம் வேணாம். சொல்டா, ப்ளீஸ் சொல்டா...''

''என்ன பார்த்தி, நீ ஏன் இதையெல்லாம் அவன் கிட்டே சொன்னே? சொன்னதாலேதானே அடம் பிடிக்கிறான்...''

''ஒரு டாக்டர், தன் பேஷண்ட் கிட்டே ட்ரீட்மெண்ட்டை



மறைக்கக் கூடாது ரவி. தவிர, இந்த ட்ரீட்மெண்ட்டுக்கு முன்னாடி பேஷண்ட்டை எச்சரிக்க... ஸாரி... எச்சரிக்கிறதில்லை இது. தெரிவிக்கிறது என் கடமை. லைட்டான தலைவலியும், சம்பவங்களை நினைவுக்குக் கொண்டு வர்றதிலே லேசான சிரமமும் இந்த ட்ரீட்மெண்டின் விளைவா ஏற்படலாம். அதை நான் முன்கூட்டியே சொல்லியாகணும் ரவி. அதனாலேதான் சொன்னேன்...''

''என்ன சொல்றே பார்த்தி? ஞாபகசக்தியை இழந்து விடுவானா?''

''சேச்சே. எதைச் சொன்னாலும் ரொம்ப அபத்தமா புரிஞ்சுக்கறே நீ. பழைய நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டு வர்றதிலே சிரமம் இருக்கலாம்னுதான் சொன்னேன். அதுவும் 'இருக்கலாம்' தானேயொழிய 'இருக்கும்'னு நான் சொல்ல மாட்டேன். வாங்க விஜி'' என்று அவனை நெருங்கினான் பார்த்தி.

''விஜி, உன் குழப்பமான பிரச்னைகள் தீர்ந்துடும். இந்த ட்ரீட்மெண்ட்டுக்கு ஒத்துக்கோ'' என்றான் ரவி.

உதடுகள் துடிக்க, விஜி மறுத்துக் கொண்டேயிருக்க... நர்சுகள் பிடித்துக் கொள்ள, அந்த அனெஸ்தடிக் மருந்தை நரம்பு வழியாகச் செலுத்தினான் பார்த்திபன்.

சற்றைக்கெல்லாம் மயங்கினான் விஜி.

''தூக்கிட்டு வாங்க. ரவி, என்னோட வா...'' என்று தன் அறைக்கு வந்து அத்துடன் இணைந்திருந்த மற்றொரு அறைக்கு வந்தான் பார்த்திபன்.

''எத்தனை வோல்ட்ஸ் கரண்ட் பார்த்தி?''

''தொண்ணூறுலேர்ந்து நூத்துப் பத்துக்குள்ளே...''

பார்பர் ஷாப் நாற்காலி போல சுழலும் நாற்காலி இருந்தது. ஏரோப்ளேன் போல கை வைக்கும் இடத்திலும் பெல்ட்டுகள் இருந்தன. ஹெட்போன் போல ஒரு கருவி எலெக்ட்ரிக் வயர்களை வைத்திருந்தது. சாதனத்தில் பார்த்திபன் செட் செய்தான்.

''எவ்வளவு நிமிஷம் பார்த்தி?''

பார்த்திபன் மென்மையாய் புன்னகைத்தான்.

''மண்டு! நிமிஷக் கணக்கிலே இல்லை. ஆங்கிலத்திலே

சொல்லணும்னா ஃப்ராக்ஷன் ஆஃப் எ செகண்ட். தமிழ்ல வினாடியில ஒரு துணுக்கு. ஒரு உதறு உதறும். அவ்வளவுதான்.''

''இதனால என்ன பாதிப்புகள் ஏற்படும் அவனுக்கு?''

''தேவையில்லாத சிந்தனைகள் மூளையிலேர்ந்து விலகும். திருப்பித் திருப்பி வதைக்கிற சில எண்ணங்களை கழுவித் தள்ளும். அவனுக்கு உள்ளே ஏற்பட்டிருக்கிற டிப்ரஷன் உடையும். ஒரு ரெண்டு ட்ரீட்மெண்டலேயே நல்ல ரிசல்ட் கிடைக்கலாம். பொதுவா நாலஞ்சு ட்ரீட்மெண்ட் ஆகும்.''

''தினம் ஒரு தடவையா?''

''வாரத்திலே ரெண்டு தடவை கொடுக்கலாம். ஒரு நாள் விட்டு ஒரு நாள் கூடக் கொடுக்கலாம்.''

ஸ்ட்ரெச்சரில் தூக்கி வந்த விஜியை நாற்காலியில் உட்கார வைத்தார்கள். பெல்ட்ஸ் போட்டு விட்டார்கள்.

பார்த்திபன் ஸிரிஞ்சில் மற்றொரு மருந்தை எடுத்தான்.

''மயக்கத்திலே தானே இருக்கான்?''

''இது மயக்கத்துக்கு இல்லை. மஸ்குலர் ரிலாக்ஸண்ட். எலும்புகள் எதுவும் இடம் மாறிடாம, சேதம் அடைஞ்சிடாம, தசைகள் சுருங்கிடாம இருக்கறதுக்காக... பயந்துடாதே... இதெல்லாம் ரோ ரிஸ்க்ஸ். முறைப்படி செய்யறது. அவ்வளவுதான்.''

அந்த ஊசியைப் போட்டுவிட்டு, நெற்றியோரங்களில் ஜெல்லி தடவி, ஹெட்போன் சமாச்சாரத்தைப் பொருத்தினான்.

''நான் வெளியிலே போய்டறேன் பார்த்தி'' என்று வெளியேறினான் வியர்த்திருந்த ரவி. பார்த்திபன் மெல்லச் சிரித்துக் கொண்டான்.

வெளியே வந்து குரோட்டன்ஸ் செடியின் இலையைக் கிள்ளினான் ரவி.

எதற்காக விஜி உனக்கு இவ்வளவு அவஸ்தை? என்ன பாவம் நீ செய்தாய்?

★ ★ ★

பஸ் பாபநாசத்தில் இரண்டு பேரை இறக்கி விட்டு விட்டுப் புறப்பட்டது.



ஜன்னல் வழியாக மறுபடி வயல்கள் தாகத்துடன் இருந்தன. தெரிந்து மறைந்த டீக்கடையில் நாலு பேர் சும்மா உட்கார்ந்து காது குடைந்து கொண்டிருந்தார்கள்.

''சித்ராவை விசாரிக்கிறதிலே நமக்கு சிக்கல் இருக்கு மூர்த்தி'' என்றார் முரளிதரன்.

''என்ன?''

''நமக்கு வீட்டு விலாசம் தெரியாது. ஆபீஸ்ல அவ புருஷனை சந்திச்சு, உங்க மனைவியோட பழைய காதலனைப் பத்தி விசாரிக்கணும்னு சொல்ல முடியாது.''

''வாஸ்தவம். ஆனா அந்த வித்யாசாகரை சந்திக்காமலே அவர் வீட்டு விலாசம் வாங்குறது பிரச்னையில்லை. நிமிஷங்கள்ல வாங்கிடலாம்.''

''அவர் இல்லாத சமயமா பார்த்து நாம அந்த சித்ராவைச் சந்திக்கணும்.''

''அப்படித்தான் சந்திக்கணும். நாம விசாரணையில் பாவம்... அந்தப் பெண்ணோட அமைதியான வாழ்க்கை கெட்டுடக் கூடாது. பாருங்க, பிரியமான நீயேன்னு காதல் கவிதை பரிசு தர்றா. கல்யாணத்துக்கு கழுத்தை நீட்டறது இன்னொருத்தனுக்கு.''

''அவள் சூழ்நிலை எப்படியோ, யாருக்குத் தெரியும்?''

''தெய்வீகக் காதல் எல்லாம் இப்பவும் இருக்குன்றீங்களா?''

''இருக்கு. எண்ணிக்கையிலே கம்மி.''

''என்னைக் கேட்டா, இந்தக் காதலர்கள் எல்லாம் தங்கள் காதலிகள் கிட்டே ஒரு தடவை செக்ஸ் வச்சுக்கணும். அதுக்கப்புறம் காதல் மனசுக்குள்ளே ஒட்டிட்டிருக்கான்னு உண்மையா தேடிப் பார்க்கணும்.''

''சேச்சே... உங்க பார்வையை நான் ஒத்துக்க மாட்டேன். காதலிக்கிறவன் எல்லாம் அதுக்காகத்தான் அலையறானா?''

''எல்லோரும் இல்லை, தொண்ணூத்தொம்பது புள்ளி தொண்ணூத்தொம்பது சதவீதம்.''

''நோ... நோ... எத்தனை தற்கொலைகள் காதல் தோல்வியால நாம சந்திச்சிருக்கோம்...''

''இதுக்கு நான் சிக்மண்ட் ப்ராய்டை கூப்பிட்டுக்கிட்டு வந்தா லீவை கேன்ஸல் பண்ணிட்டு இப்பவே காரைக்குடி ஓடிடுவீங்க. விடுங்க, நாம இறங்கறதுக்காக டிரைவரும் கண்டக்டரும் காத்துக்கிட்டிருக்காங்க. இதுதான் கும்பகோணம். வந்திருக்கிங்களா?''

இறங்கினார்கள்.

''மாமாங்கத்துக்கு வந்திருக்கேன்.''

நடந்தார்கள்.

கும்பகோணம் போலீஸ் இன்ஸ்பெக்டர் கை குலுக்கின கையோடு லிம்கா வாங்கி வரச் சொல்லிவிட்டு டெலிபோனில் கையை வைத்தார்.

''என்ன செய்யப் போறீங்க?''

''பி.டபிள்யு.டி. ஆபீசுக்கு போன் பண்ணி அவரோட வீட்டு அட்ரஸ் வாங்கித் தர்றேன்.''

''மிஸ்டர் வித்யாசாகருக்கு தன் மனைவி போலீசாரால் விசாரிக்கப்படறாங்கிறது தெரியக் கூடாது. அவருக்குத் தெரியாம நாங்க அவர் மனைவியைச் சந்திக்கணும். போன் பண்ணா விஷயம் லீக் ஆயிடும். ஒரு கான்ஸ்டபிளை அனுப்பி, அந்த ஆபீசுக்கு டீ, காபி சப்ளை பண்ற கடை பக்கத்திலே எதுவும் இருக்கும். அங்கே சாதாரணமா விசாரிக்கிற மாதிரி வித்யாசாகர் வீட்டு விலாசம் விசாரிச்சுட்டு வரச் சொல்லுங்க'' என்றார் முரளிதரன்.

கான்ஸ்... போனார். அரை மணி கழித்து...

...டபிள் வந்தார்.

''அவரை பட்டுக்கோட்டைக்கு மாத்திட்டாங்களாம் சார்.''

பிரியமான நீயே,

எறும்பு பதுக்கும் தானியம் போல
உன் இதழ் விரிப்பை பாடம் செய்து, பாதுகாத்து,
பதுக்கி வைத்த போதும்
மன ஓரங்களில் தப்பிக்கிறது.

பிரியங்களுடன் நானே.

## 19

செம்பருத்திச் செடி தெரிந்தது அந்தப் பக்கம். நாளைக்குப் பூவாகிறேன் என்று கொஞ்சம் மொட்டுக்கள் சொல்லின. பறிக்கப்படாத காரணத்தால் விரக்தியடைந்து கொஞ்சப் பூக்கள் கீழே விழுந்து தற்கொலை செய்து கொண்டிருந்தன.

நாற்காலியை ஜன்னலுக்கு அருகாக இழுத்துப் போட்டுக் கொண்டான் விஜி.

கைகளை மார்பின் குறுக்காகக் கட்டிக் கொண்டு சற்றுத் தள்ளி இருந்த நந்தியாவட்டைப் பூக்களைப் பார்த்தான். அவை வெள்ளை வெள்ளையாய் சிரித்தன.

நர்ஸ் வந்தாள் உள்ளே. வெள்ளையாய்...

''அடடே... இந்த மாத்திரைகளைச் சாப்பிடலையா நீங்க இன்னும்?''

கட்டிலருகே இருந்த சின்ன மேஜையில் இருந்த மாத்திரைகளையும் கண்ணாடி டம்ளரில் நீரையும் எடுத்துக் கொண்டு அவன் அருகில் வந்தாள்.

ஒருதரம் அவளைத் திரும்பிப் பார்த்து விட்டு மறுபடி பூக்களைப் பார்த்தான், ஜன்னலின் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு.

''மாத்திரை சாப்பிட்டுட்டு அப்புறம் பூ பாருங்க.''

''எதுக்கு மாத்திரை?''

''உடம்பு குணமாகிறதுக்கு.''

''எனக்கு ஒண்ணுமில்லை. ஐயாம் ஆல்ரைட். எல்லாரும் சேர்ந்து என்னை சித்திரவதை பண்றீங்க...''

''இல்லை சார். ப்ளீஸ், சாப்பிடுங்க...''

''நோ...''

''இந்த ஒரே ஒரு தடவை சாப்பிடுங்க.''

''நர்ஸ், உங்க பேரென்ன?''

''சியாமளா.''

''கல்யாணமாய்டுச்சா?''

''ம்.''

''உங்க புருஷனை நீங்க லவ் பண்றீங்க தானே?''

''லவ் பண்ணலாமா கூடாதா?''

''பண்ணணும்.''

''பண்றேன்.''

''அவர்?''

''அவரும்தான்.''

''உங்க புருஷன் உங்களை லவ் பண்றார். இத்தனை நாள் லவ் பண்ணின நீங்க திடீர்னு லவ் பண்றதை நிறுத்திக்கிறீங்க. ஏன்? என்ன காரணம்?''

''மாத்திரையச் சாப்பிடுங்க, ப்ளீஸ்...''

''சொல்லுங்க, என்ன காரணம்?''

''நானும் அன்பாத்தான் இருக்கேன் அவர் கிட்டே. எந்தப் பிரச்னையும் இல்லை. கமான், இந்தாங்க சாப்பிடுங்க...''

கிட்டே வந்து மாத்திரைகளைக் கையில் வாங்கி ஜன்னலுக்கு வெளியே எறிந்தான். கண்ணாடி டம்ளரை வாங்கி எதிரே சுவரில் எறிந்தான். சிலுங்க என்று உடைந்தன துண்டுகள்.

''மை காட், இப்படி வாங்க. பேசாமப் படுங்க. நான் சொல்றதைக் கேளுங்க...''

''வெய்ட், நான் அவளை இன்னொரு தடவை கேக்கப் போறேன்.



ஏன்? ஏன் என்னை உடைச்சுப் போட்டே? நான் அவளைப் பார்க்கணும், கேக்கணும். எங்கே டாக்டர்? கூப்பிடுங்க அவரை. நான் வெளியில போகணும். எங்கே டாக்டர்? எங்கே?''

நர்ஸ் அவசரமாக வெளியே ஓடி அறையின் கதவை வெளிப்பக்கம் தாழ் போட்டாள்.

மடமடவென்று தட்டினான்.

''என்னை ஜெயில்ல வைக்காதிங்க. ஊசி வேணாம், மின்சாரம் வேணாம். எதுவும் வேணாம். திறந்து விடுங்க. எனக்கு ஒண்ணுமில்லை'' கத்தினான் விஜி.

இரண்டொரு நிமிடங்களில் பார்த்திபன் வந்து கதவைத் திறந்து உள்ளே வந்தபோது... கதவுக்கருகாக தரையில் படுத்திருந்தான் அழுது கொண்டே. அவனைப் பார்த்ததும் பாய்ந்து கால்களைப் பிடித்துக் கொண்டான்.

''டாக்டர்... கெஞ்சிக் கேட்டுக்கறேன். என்னை விடுங்க... நான் என்ன பண்ணேன்? ஏன் ஜெயில்ல வைக்கிறிங்க?''

''அமைதியா இருங்க விஜி. ப்ளீஸ்... என்னோட ஒத்துழைங்க. இது ஜெயில்னு யார் சொன்னது? ஒரு ரூம். இது பிடிக்கலேன்னா, என் ரூமுக்கு வாங்க. அங்கே படுத்துக்கங்க'' என்று பேசிக் கொண்டே, நர்ஸ் நீட்டிய ஸிரிஞ்சை வாங்கிக் கொண்டு குனிந்தான் அவனிடம்.

''வேணாம். ஊசி வேணாம். வேணாம்...''

நர்ஸ் அழுத்திப் பிடித்துக் கொள்ள... புஜத்தில் குத்தி விட்டு எழுப்பி கட்டில் வரை நடத்தி படுக்க வைத்தான் பார்த்திபன்.

அருகில் நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

''நர்ஸ், கண்ணாடித் துண்டெல்லாம் சுத்தம் பண்ணச் சொல்லுங்க. பிளாஸ்டிக் டம்ளர்தானே இங்கே வைக்கச் சொன்னேன்? இந்த வாட்டர் ஜக்கையும் எடுத்துட்டுப் போகச் சொல்லுங்க...''

விஜி இப்போது பார்த்திபனின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தான்.

''ஏன் விஜி அழறீங்க?''

''ஸாரி டாக்டர். நான் உங்களுக்குத் தொல்லை கொடுக்கறேன். இனிமே உடைக்கலை.''

''சேச்சே, தாராளமா உடைங்க. கோபம் வந்தா யாருமே நிதானம் இல்லாமதானே நடந்துக்குவாங்க. நான் கூட கோபம் வந்தா சாப்பாட்டுத் தட்டை எல்லாம் தூக்கிப் போட்டு உடைப்பேனே. பரவாயில்லை. ஆனா விஜி, உங்க கோபம் யார் மேலே? அந்த பொண்ணு மேலே. நீங்களே திட்டுவீங்க அந்தப் பெண்ணை. கேவலமான பெண் இல்லையா அவள்?''

''நிச்சயமா.''

''அப்படிப்பட்ட ஒரு பொண்ணுக்காக உங்க மதிப்பான நேரத்தை ஏன் வேஸ்ட் பண்ணணும்? நேத்து நீங்க என்ன சொன்னீங்க, ஞாபகம் இருக்கா?''

''என்ன சொன்னேன்?''

''புல்லாங்குழல் இசைன்னா ரொம்பப் பிடிக்கும்னு சொன்னீங்க...''

''யெஸ். உலகத்திலே அந்த இசையை பீட் பண்ண எந்தக் கருவியும் இல்லை டாக்டர். எனக்கு புல்லாங்குழல் கத்துக்கணும்னு எத்தனை ஆசை தெரியுமா? சான்ஸே இல்லாமப் போச்சு. சாகறதுக்குள்ளே கத்துக்கப் போறேன்.''

''சேச்சே... அந்த வார்த்தை எல்லாம் பேசக் கூடாது. ஏன் சாகணும்?''

''ஏன் வாழணும் டாக்டர்? நான் எல்லாரையும் இழந்துட்டேன். அம்மா, அப்பா! கடைசியா அவள். என்ன காரணம்? அது தெரியணும் டாக்டர்!''

''பார்த்திங்களா, மறுபடியும் நீங்க வாழணும்ங்கிறதுக்குக் காரணங்கள் இருக்கு விஜி. எத்தனை ஆசைகள் இருக்கு உங்களுக்குள்ளே. மனசுக்கு அமைதி தர்றது இசை. அதிலும் புல்லாங்குழல் இசை... ஒன் மினிட்...''

என்று பார்த்திபன் தன் கோட் பாக்கெட்டிலிருந்து வாக்மேன் டேப் ரிக்கார்டரை எடுத்தான். மற்றொரு பாக்கெட்டிலிருந்து ஹியரிங் சாதனத்தை எடுத்தான். பொருத்தி விஜியின் காதுகளில் அணிவித்து டேப்பில் விளையாடு என்று சொன்ன பட்டனை அழுத்த...



விஜி கண்களை மூடிக் கொண்டான்.

காதுகளுக்குள் அவனை அணைத்துக் கொள்ள தவழ்ந்து வந்தது புல்லாங்குழல் இசை. சற்று நேரத்தில் விஜியின் கண்களிலிருந்து ...சாக நீர் பாதையமைத்துக் கொண்டு இறங்கியது.

''எப்படி இருக்கு?''

கண்களைத் திறந்த விஜி, வார்த்தைகளுக்குத் தவித்தான்.

''கேளுங்க, அமைதியாக கேளுங்க. அப்படியே தூங்குங்க. இன்னும் நிறைய கேஸட் அனுப்பி வைக்கிறேன். ப்ளீஸ், அண்டர்ஸ்டாண்ட். இது ஜெயில் இல்லை. உங்க பிரைவேட் ரூம். நான் டாக்டர் இல்லை. நண்பனாய் உங்க தேவைகளைப் பூர்த்தி செய்றவன்.''

அவன் தோள்களில் தட்டி விட்டு... அறையை விட்டு வெளியேறினான் பார்த்திபன்.

* * *

இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி, இன்ஸ்பெக்டர் முரளிதரனைப் பார்த்து கொஞ்சம் பெரிய அளவில் மூச்சு விட்டார்.

முரளிதரன் அதே காரியம் செய்தார்.

''இப்போ பட்டுக்கோட்டைக்கும் பயணமா?'

''வேற வழி?''

''நாளைக்கு நான் காரைக்குடியிலே சேர்ந்தாகணும். நான் உங்களை அப்பப்போ இந்த கேஸ் முடியற வரைக்கும் தொடர்பு கொள்றேன்'' என்றார் முரளி.

''அதுதான் சரி. நீங்க புறப்படுங்க. நான் மாயவரம் கால் புக் பண்ணி வச்சிருக்கேன். டி.எஸ்.பி.யோட பேசப் போறேன். நிலவரங்களை எடுத்துச் சொல்லிட்டு... நாளைக்கு நான் பட்டுக்கோட்டை போறேன். எத்தனை அலைக்கழிச்சாலும் அந்த சித்ரா பொண்ணை நாம சந்திச்சே ஆக வேண்டியிருக்கு. விஜி யாரு, எங்கே இருக்கான்கிற கேள்விக்கு பதில் சொல்ற வேற நபர் நம்ம கேஸ்ல யாருமே கிடையாது'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

இரவு சன்னமாக மோதிக் கொண்டு சுடுபானம் அருந்தினார்கள். தீக்குச்சிகளைக் குறைத்தார்கள். சாம்பல் கிண்ணத்தை நிரப்பினார்கள்.

அடுத்த காலையில் பனியைக் கரைத்து சூரியன் சுட்டபோது முரளிதரன் டாட்டா காட்டிவிட்டு காரைக்குடி பஸ்ஸில் ஏறிக் கொண்டார்.

கிருஷ்ணமூர்த்தி தன் பஸ்ஸிலிருந்து காட்டிய கையை மடக்கிக் கொண்டு, வாங்கிய பேப்பரை விரித்துக் கொண்டு வுடி ஆலனின் கவலையை ஆராய்ந்தார்.

பட்டுக்கோட்டை பஸ் ஸ்டாண்டில் இறங்கின உடனே நெருப்பை உபயோகித்துக் கொண்டார். எதிரே காவல் நிலையம், வயர்லஸ் டவர் எல்லாம் வைத்துக் கொண்டு, சிவப்புச் செவ்வகங்களுடன் வரவேற்றது.

உள்ளே நுழைந்தார்.

அலுவலகக் கட்டிடத்திற்கு முன்புறம் நிறைய இடம் இருந்தது. வேன் நின்று கொண்டிருக்க, ஒருத்தன் கொஞ்சமான அக்கறையுடன் ஒரு கையில் தண்ணீர் பக்கெட் வைத்துக் கொண்டு துடைத்துக் கொண்டிருந்தான்.

உதவி இன்ஸ்பெக்டர்தான் இருந்தார் பேப்பர் பார்த்துக் கொண்டு.

அறிமுகம் ஆன பின்னே உதடு சுட டீ சாப்பிட்டார்கள்.

பி.டபிள்யு.டி. என்ஜினியர் வித்யாசாகரின் வீடு நாடிமுத்து நகரில் வெங்கட்ராமய்யர் (இன்னமும் அய்யர்) தெருவில் இருக்கிறது என்னும் தகவல் முப்பதே நிமிஷங்களில் கிருஷ்ணமூர்த்தி கையில் தரப்பட்டது.

நன்றி நவின்று, நவிலற்க பெற்றுக் கொண்டு நாடிமுத்து நகர் நோக்கி நடந்தார். மணி பார்த்தார். ஒன்பதரை. ஒரு மணி கழித்துப் போனால் வித்யாசாகர் வீட்டில் இல்லாமல் இருக்கிற சந்தர்ப்பம் கிடைக்கும்.

முக்கிய தெருக்களில் நடந்தார். மணிக்கூண்டு இருந்தது. மணி காட்டுதல் தவிர... கட்சி, இலக்கியக் கூட்டங்களின் அறிவிப்புப் பலகைகளைத் தாங்குகிற தொழிலையும் அது செய்து கொண்டிருந்தது. ஹோட்டலில் உருளைக்கிழங்குகளை தனியாய் எடுத்துப் போட்டு விட்டு, பூரி மசால் சாப்பிட்டார். வெளியே வந்து சிகரெட் வாங்கிக் கொண்டு, ''இந்த ஊரோட ஜனத்தொகை என்ன?'' என்றார்.



''தெரியாது சார்.''

''எத்தனை வருஷமா இங்கே கடை வெச்சிருக்கீங்க?''

''பத்து, பன்னிரண்டு வருஷமா.''

''ஃபில்ட்டர் வில்ஸ் இன்னும் விலை ஏறுமா?''

''கண்டிப்பா. பட்ஜெட் வேற வருது.''

''தூங்கற நேரம் போக வியாபாரம்தான். இல்லையா? உங்களுக்கு சொந்தமா வீடு, நிலம் இருக்கணுமே...''

''ஆமாம். எப்படிச் சொன்னீங்க?''

சிரித்தார். ''முக ஜோசியம்!'' நகர்ந்தார். நடமாடும் பழ வண்டியில் பழம் வாங்கினார். நாடிமுத்து நகர் வந்தார். பாக்கெட்டிலிருந்து குறித்து வைத்திருந்த காகிதத்தை எடுத்துப் பார்த்து வெ.தெரு வந்து கதவிலக்கம் பார்த்துக் கொண்டு வந்தார். 18 எஃப் எங்கே?

ஒரு வேப்பமரம் நிழல் விரித்து நிழல் முழுக்க பழமும், கொட்டையும் போட்டு வைத்திருந்தது. அவற்றின் நடுவில் அந்தக் காலனி இருந்தது.

18-ஏ, பி, சிக்களில் டாக்டர்கள் தங்கள் போர்டுகளை மாட்டி வைத்திருந்தார்கள்.

பந்து வைத்துக் கொண்டு நின்றிருந்த நாளைய இம்ரான்கானிடம் என்ஜினியர் வித்யாசாகர் வீடு எங்கே என்று கேட்டு. பதில் பெற்று மாடிப்படிகளில் ஏறத் துவங்க...

''பைக் எடுத்துக்கிட்டு அவர் வெளில போய்ட்டார் சார். இப்ப பார்த்தா, நீ நிச்சயமா அவுட் ஆகறே.''

18 எஃப்ன் கதவு சாத்தியிருந்தது. இது என் வீடு என்று பித்தளைத் தகட்டில் வித்யாசாகர் தன் இனிஷியல், பட்டங்களோடு சொன்னார்.

அழைப்பு பித்தான் இருந்தது.

இதோ, நான் அழுத்தப் போகிறேன். இதோ, அந்த சித்ரா வந்து கதவைத் திறக்கப் போகிறாள். இதோ, அந்த குற்றவாளியைப் பற்றிச்

சொல்லப் போகிற பெண்ணை நான் சந்திக்கப் போகிறேன்.

அழுத்தினார். கடூரமாய் உள்ளே கத்தியது.

வினாடிகளில் கதவு திறக்கப்பட....

''மிஸஸ் சித்ரா?'' என்றார்.

''ஆமாம்'' என்றாள் கேள்விக்குறிப் பார்வையோடு.

> **பிரியமான நீயே,**
>
> ஒரு கல்லுக்கு எத்தனை அலைகள் பிறக்கும்?
> எண்ணி விடுவேன் முயன்று.
> உன் ஒரு சொல்லுக்கு என்னுள்
> உதிக்கும் அலைகள் எத்தனை?
> எண்ணிச் சொல்- முடிந்தால்.
>
> **பிரியங்களுடன் நானே.**

## 20

கழுத்தருகே வியர்வை கசகசத்திருக்க... தலையைச் சாய்த்து மஃப்டியில் இருந்த கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து நினைவுக்குக் கொண்டுவர முயன்றாள் சித்ரா.

''உள்ளே வந்து யாருன்னு சொல்றேன். வீட்ல யாராவது இருக்காங்களா? நான் உங்களோட கொஞ்சம் தனியாப் பேசணும்'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

குழப்பத்துடன், ''வாங்க, யாருமில்லை.'' என்றாள். சோபாவைக் காட்டினாள். உட்கார்ந்தார். அவள் நின்று கொண்டேயிருந்தாள்.

''நீங்களும் உக்காருங்க''

பால் குக்கர் அழைத்தது வாலிபனைப் போல. ''ஒரு நிமிஷம்'' என்று சென்று வந்து அவருக்கு எதிரே பிரம்பு நாற்காலியில் அமர்ந்தாள்.

''என் பேர் கிருஷ்ணமூர்த்தி. இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ், மாயவரம்.''



ஒரு 'திக்' அவளுக்குள் புகுவதை உணர முடிந்தது.

''தவலைப்படவோ, பயப்படவோ எதுவும் இல்லை. ஒரு விசாரணைக்காக வந்தேன். விசாரணைங்கிறதை விட, விலாசத்துக்காகன்னு சொல்லணும். சரியா?''

''என்ன விலாசம்? கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க.''

''சொல்றேன். கல்யாணத்துக்கு முன்னால நடந்த சில சம்பவங்களை உங்களுக்கு நினைவுபடுத்தறதுக்கு மன்னிக்கணும். நீங்க விஜிங்கிறவரைக் காதலிச்சீங்க இல்லையா?''

சட்டென்று எழுந்து நின்றாள். முகமெங்கும் வியர்வைத் துளிகள் தோன்றத் துவங்கின.

''உக்காருங்க மேடம். உங்களுக்கு என்னால எந்தத் தொல்லையும் இருக்காது. காதலிக்கிறவரே கணவரா அமைவார்னு சொல்ல முடியாது. பிராக்டிகல் லைஃப் கனவு வாழ்க்கையிலேர்ந்து தலைகீழா மாறிப் போகிற ஒண்ணு. நீங்க அந்த நினைவுகளை மறக்க முயற்சி செய்துக்கிட்டிருக்கலாம். என் கேள்விகள் உங்க மனதைத் தொந்தரவு செய்யலாம். ஒரு குற்றம் சம்பந்தமா நான் விசாரிக்க வேண்டியது என் கடமையா இருக்கு. தவிர்க்க முடியாம உங்களுக்கு அந்தத் தொந்தரவு நான் தரவேண்டியதாவே இருக்கு. சொல்லுங்க. விஜி யார்?''

''எதுக்காக இன்ஸ்பெக்டர் இப்போ இதெல்லாம் கேக்கறீங்க? உங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரியும்? அய்யோ, இப்போ நான் நிம்மதியா வாழ்ந்துக்கிட்டிருக்கேன்...''

''மேடம், உங்க வாழ்க்கையையோ, நிம்மதியையோ கலைக்கிறதுக்காக நான் வரலை. எனக்கு விஜி யார் என்னங்கிற விவரங்களும், அவர் விலாசமும் தேவைப்படுது. அவ்வளவுதான். அந்தத் தகவல்களை உங்க கிட்டேர்ந்து தெரிஞ்சிக்கிட்ட உடனே நான் பொறப்பட்டுப் போயிடுவேன். விஜிக்கு எந்த ஊர்?''

''மெட்ராஸ். எதுக்காகக் கேக்கறிங்கன்னு கேட்டேனே?''

''ஒரு குற்றத்திலே விஜி சம்பந்தப்பட்டிருக்கார். அவரை நாங்க தேடிக்கிட்டிருக்கோம்.''

''என்ன? என்ன செஞ்சார் அவர்?''

''எல்லாம் சொல்றேன். மொதல்ல என் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்க. தஞ்சாவூர்ல நீங்க பாங்க்ல வேலை பார்த்துக்கிட்டிருந்தப்போதான் உங்களுக்கும் விஜிக்கும் அன்பு ஏற்பட்டது இல்லையா?''

''ஆமாம்.''

''தஞ்சாவூர்ல என்ன பண்ணினார்?''

''பக்கத்திலே அவருக்கு பெரிய பண்ணை இருக்கு. அதை நிர்வகிச்சுட்டிருந்தார்.''

''மெட்ராஸ்ல யார்கூட இருக்கார்?''

''இவர் ஒரே பையன். அப்பா இருக்கார். அம்மா இல்லை. பெரிய பணக்காரர். இவர் மெட்ராஸ்ல இல்லை. பண்ணையிலேதான் இருக்கார்.''

''எங்கே இருக்கு பண்ணை?''

''ஒரத்த நாட்டிலேர்ந்து நாலு கிலோமீட்டர் தள்ளி.''

''மெட்ராஸ் அட்ரஸ் சொல்லுங்க.''

''எனக்குத் தெரியாது. பண்ணை அட்ரஸ்தான் தெரியும்.''

''அவங்கப்பா பேர் என்ன?''

''சந்திரசேகர்''

''என்ன பிசினெஸ்னு தெரியுமா?''

''நாலஞ்சு பிசினெஸ். சரியாத் தெரியாது.''

''விஜியை உங்களுக்கு எத்தனை நாளா பழக்கம்?''

''ஆறு மாசப் பழக்கம்தான்.''

''பர்ஸனலாக் கேக்கறதுக்கு ஸாரி, ரெண்டு பேரும் உண்மையா நேசிச்சீங்களா?''

கண்களில் திரை விழ- மௌனமாய்த் தலையசைத்தாள்.

''ஏன் நீங்க பிரிஞ்சிட்டீங்க?''

''அவர் ஒரு வித்தியாசமான மனிதர் சார். என்னால அவரை நேசிக்க முடிஞ்சது. ஆனா போகப் போக அவரோட சேர்ந்து ஒரு நடைமுறை வாழ்க்கை வாழ முடியுமான்னு எனக்கு அவநம்பிக்கை ஏற்பட்டு, அது ஆழமா மனசிலே தங்கிடுச்சு. அவர் பாதையிலேர்ந்து நானாத்தான் விலகினேன்.''



''புரியலை. எப்படி அவர் வித்தியாசமானவர்?''

டெலிபோன் அடித்தது.

''எக்ஸ்க்யூஸ் மீ'' என்று எடுத்தாள். ''ஹலோ... நான்தான் பேசறேன். அப்படியா? சரிங்க... சரிங்க... சரிங்க...'' வைத்தாள்.

''சார், என் ஹஸ்பெண்ட் ஒரு அவசர வேலையா திருச்சி போறாராம். என்னை சூட்கேஸ்ல டிரஸ் எல்லாம் எடுத்து வைக்கச் சொல்றார். இப்ப நேரல வந்துடுவார். ப்ளீஸ்... நீங்க அப்புறம் வாங்க. என்னை தர்மசங்கடத்திலே மாட்டி விட்டுடாதீங்க. என் கணவருக்கு எந்த விஷயமும் தெரியாது. ப்ளீஸ்...''

கிருஷ்ணமூர்த்தி எழுந்தார்.

''நிச்சயமா உங்க வாழ்க்கையைக் கெடுக்க மாட்டேன். நான் மத்தியானம் ரெண்டு மணிக்கு வர்றேன்'' என்று கிளம்பினார்.

''ஒரு நிமிஷம்... விஜி என்ன குற்றம் செஞ்சார்?''

''மத்தியானம் சொல்றேன். உங்களை மேலும் அதிர்ச்சியடைய வைக்க நான் விரும்பலை.''

அவசரமாக கிருஷ்ணமூர்த்தி வெளியேறினார்.

மணி பார்த்தார். 11.30.

ஒன்றரை மணி வரை நேரத்தைச் சிரமப்பட்டு கொன்றார். ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு மறுபடி சித்ரா வீட்டுக்குப் புறப்படும் முன் போன் செய்து விடலாம் என்று எண்ணி, 'லோக்கல் காலுக்கு 75 பைசா' என்று போர்டு மாட்டியிருந்த மளிகைக் கடையில் ரிசீவரை எடுத்து, 'நம்பர் ப்ளீஸ்'க்கு '261' என்றார்.

ரிசீவர் மறுமுனையில் எடுக்கப்பட்டதும்...

''ஹலோ, மிஸஸ் சித்ராதானே பேசறது?''

''ஆமாம்.''

''நான் கிருஷ்ணமூர்த்தி பேசறேன். இப்ப வரலாமா?''

''யார் நீங்க? அவர் ஊர்ல இல்லை.''

''மேடம்... நான் காலையிலே வந்தேனே... இன்ஸ்பெக்டர்

கிருஷ்ணமூர்த்தி.''

''காலையிலே யாரும் வரலை. அப்படி எனக்கு யாரையும் தெரியாது.''

'படக்' என்று மறுமுனையில் போன் வைக்கப்பட்டது.

> **பிரியமான நீயே,**
>
> மேகத்திற்கு, ஒளிக்கு,
> உனக்கு காத்திருக்கின்றோம்-
> மயில், பூ, நான்.
>
> **பிரியங்களுடன் நானே**

## 21

இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்திக்கு மூக்கின் நுனியில் அர்ஜெண்டாய் ஒரு கோபம் வந்தது.

வந்த உணர்வுடன் பேச முதல் வார்த்தை தேர்ந்தெடுக்கையில்... எதிர் முனையின் ரிசீவர் டொடக் என்று தன் தொட்டிலில் படுத்துக் கொண்டது.

ஒருவேளை, புருஷன் பக்கத்தில் இருந்திருப்பானோ?

அரை மணி நேரத்தை ஒரு கப் காபி சாப்பிடுவதில் செலவிட்டு, பின் ஒரு தீர்மானத்துடன் விரைவாகச் சித்ராவின் வீட்டிற்கு வந்து, ஏற்கெனவே அறிமுகமாகியிருந்த அழைப்பு மணி பொத்தானை சற்று எரிச்சலுடன் அழுத்த...

திறந்தது வியர்த்த சித்ரா.

''ஹலோ'' என்றார்.

''என்ன வேணும் உங்களுக்கு?''

''இன்ஸ்பர்மேஷன். விளையாடறீங்களா என்கூட? இல்லை...'' மீதி



வசனத்தை மெதுவான குரலில், ''மிஸ்டர் வித்யாசாகர் உள்ளே இருக்காரா?'' என்றார்.

''இல்லை.''

''பின்னே என்ன மேடம்? இன்னும் கொஞ்சம் விஷயம் வேணும் எனக்கு. வாசல்லயே நிக்க வைக்கறீங்க. ரொம்ப வேர்த்திருக்கு. என்னாச்சு உங்களுக்கு?''

''சார், நீங்க பேசறதே புரியலை. அட்ரஸ் மாறி வந்துட்டீங்க...''

''காலையில நாம பேசினோமே மிஸஸ் சித்ரா.''

''ஸாரி, எனக்கு உங்களைத் தெரியாது. தயவுசெஞ்சு போறீங்களா?''

''யாராச்சும் வந்து மிரட்டினாங்களா?''

''நான் உள்ளே போகணும். வேலை இருக்கு. எனக்கு எதுவும் தெரியாது.''

''மிஸ்டர் விஜியையும் தெரியாதா?''

''யாரது?''

''காலையிலே சொன்னதெல்லாம்?''

''எதுவும் சொல்லலையே. உங்களை நான் சந்திக்கவே இல்லையே. போயிட்டு வர்றீங்களா?''

கதவு சற்று சத்தத்துடன் சாத்தப்பட...

குழம்பி நின்றார் கிருஷ்ணமூர்த்தி.

என்ன ஆயிற்று இந்தப் பெண்ணுக்கு? ஓ! போலீஸ்- கோர்ட்- வழக்கு என்று வந்தால், தான் விஜியைக் காதலித்தது தன் கணவனுக்குத் தெரிய வந்தால், தன் வாழ்க்கை பாழாகி விடும் என்று பயந்து உதறுகிறாளோ?

'முட்டாள் பெண்ணே! உன்னை இப்போது கவனிக்க நேரமில்லை. காலையில் நீ தந்த தகவல்களே அதிகமானவை. முதலில் அந்த விஜியை கைது செய்து விட்டு உன்னிடம் வருகிறேன்'

ஓரத்த நாட்டிற்கு அருகாக பண்ணை!

அந்த இடத்தை விட்டு வேகமாக நடந்தார் கிருஷ்ணமூர்த்தி.

ஜன்னல் வழியாக கிருஷ்ணமூர்த்தி சென்றதைப் பார்த்த பின்னர் பெருமூச்சு விட்டாள் சித்ரா. பின், உள் ஹாலுக்கு வந்தாள்.

ஸோபாவில் அமர்ந்திருந்தவன், ''என்ன, போய்ட்டாரா?'' என்றான்.

''போய்ட்டார். இப்போதான் எனக்கு பயம் அதிகமாகுது. என்ன செய்வார் அவர்?''

''ஒண்ணும் செய்ய முடியாது. கவலையே படாதீங்க. காலையிலலேய நீங்க எனக்கு எதுவும் தெரியாதுன்னு மறுத்திருக்கலாம்...''

''விஜி என்ன குற்றம் செஞ்சார்னு எதுவுமே அவர் சொல்லலை அப்போ.''

''சரி, பரவாயில்லை. நீங்க சொன்ன தகவல்களை வச்சு அவர் தீவிரமா இறங்குவார். இவ்வளவு தூரம் போலீஸ் வரும்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. நான் உங்களைச் சந்திக்க வந்தது ரொம்ப நல்லதாப் போச்சு. ப்ளீஸ், உட்காருங்க'' என்றான் ரவி.

எதிரே அமர்ந்தாள்.

''விஜி என்னோட நெருங்கின நண்பன். அவனை நான் ரொம்ப நேசிக்கிறேன். ஒரு மன வியாதி காரணமா நிகழ்ந்த அந்தக் குற்றத்துக்காக அவனைக் குற்றவாளியாக்க நான் விரும்பலை. தவிர அவனுக்கு மனநோய்ங்கிற விஷயத்தையே உலகத்துக்குத் தெரியாம மறைக்க ரொம்ப பாடுபட்டுக்கிட்டு இருக்கேன். நிகழ்ச்சி நடந்தன்னைக்கு அவன் மாயவரத்திலே இல்லை, சென்னையிலே இருந்தான்ங்கிறதுக்கு ரொம்ப ஸ்ட்ராங்கான தகவல் எல்லாம் தயார் பண்ணி வைச்சிருக்கேன். போலீஸ் அவன் கிட்டே வந்துட்டா மோதிப் பார்க்க. ஆனா நான் போலீஸ் கண்டுபிடிப்பாங்கன்னு கொஞ்சமாகத்தான் நம்பினேன். ஏதோ ஒரு தடயத்தை வச்சு விஜிதான் செய்ததுன்னு உறுதி பண்ணிட்டாங்க அவங்க. இப்போ விஜி எங்கே இருக்கான்னு அவங்களுக்குத் தெரியாது. அதுக்காகத்தான் அலையறாங்க. நான் உடனடியாகப் புறப்பட்டாகணும். போலீஸ் விஜியைத் தேடி திருச்சி வந்து அவனை நெருங்குறதுக்குள்ளே அவனை எப்பாடு பட்டாவது காப்பாத்தியாகணும்.''

குனிந்த தலை நிமிராமல் கேட்டுக் கொண்டிருந்த சித்ராவின் தொடைகளின் மீது இரண்டு கண்ணீர் வட்டங்கள் விழுந்து



பெரிதாகிக் கொண்டிருந்தது.

ரவி எழுந்தான்.

''உங்களை கும்பகோணத்திலே தேடி விசாரிச்சு, பட்டுக்கோட்டை வந்து சரியான சமயத்திலே சந்திச்சிட்டேன். இத்தனை அவசரத்திலேயும் நான் தெரிஞ்சுக்க விரும்புறேன். சொல்லுங்க மேடம், ஏன், ஏன் என் விஜியை மோசம் பண்ணீங்க?''

அழுகை சற்று அடர்த்தி பெற, உடனே அதை அடக்கி புறங்கையால் துடைத்துச் சொன்னாள். ''சத்தியமா நான் மோசம் பண்ணலைங்க. நான்... நான் ரொம்ப உண்மையா அவரைக் காதலிச்சேன்''

''பின்னே... ஏன்?''

''இன்னொரு பத்து நிமிஷம் நீங்க இங்கே இருக்க முடியும்னா விளக்கமா சொல்றேன் சார்.''

ரவி அமர்ந்தான்.

''சொல்லுங்க. அதுக்கு முன்னால... உங்க டெலிபோனை உபயோகப்படுத்திக்கட்டுமா? பணம் கொடுத்திடறேன்...'' எழுந்து சென்று ரிசீவரை எடுத்து, ''ட்ரங்க் புக்கிங் கொடுங்க சார். ஈஸ் இட் புக்கிங்? 261, கால் டு திருச்சி, 2,3,8,4,9 லைட்னிங் கால்.''

வந்து அமர்ந்தான். அவள் பேசக் காத்திருந்தான்.

''நாங்க எப்படி முதல்ல சந்திச்சோம், ஒருத்தரை ஒருத்தர் விரும்ப ஆரம்பிச்சோம், அதை வெளிப்படுத்திக்கிட்டோம்கிறதையெல்லாம் தாண்டிச் சொல்கிறேன். அவர் என்னை இவ்வளவு தான்னு லிமிட் இல்லாம நேசிச்சார். தினம் தினம் பிரியமான நீயேன்னு துவங்கி ஒரு லெட்டர் எனக்கு வரும். சாப்பாடு, தண்ணி, காத்து, குளியல் எதுவும் தேவையில்லை. சதா சர்வமும் என்னைப் பத்தியே சிந்திப்பார். பேசுவார். எங்க ஒவ்வொரு சந்திப்புலேயும் பிரியறப்போ அழுவார். வாரம் ஒரு தடவை சந்திப்பேன். இத்தனை அன்பா இருக்காரேன்னு பூரிச்சுப் போனேன்.''

''ஆனா நாளாக, நாளாக அவர் ரொம்ப வித்தியாசமா நடந்துக்கிட்டார். ஓவர் பொஸசிவ் ஆயிட்டார். நான் பாங்க் வேலையை ரிசைன் பண்ணிட்டு அவர் பண்ணைக்கு வரணும்னு வலியுறுத்தினார். நாலு, அஞ்சு மணி நேரம் தொடர்ந்து, 'உஸ், எதுவும் பேசாதே'ன்னு சொல்லிட்டு என் முகத்தையே பார்த்துக்கிட்டிருப்பார். மொதல்ல லைட்டா எடுத்துக்கிட்ட எனக்கு போகப் போக கலக்கமாயிடுச்சு.''

''ஒரு தடவை பஸ்ல என்னை உரசிட்டு ஏறினதுக்காக ஒருவனை ரத்தம் வர்ற வரைக்கும் அடிச்சார். ஒரு தடவை என் தொடையிலே ஒரு சின்ன நெருப்புக் காயம் ஏற்பட்டுப் போச்சு. அதை அவர் கிட்டே சொன்னப்போ, உனக்கு வலிச்சா, எனக்கும் வலிக்கணும்னு சிகரெட்டால அவர் தொடையிலே சுட்டுக்கிட்டார். அவருக்கு முன்னாடி ஒரு குழந்தைக்கு நான் முத்தம் கொடுத்தப்போ, அஞ்சு விரலும் பதியற மாதிரி அறைஞ்சுட்டு, 'உன்னோட முத்தங்கள் எனக்கு மட்டும்தான் சொந்தம்'ன்னார். இது மாதிரி நிறைய.''

''ஒவ்வொரு வித்தியாச நிகழ்ச்சிக்கப்புறமும் தேம்பித் தேம்பி அழுது மன்னிப்பு கேட்டார். அவரோட நடத்தைகளால எனக்கு அவர் மேல பிரியம் குறைஞ்சு போய் எரிச்சல் அதிகமாய்டுச்சு. தீவிரமா யோசிச்சுப் பார்த்தேன். குழம்பிப் போனேன். அந்தச் சமயத்திலே என் கல்யாணத்துக்கு வீட்ல ஏற்பாடு செய்ய ஆரம்பிச்சாங்க. மறுபடி மறுபடி யோசிச்சேன். அவர் என்னை அளவுக்கு அதிகமா விரும்பினாலும் என்னால அவரோட ஒரு யதார்த்தமான வாழ்க்கை வாழ முடியும்னு நம்பிக்கை இல்லை. நான் என் வீட்ல எடுத்த முடிவுக்கு சம்மதிச்சுட்டேன்.''

''நான் செஞ்சது துரோகம் இல்லைங்க. என் வாழ்க்கை இன்பமாக இருக்க எடுத்த ஒரு விவேகமான முடிவு அது. விஜிக்கு என் மனசிலே இப்பக்கூட ஒரு இதமான இடம் இருக்கு. தயவுசெஞ்சு என்னைப் புரிஞ்சுக்கங்க.''

ரவி எழுந்தான்.

''என்னால புரிஞ்சுக்க முடியது மேடம். நோ, அது துரோகம் இல்லை. ஆனா அந்த உங்க முடிவுதான் அவன் உடைஞ்சு, ரொம்ப பாதிக்கப்பட்டு இந்தக் கொலையைச் செய்ற வரைக்கும் தூண்டி விட்டுடுச்சு.''

மௌனமாக இருந்தாள்.

''அவரை எப்படியாச்சும் காப்பாத்திடுங்க சார்.''

''நிச்சயமா'' என்று போனை எடுத்து என்கொயரியில் கேட்டான்.

''லைன் அவுட் ஆஃப் ஆர்டர் சார். ரெண்டு மணி நேரமாகலாம்.''

''சரி, கேன்சல் பண்ணிடுங்க'' என்று வைத்து விட்டு, ட்ரே மேல் வைத்திருந்த தன் கர்ச்சீப்பை எடுத்துக் கொண்டான் ரவி. ''நான் புறப்படறேங்க...''



''ஒரு நிமிஷம்''

''சொல்லுங்க...''

''விஜி குணமாகி சாதாரண மனநிலைக்கு வந்தப்புறம் ஒருநாள் என் நிலையை எடுத்துச் சொல்லி, நான் அவருக்குத் துரோகம் செய்யலைன்னு புரிய வைப்பீங்களா?''

''சொல்றேன் மேடம். வர்றேன்...''

ரவி உடனடியாக பஸ் ஸ்டாண்ட் வந்தான்.

★ ★ ★

மூடியிருந்த விழிகளுக்குப் பின்னால் உறக்கம் இல்லாமல் இருந்தான் விஜி.

சிகப்பாய் இமைகளின் நரம்புகளில் ரத்த ஓட்டம் நவீன சித்திரம் போல கொசகொச என எழுந்தது, அலைந்தது, கரைந்தது. மறுபடி மறுபடி புதுப்புது விதங்களில் புறப்பட்டு...

எழுந்து உட்கார்ந்தான் விஜி.

மற்றபடி சாம்பல் இருட்டு.

எழுந்து ஜன்னலுக்கு நடந்து, கம்பிகளைப் பிடித்துக் கொண்டு பார்த்தான்.

நட்சத்திரங்கள் கூட்டணி அமைத்திருக்க... முக்கிய தலைவர்கள் மட்டும் மின்னினார்கள். காற்று அவன் கழுத்தைத் தொடுகையில் சிலிர்த்துக் கொண்டான்.

மேஜை மேல் டேப் ரிக்கார்டர் இருந்தது. எடுத்துக் காதில் அணிந்து கொண்டு இயக்கினான். ராத்திரி புல்லாங்குழல் எங்கோ எடுத்துச் சென்றது. அவனைப் பாசமாய் வருடியது. கன்றுக்குட்டியை நக்குகிற பசுவைப் போல, செவியோரங்களில் தொட்டு எடுக்கும் இறகு முனையைப் போல... உள்ளங்கையில் வைத்த வலுக்கட்டாய ஐஸ் துண்டு போல, முழங்கால் வரை நனைத்து நிற்கும் கடல் சில்லிப்பு போல...

அவனுக்குள் இதமாய் எதுவோ ஒன்று தட்டிக் கொடுக்க... கண்களை மூடிக் கொண்டபோது நிறைந்து போன ஓர் ஓரங்களில் தப்பித்துத் தவழ்ந்தது.

இசை நின்றுபோன போது முகம் இறுகிப் போனது. சாதனத்தை எடுத்து கேஸட்டைத் திருப்பிப் போட முனைகையில்- மின்சார வெட்டு!

உடனடியாய் அந்தப் புல்லாங்குழலின் இசைத் தொடர்ச்சி அவனுக்கு அதிக தேவையாய் இருந்தது. மனசின் தாகம் அதிகரித்துக் கொண்டே போக, பதட்ட நிலையில் கேஸட் நழுவிக் கீழே விழுந்தது. சற்றுத் தள்ளிப் போய் விட்டது கைக்குச் சிக்காமல்.

அறைக் கதவைத் திறந்து கொண்டு போய் நர்சிடம் தீக்குச்சி வாங்கி வரலாம் என்றால் பாவிகள் என் அறையை வெளிப்பக்கம் பூட்டி வைக்கிறார்கள் கைதி மாதிரி.

ச்சை! எதற்காக? நான் என்ன மிருகமா கூண்டுக்குள்ளே அடைத்துப் போட?

எனக்கு இப்போது வெளிச்சம் தேவை.

எனக்கு இப்போது இசை தேவை.

அறைக் கதவு இப்போது திறக்கிற சத்தம் கேட்க... தொடர்ந்து கையில் உயர மெழுகுவர்த்தி தலையில் ஒளிமொட்டுடன் நர்ஸ் உள்ளே வந்து...

''அட, படுக்கையிலே இல்லாம என்ன பண்றீங்க? தூங்கலையா?''

பதில் சொல்லாமல் கேஸட்டை எடுத்துப் போட்டு, காதுக்கு இசை வழங்கிக் கொண்டு, கைகளை கட்டிக் கொண்டு, கண்களை மூடிக் கொண்டு, படுக்கையில் அமர்ந்து கொண்டான்.

''மணி பதினொன்று. தூங்குங்க சார்'' என்று சொல்லி விட்டுப் போனாள் நர்ஸ்.

திரும்பி அவள் போனபோது அறையின் கதவைச் சாத்த மறந்து போனாள்.

**பிரியமான நீயே,**

மஞ்சள் பூசிய மாலையில் அறிமுகமான

அந்தப் பறவையும் நானும் காத்திருந்தோம்.

நீ வரவில்லை. அதனாலென்ன, இன்னும்

காத்திருக்க எத்தனை மாலைகள் இருக்கின்றன!

**பிரியங்களுடன் நானே.**

## 22

சித்ராவின் வீட்டை விட்டு வேகமாகப் புறப்பட்ட ரவி, பஸ் ஸ்டாண்ட் வந்தவுடன், ''மை காட்'' என்றான்.

சாலையின் குறுக்காக இரண்டு பஸ்கள் பாதையைச் சுத்தமாக அடைத்துக் கொண்டு நிற்க, காக்கிச் சட்டை டிரைவர்களும், கண்டக்டர்களும் பரபரப்பாய் இங்கே அங்கே ஓடிக் கொண்டிருந்தார்கள். இப்பக்கமும், அப்பக்கமும் வந்த பஸ்கள், கார்கள் அப்படி அப்படியே நின்று ஹாரன் சத்தத்தை வெளிப்படுத்தின. ஓரமாய் ஒரு பழக்கடையை நெருங்கி, ''என்ன ஆச்சு?'' என்றான் ரவி.

''கார்ப்பரேஷன் வண்டி டிரைவரை கான்ஸ்டபிள் ஒருத்தர் அடிச்சுட்டாரு. அவரு மன்னிப்பு கேக்கற வரைக்கும் எந்த வண்டியையும் எந்த டிரைவரும், கண்டக்டரும் நெருங்கக் கூடாதுன்னு பிரச்னை பண்றாங்க. ஆர்.டி.ஓ.க்கு ஆள் போயிருக்கு. வெளியூர்லேர்ந்து வந்துட்டிருக்கார்.''

''அவர் வந்து பேசி சமாதானம் ஆனப்புறம்தான் வண்டி எல்லாம் போகுமா?''

''ஆமாம். யூனியன் வச்சிருக்காங்களே! இந்த மாதிரி ஒற்றுமையா போராடத்தானே?''

''என்ன சார் இது அநியாயம்? நான் உடனடியா திருச்சி போயாகணும். பிரச்னைகளைப் பேசித் தீர்த்துக்காம பப்ளிக்குக்கு தொந்தரவு கொடுத்தா எப்படி?''

''என்னைக் கேட்டா? சாத்துக்குடி டஜன் எவ்வளவுன்னு கேளுங்க. பதில் சொல்றேன்.''

ரவி வேகமாக நடந்தான், அந்த பஸ்களை எல்லாம் தாண்டி.

''போஸ்ட் ஆபீஸ் எங்கே சார்?''

''நேரா போங்க. பொம்பளைங்க பள்ளிக்கூடம் வரும். அதையும் தாண்டிப் போங்க.''

தாண்டி வந்து, தொலைபேசிப் பெட்டிக்குள் நுழைவதற்கு முன் கிளார்க்கிடம் விவரம் சொல்லி-

''ஸாரி சார். திருச்சி லைன் அவுட் ஆஃப் ஆர்டராம்.''

நகத்தை கடித்துத் துப்பிக் கொண்டு வெளியே வந்தான்.

உடனடியாய் திருச்சி போக வேண்டும். மணி பார்த்தான். ஆறை நெருங்கிக் கொண்டிருந்தது.

இருள் மழை பெய்ய ஆரம்பித்திருந்தது.

காலையில் சித்ராவிடம் பாதித் தகவல்கள் பெற்றுவிட்ட இன்ஸ்பெக்டர் என்ன செய்வார்? ஒரத்த நாடு பண்ணைக்குப் போவார். அங்கேயிருந்து விஜியின் சென்னை விலாசத்தைச் சுலபமாய்ப் பெறுவார்.

அப்புறம்?

சென்னைக்குத் தகவல் தந்து, அந்த விலாசத்தில் விஜியைக் கைது செய்ய ஏற்பாடுகள் செய்வாரா? கைது! கைது செய்கிறவரை சரியான சாட்சியங்கள் இருக்குமா அவர்களிடம்?

இருக்க வேண்டும். நிச்சயமாக விஜிதான் என்ற தீர்மானத்திற்கு வந்து இருக்கிறார்களே!

விஜி சென்னையில் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியாது. திருச்சியில் என் பொறுப்பில் இருப்பது விஜியின் அப்பாவுக்குத் தெரியும்.

மை காட்! நான் உடனடியாக விஜியின் அப்பாவைத் தொடர்பு கொண்டு, சுருக்கமாக விஷயத்தைச் சொல்லி, போலீஸ் வந்தால் விஜி எங்கே போயிருக்கிறான் என்று தெரியாது என்று சொல்லச் சொல்ல வேண்டும்.

ரவி வேகமாய் மறுபடி போஸ்ட் ஆபீசுக்குள் நுழைந்தான்.



''எக்ஸ்க்யூஸ் மீ, இங்கேர்ந்து மெட்ராசுக்கு எஸ்.டி.டி. வசதி இருக்கா?''

''இல்லை சார்.''

''சரி, பரவாயில்லை. ஒரு அர்ஜண்ட் கால் வாங்கித் தர்றிங்களா? நம்பர் சொல்றேன். குறிச்சுக்கங்க.''

ஓரமாய்ப் போட்டிருந்த பெஞ்சில் அமைதி இல்லாமல் தொடைகளை ஆட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ரவி. போனுக்காகக் காத்திருந்தான்.

பத்து நிமிடத்தில் கால் கிடைத்தது.

''ஹலோ மிஸ்டர் சந்திரசேகர் தானே பேசறது?''

''ஆமாம்.''

''நான் ரவி பேசறேன். விஜியோட ஃப்ரண்ட்.''

''என்னப்பா விஷயம்? எப்ப இங்கே வீட்டுக்கு வர்றானாம் உன் ஃப்ரண்டு?''

''சீக்கிரம் வருவான். ஒரு முக்கியமான விஷயம். விவரமா அப்புறம் சொல்றேன். விஜியைத் தேடி போலீஸ் உங்க வீட்டுக்கு வரும். விசாரிக்கும். பத்து நாளைக்கு முன்னாடி கோபமாக புறப்பட்டுப் போனான், எங்கே போனான்னு தெரியாது. இதுமாதிரி போறது, திரும்பி வர்றது சகஜம் அப்படின்னு சொல்லுங்க. விஜி திருச்சியிலே என் பொறுப்பிலே இருக்கான்ற தகவலைச் சொல்லிடாதீங்க.''

''என்ன... என்னப்பா சொல்லறே நீ? போலீஸா? என்ன செஞ்சான் இவன்? மனுஷனை நிம்மதியா இருக்க விடமாட்டான் போலிருக்கே... யாரையாச்சும் அடிச்சுப் போட்டுட்டானா?''

''பெரிய விஷயம். நான் விபரமா உங்களுக்குத் தபால் எழுதறேன். இல்லைன்னா முடிஞ்சா நீங்க புறப்பட்டு திருச்சி வாங்க. வர்றீங்களா?''

''திருச்சி வர்றதா? இந்தத் தண்டப் பயலுக்காகவா? எத்தனை என்கேஜ்மெண்ட்ஸ் இருக்கு எனக்கு! போலீஸ் வந்தா அவன் என்ன ஆனான், எங்கே போனான்னு எதுவும் தெரியாதுன்னு சொல்லணும். அவ்வளவுதானே? சொல்லிடறேன். இவனைப் பிள்ளையாப் பெத்ததுக்கு எனக்கு ஒரு பிரயோசனமும் இல்லை. அட,

என்னதான்பா செஞ்சான்? சுருக்கமா சொல்லேன்...''

''போன்ல சொல்ல முடியாது சார்.''

''அப்ப தபால் எழுது. நான் புறப்பட்டு வர்ற மாதிரி இல்லை. வச்சுடவா?''

வைத்து விட்டு, பணம் தந்து, ரசீது வாங்கி கிழித்துப் போட்டு விட்டு நடந்தான் ரவி.

ரவி, பஸ் ஸ்ட்ரைக் முடியக் காத்திருந்தான்.

திருச்சி போன உடன் ஒரு காரியம் செய்ய வேண்டும்.

★ ★ ★

உறக்கத்தில் இருந்த பார்த்திபனை வலுக்கட்டாயமாக எழுப்பியது டெலிபோன்.

போர்வையை ஒதுக்கி எழுந்து, மேஜை மீது கைக்கடிகாரத்தின் ரேடிய முட்களில் கண்களைக் குறுக்கி 11:10 என்பதைப் பார்த்துவிட்டு, கொட்டாவியை மென்றுவிட்டு ரிசீவரை எடுத்தான்.

''ஹலோ...''

''ஹலோ டாக்டர், நான் ஆஸ்பத்திரியிலேர்ந்து ஹெட் நர்ஸ் பேசறேன்.''

''என்ன விஷயம்?''

''உங்க ஸ்பெஷல் பேஷண்ட் விஜியை அறையிலே காணலை.''

''வ்வாட்? ராத்திரிகள்ல ரூமை வெளிப்பக்கம் பூட்டச் சொல்லியிருந்தேனே?''

''கரண்ட் கட் ஆனப்போ உள்ளே மெழுகுவர்த்தி ஏத்தி வச்சுட்டு, நர்ஸ் திரும்பினப்போ, கதவைப் பூட்டாம வந்துட்டா. அதைப் பார்த்துட்டு நான் பூட்டப் போனேன். பூட்றதுக்கு முன்னாடி உள்ளே எட்டிப் பார்த்தேன். படுக்கை காலியா இருக்கு. இல்லை அவர்.''

''என்ன வேலை பார்க்கறீங்க நீங்க எல்லாம்? இப்போ ராத்திரி பதினொண்ணே காலாகுது. அந்த விஜி வெளியிலே போனது டேன்ஜரஸ் விஷயம். சுத்துப்புறங்களிலே பாருங்க. ஆளை அனுப்புங்க. நான் இதோ புறப்பட்டு வர்றேன்.''



விஜி நடந்து கொண்டிருந்தான்.

காதுக்குள் நுழைந்து புல்லாங்குழல் இசை நரம்புக்குள் ஊடுருவிக் கொண்டிருந்தது.

★ ★ ★

திருச்சியில் பஸ் நின்றபோது இரவு மணி 11.15

அவசரமாய் இறங்கின ரவி, ஆட்டோ பிடித்தான்.

நேராய் பார்த்திபன் வீட்டிற்கு வந்தான். வீடு பூட்டியிருந்தது. உள்ளே கார் இல்லாததைக் கவனித்தான். ஆட்டோவை பார்த்திபனின் ஆஸ்பத்திரிக்குப் போகச் சொன்னான்.

அந்த ஆட்டோவைத் தொடர்ந்து இன்னொரு ஆட்டோவும் போனது.

★ ★ ★

விஜி நடந்து கொண்டிருந்தான்.

புல்லாங்குழல் அவனுக்கு உள்ளே ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தது.

★ ★ ★

ஆஸ்பத்திரியின் வாசலில் இறங்கும் போதே உள்ளே அத்தனை விளக்குகளும் எரிந்து கொண்டிருக்க, நர்ஸ்கள் பரபரப்பாய் ஓடிக் கொண்டிருந்தது தெரிந்தது.

ரவி உள்ளே போனான்.

பார்த்திபனின் கார் நின்று கொண்டிருக்க, அருகில் கலைந்த தலையுடன், ஒரு கையால் நெற்றியைப் பிடித்துக் கொண்டு இரண்டு மூன்று பேரிடம் உத்தரவுகள் சொல்லிக் கொண்டிருந்தான் பார்த்திபன்.

''என்ன பார்த்தி? என்ன விஷயம்?''

''வா, வா ரவி. நர்ஸ் ஒருத்தி கொஞ்சம் கவனக்குறைவா இருந்துட்டா. விஜியோட ரூமைச் சாத்த மறந்துட்டா. இவன் எங்கேயோ வெளில போய்ட்டான். அதான் தேடச் சொல்லியிருக்கேன்.''

''அடப்பாவி! நானே எத்தனை பெரிய அதிர்ச்சியோட வந்திருக்கேன். இங்கே இன்னொரு அதிர்ச்சியா?''

''விஜி கிடைச்சுடுவான். சாதாரணமாத் தெருமுனை வரைக்கும் நடந்து போய்ட்டு வரலாம்னு அவன் போயிருக்கலாம். சொல்லு. என்ன அதிர்ச்சி?''

''போலீஸ் விஜிதான் செஞ்சதுன்னு கண்டுபிடிச்சிட்டாங்க. விஜியோட மெட்ராஸ் அட்ரஸ் அவர்களுக்குக் கிடைச்சாச்சு. ஆனா திருச்சிக்கு அவங்க வர முடியாது. நான் விஜியோட அப்பாவுக்குத் தகவல் கொடுத்துட்டேன்.' என்றான் பதட்டமாய் ரவி.

''ஆனாலும் போலீஸ் கொஞ்சம் திறமையானவங்க மிஸ்டர் ரவி'' என்றது குரல்.

இருவரும் திரும்பிப் பார்க்க... இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி சிரித்துக் கொண்டே அவர்களை நெருங்கினார்.

''ஐயாம் கிருஷ்ணமூர்த்தி, இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ், மாயவரம். விஜி கேஸைத் தீவிரமா எடுத்துக்கிட்டவன். விஜியோட காதலி சித்ராவைக் கண்டுபிடிச்சவன். பேசினவன். மறுபடி சித்ராவைச் சந்திக்க வந்தப்போ சித்ரா எதுவும் தெரியாதுன்னு சொன்ன பதிலை வாங்கிக்கிட்டவன். ஆனா கதவு திறந்த கொஞ்ச வினாடிகள்ல புது ஷூ ரெண்டு கிடக்கிறதைப் பார்த்தவன். வீட்டை விட்டுப் போறது மாதிரி போய் திரும்பி வீட்டு வாசலுக்கு வந்து நின்னு நீங்களும் சித்ராவும் பேசினதைக் கேட்டவன், அப்புறம் நீங்க சித்ரா வீட்டை விட்டுப் புறப்பட்டதிலேர்ந்து உண்மையான நிழல் மாதிரி தொடர்ந்து வந்தவன். உங்களைச் சந்திக்கிறதிலே சந்தோஷம் மிஸ்டர் ரவி'' என்று கையை நீட்டினார் கிருஷ்ணமூர்த்தி.

ரவியும் பார்த்திபனும் அதிர்ந்து நிற்க...

★ ★ ★

விஜி அந்தப் பெட்டிக்கடையை நெருங்கினான். கடைக்காரன் தோளில் துண்டுடன் தூக்கத்தைப் பத்து நிமிடத்திற்கொரு முறை ஓத்திப் போட்டுக் கொண்டிருந்தான், வாய்க்கு முன்னால் சொடக்குப் போட்டபடி. விஜி கடை முன் வந்து நின்றான்.

புருவங்களை அசைத்து, ''என்ன வேண்டும்?'' என்றான் கடைக்காரன்.



விஜி சிகரெட்டைக் காட்டினான்.

ஒரு பாக்கெட் எடுத்து நீட்ட... அதிலிருந்து ஒன்றை மட்டும் எடுத்து வாயில் வைத்துக் கொள்ள... கடைக்காரனே தீப்பெட்டியில் தீ தயாரித்துப் பற்ற வைத்தான்.

விஜி பைக்குள் கையை விட்டு ஒரு பத்து ரூபா நோட்டை எடுத்துப் போட்டான்.

அவன் கல்லாப்பெட்டியில் இருந்து பாக்கி சேகரித்து நிமிர்ந்த போது... விஜி ரொம்ப தூரத்தில் நடந்து கொண்டிருந்தான்.

புல்லாங்குழல் நெஞ்சுக்குள் ஐஸ் நீரைத் தெளித்துக் கொண்டிருந்தது.

★ ★ ★

பார்த்திபனின் அறைக்குள் கிருஷ்ணமூர்த்தி, ரவி, பார்த்திபன் அமர்ந்திருந்தார்கள்.

''எங்களுக்குக் குற்றவாளி தெளிவானாலும் குற்றத்துக்கான மோட்டிவ் புரியாம இருந்தது. இப்போ அதுவும் கிளியர் ஆயிடுச்சு. டாக்டர், நீங்க படிச்சவர். ஒரு குற்றவாளியை இப்படி சட்டத்துக் கிட்டேர்ந்து மறைச்சு வைக்கலாமா?''

ரவி கோபமானான்.

''இன்ஸ்பெக்டர், நான் சொல்றேன். விஜி குற்றவாளி இல்லை.''

''அஃப்கோர்ஸ், அவருடைய மனவியாதிங்கறீங்க. அப்படியா?''

''இல்லை. என்ன ஆதாரம் இன்ஸ்பெக்டர்? அவனை உங்களால கைது செய்ய முடியாது. அவன்தான் கொலை செஞ்சான்னு உங்களுக்கு என்ன சாட்சியங்கள் இருக்கு?''

''இது மாஜிஸ்ட்ரேட் கேக்க வேண்டிய கேள்வி. நான் உங்களுக்குப் பதில் சொல்லத் தேவையில்லை. மிஸ்டர் பார்த்திபன், உங்க டெலிபோனை உபயோகப்படுத்திக்கிறேன். உங்க ரெண்டு பேரையும்கூட நான் நிறைய விசாரிக்கணும். கொலைக் குற்றவாளிக்கு அடைக்கலம் தர்றது எத்தனை பெரிய அஃபென்ஸ் தெரியுமா?''

''விஜி குற்றவாளி இல்லை.''

''அதை கோர்ட் தீர்மானிக்கட்டும். அதுவரைக்கும் பேச வேணாம். மிஸ்டர் பார்த்திபன், உங்க நண்பர்கள் விஜியைக் கண்டுபிடிச்சு அழைச்சுக்கிட்டு வந்ததும் என் கிட்டே ஒப்படைக்கறீங்க'' என்று கூறி விட்டு டெலிபோனின் டயலைச் சுற்ற ஆரம்பித்தார் கிருஷ்ணமூர்த்தி.

★ ★ ★

விஜி பாலத்தின் இந்தப் பக்கம் ஒரு காலும் அந்தப் பக்கம் ஒரு காலும் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டான்.

கீழே காவிரியின் வெள்ள ஓட்டத்தில் நிலவொளி தட்டுத் தடவி அங்கங்கே மின்ன வைத்துக் கொண்டிருந்தது.

புல்லாங்குழல் இசை புகையைப் போல மனமெங்கும் பரவி அலைந்தது. கண்களை மூடிக் கொண்டான் விஜி.

சிகரெட்டின் நெருப்பு, சாம்பல் சுமந்து கொண்டு விரலுக்குக் கிட்டே கிட்டே வந்தது.

★ ★ ★

''நான் எல்லாத்தையும் சொல்றேன் இன்ஸ்பெக்டர்'' என்றான் பார்த்திபன்.

''பார்த்தி, வேணாம். விஜி எதுவும் செய்யலை. அவங்க கிட்டே எந்தத் தடயமும் இல்லை.'' என்றான் ரவி.

''உளறாதே ரவி. இதுதான் எல்லை. நான் சொல்றேன். விஜிக்கு ஸ்கிஸஃப்ரேனியாங்கற மன வியாதி. அதுக்குக் காரணம் பல. சின்ன வயசிலேர்ந்து மனசிலே தான் நிராகரிக்கப்படறோம்ங்கிற எண்ணம் படிஞ்சு போய்டுச்சு. சின்ன வயசிலேயே அம்மாவை இழந்துட்டான் இவன். அன்பைப் பொழிஞ்ச அம்மாவை, அப்பா கொடுமைப்படுத்தினதாலே அப்பா மேல வெறுப்பு. அப்பாவுக்கும் இவன் மேல பாசம் கிடையாது. ஹாஸ்டல் வாழ்க்கை, நண்பர்கள்னு ஒரு பிடிப்பு இல்லாத வாழ்க்கை. எப்பவும் அன்புக்காக ஏங்கின மனசு. அந்தச் சமயத்திலே ஒரு காதல். அந்தப் பெண் மேல அளவுக்கதிகமான அன்பு செலுத்தினான். அந்தப் பெண்ணும் இவனை ஆரம்பத்திலே காதலிச்சு அப்புறம் ஏனோ விலகிட்டா உறுதியா.



நூலகம் சென்னை - 49

அதிலே இவன் கொலாப்ஸ் ஆனான். மாய்வுரத்திலே நடந்த குற்றத்தை இவனை செய்யத் தூண்டினது இவன் வியாதிதான்...''

வாசலில் ஜீப் வந்து நிற்க, ஒரு இன்ஸ்பெக்டரும், சில கான்ஸ்டபிள்களும், பின்னால் திருச்சி டி.எஸ்.பி.யும் வந்தார்கள்.

★ ★ ★

கேஸட் முடிந்தது.

சிகரெட்டின் நெருப்பு, சாம்பல் சுமந்து கொண்டு விரலுக்குக் கிட்டே கிட்டே வந்தது.

ரு-100/—

இசை நின்றுபோன உடனே நெற்றியோர நரம்புகள் புடைக்க பரபரப்பாய் கேஸட்டை டேப்ரிக்கார்டரிலிருந்து வெளியே எடுத்து திருப்புகையில்...

59390/6362734

சிகரெட் சுட்டது.

'ஆ'வென்று உதறினபோது கேஸட் நழுவிக் கீழே ஓடும் ஆற்றில் விழுந்து வினாடிகளில் மறைந்தது.

விஜியின் உதடுகள் உரக்கத் துடித்தன. எதிலிருந்தோ கீழே விழுபவன்போல உணர்ந்தான். மூளைப் பூரா பூச்சி பறந்தது.

'என்னை விட்டு எல்லாமே போகின்றன. எல்லாமே! எல்லாமே!'

'அவள் போனது இருக்கட்டும். சனியன், மூதேவி, நாய், நீ ஏன் அம்மா போனாய் என்னை விட்டு? ஏன் போனாய்? எங்கே போனாய்? எதற்காக என்னைத் தவிக்க வைக்கிறாய்?'

'சொல்லு. நீ எங்கே இருக்கிறாய்? என்னை அணைத்துக் கொள். நெற்றியில் முத்தமிடு. மார்பிலே தட்டிக் கொடு. நானிருக்கேன்டா கண்ணா என்று கையை கெட்டியாய்ப் பிடித்துக் கொள்.'

'எங்கே இருக்கிறாய் அம்மா? அம்மா... அம்மா... அம்மா...'

விக்கி விக்கி அழ ஆரம்பித்த விஜி கீழே ஓடிக் கொண்டிருந்த ஆற்றையே பார்த்துக் கொண்டிருக்க...

★ ★ ★

போன அத்தனை பேரும் திரும்பி வந்து, ''காணலை சார்'' என்றார்கள்.

பார்த்திபன் கைகளைப் பிசைந்தான்.

''வழக்கமா அவன் எதாச்சும் இடத்துக்குப் போவானா?'' என்றார் எஸ்.பி.

''வெயிட்! அவனுக்கு இன்ட்ரஸ்ட் உள்ள இடம் காவேரி ஆத்துப் பாலம். தினம் காலையில வாக்கிங் அழைச்சுக்கிட்டுப் போவேன். 'இந்த இடத்தை நான் காதலிக்கிறேன்' அப்படிம்பான். ரூமிலே நான் கொடுத்த டேப்ரிக்கார்டர் இல்லை. ஒரு அமைதி வேணும்னு அங்கே போயிருக்கலாம்'' என்றான் பார்த்திபன்.

''பார்த்துடலாமே...''

ஜீப்பில் அவர்கள் புறப்பட்டார்கள்.

★ ★ ★

அத்தனை நட்சத்திரங்களும் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தன. பாலத்தின் மேல் வாக்மேன் டேப்ரிக்கார்டர் அனாதையாகி யிருந்தது.

விஜிக்கு நீந்தத் தெரியாது.

(முற்றும்)

இரண்டு பேருக்கு என் இதய நன்றிகள்:

1. இந்த நாவலுக்கு அழகான தலைப்பை சிபாரிசு செய்த தோழி **பா.விமலாவுக்கு.**

2. மனநோய் சம்பந்தமான புத்தகங்களைச் சிபாரிசு செய்து, நிறைய விவரங்கள் வழங்கிய தஞ்சை டாக்டர் **டி.ஆர்.கோவர்த்தனன், எம்.பி.பி.எஸ்., டி.பி.எம்.** அவர்களுக்கு.

**-பட்டுக்கோட்டை பிரபாகர்.**